217
3 — 1902
92 MAR 5
97093

ஸ்ரீ [illegible]

[illegible]

[illegible] நாடகம்.

இஃது

[illegible]

மு - [illegible] ஐயரவர்கள்

[illegible]

[illegible]

[illegible] மேற்படி [illegible]

ஸ்ரீ - [illegible]

ஆசாரிய [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] முத்துசாமி [illegible]

அவர்களால் [illegible]

[illegible] புத்தகஷாப் வைத்திருக்கும்

[illegible] முதலியாரவர்கள்

வேண்டுகோளின்படி.

சென்னை

[illegible] அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

௧௯0௧

Registered Copyright.

([illegible])

97093

உ

ஸ்ரீ தண்டபாணி துணை.

பதிவிரதா சிரோன்மணியாகிய

சதாரம் நாடகம்.

இஃது

புதுவைத்தலத்திலிருக்கும்

முத்தப்பாசாரியாரவர்கள்

கனிஷ்ட புத்திரரும்.

தமிழ்ப் பண்டிதரும்

[illegible]

வே - மௌனகுரு [illegible]

ஆசாரியர் [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

வே - முத்தாசாரியார்,

அவர்களால் இயற்றப்பட்டு

[illegible]

த. சரவண முதலியாரவர்கள்

வேண்டுகோளின்படி

சென்னை:

ஸ்ரீ பத்மநாபவிலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1901.

Registered Copyright.

(முதற் பதிப்பு.)

REGISTERED 16 SEP

விலை அணா - [illegible]

உ

ஸ்ரீதண்டபாணிதுணை.

விளம்பரம்.

இதனை யன்பர்கள் யாவருக்குந் தெரிவிப்ப தியாதெனில், இச் சதாரம சரிதையை அநேக ட்ராமாக் கம்பேனியார்கள் நடித்துவந்தது ம் புத்தகரூபமா யிதுவரை யச்சிடாதிருந்ததை யுத்தேசித்து (ஜாவளி இந்துஸ்தானி கீர்த்தனை ஒந்திராபா கீர்த்தனை ரோட்டு ட்ராமாத்தரு நாடகத்தரு) இன்னுஞ்சில சில்லரைப்பாட்டுகள் முதலான நூதன விசித்திர வர்ணமெட்டுக்களால் தருக்களியற்றி அதற் கமைதியாய் வசனங்க ளமைத்து (சதாரம்நாடகம்.) என நாமகரணஞ் சூட்டி யச்சிட்டு 1867 ஹூ த்திய 25-வது ஆக்ட்டு, 20-வது பிரிவு, 6-வது, விதியின்படி கவர்ன்மெண்டில் ரிஜிஸ்டர் செய்து (ஆல்ரைட் ரிஸர்வேட்) என்னுஞ் சுதந்தரம் பெற்றிருக்கிறேனாதலின் இப் புத்தகத்தை யெனது னுமதியின்றி யாவரேனும் அச்சிடுவார்களாயிற் கோர்ட்டார் மூலமாய் மேற்படி சட்டத்தி னதனால் னேரிடும் நஷ்டத்தை வசூலிக்கப்படு மென்பதை யிதன்மூலமாய்க் கண்டிப்பா யறிவிக்க லாயிற்று.

இப் புத்தகமும் இன்னும் என்னாலியற்றிய (மனோரஞ்சிதநாடகம் புஷ்பவிலாசநாடகம்) முதலான புத்தகங்களுந் தேவையானவர்கள் சென்னை பெத்துநாய்க்கன் பேட்டையைச் சேர்ந்த திருப்பள்ளித் தெரு 1-வது, ௧௩, வீட்டில் ஸ்தாபித்திருக்கும் ஸ்ரீபத்மநாப விலாச அச்சுக் கூடத்தலைவர், இட்டா - பார்த்தசாரதி நாயுடு அவர்க ளிடத்திலும் திண்டுக்கல் கடைவீதியில் புத்தகஷாப் வைத்திருக்கும் த, சரவண முதலியா ரவர்களிடத்திலும், பழனியிற் புத்தகஷாப் வைத்திருக்கும் க-ச, சர்க்கரைக்கனி ராவுத்த ரவர்க ளிடத்திலும், என்னிடத்திலும், மற்றும் அந்தந்தவூர்ப் புத்தகஷாப்புகளிலும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

இங்ஙனம்

ஸ்ரீ வே - முத்தனாசாரி.

ஸ்டேஜ்மானேஜர்.

S, S, S, ... கம்பேனி.

பழனிநகரம்.

உ

ஸ்ரீதண்டபாணிதுணை.

சாற்றுக்கவிகள்.

முறையூர். ம-அ-அ-ஸ்ரீ,

பழனி - சி. சண்முகஞ்செட்டியாரவர்கள்

சமூகவித்துவான்

கொட்டாம்பட்டி

M. கருப்பையாப்பாவலர்

அவர்களாலியற்றியது.

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

னமெட்டினையுநடைக்கொவ்வா துமனமுமலைபுயங்கண்ணைமயிலேபோ
ருங்கண், கன்னமெட்டுமொழிரசதாரமெனுமுயர்கற்பரசிகதைதனைபல்ல
ன்னமெட்டுநூதனமாய்ப்பலவமைத்துநாடகமாய்வழங்கினன்வீற், ப
னமெட்டுந்திசையுமுறைப்பழனிவளர்முத்தையனென்பாவலோனே.

பெரியகுளந்தாலூகா கோம்பையில் வசிக்கும்

சின்னப்பகவுண்டரவர்கள் குமாரர்

க. திருமலைச்சக்கய் கவுண்டர்

அவர்களாலியற்றியது.

(எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

எங்கணுமாய்நிறைந்தசிவபரம்பொருளையுணர்ந்தோர்
இறைஞ்சுவரோபலபேததெய்வங்கடம்மை
தங்கவுயிரினிதளிக்குஞ்சஞ்சீவிபெற்றோர்
தராமரம்பன்மருந்துகளைத்தாமருந்துவரோ
துங்கசபாரஞ்சிதவேழுத்தையாவிற்றுந்து
சுகுணசதாரநாடகங்கற்றோர்கேட்டோர்
பொங்கிரும்புவியினிடைபிறிதோர்நாடகத்தைப்
புகலுவரோகேட்பாரோபுவினர்களம்மா.

சாற்றுக்கவிகள்.

சிவகாசியில் வசிக்கும்
கல்யாணசுந்தரக்கவிராயர்
அவர்கள் குமாரர்
க. கந்தசாமிக்கவிராயர்
அவர்களாலியற்றியது.

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

கற்பினுக்கோராசியெனுமருந்ததியுங்கண்டுமனங்கலங்கினான
கற்புகளைப்படைத்தபதிவிரதைசதாரத்தினதுநடத்தையாவும்
அற்புதச்செந்தமிழாலோர்நாடகமாயிசைத்தருமையனைத்தும்பெற்றான்
விற்பனத்தில்மிகுந்ததிருப்பழனிநகர்முத்தையவேந்தன்றானே.

சாற்றுக்கவிகள்
முற்றிற்று.

ஸ்ரீ வே. முத்தனுசாரியார்.
ஸ்டேஜ் மானேஜர்.
S. S. S. N. கம்பெனி.
பழனிஸ்தலம்.

உ

ஸ்ரீதண்டபாணிதுணை.

சதாரம் நாடகம்.

காப்பு-வெண்பா.

கற்புக்குருந்ததியாம் கன்னிகைசதாரத்தின்
நற்புகழைச்செந்தமிழால் நாடகமாய்ச் - செப்புதற்கு
அந்தரர்கள்வந்துதொழும் யானைமுகத்தானுபய
சுந்தரவிந்தபதங் காப்பு.

கணேசஸ்தோத்திரம்.
இஜர்மதோஹைஜானி இஜர்மதோஹை
என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.
இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-சாபு.

பல்லவி.

வரமருள்வாயேதேவா-வரமருள்வாயே

அநுபல்லவி.

சரதஞான வரதமேனகல் (வர)

சரணங்கள்.

அரியதோகையமா கரியதேன்வடை
அதிரசவர்க்கபோஜன
இருதயாசனதாச , திருதயாசன
சரதஞான வரதனோகல் (வர)

மாகனதன — வல்லமைந்தனே
மருவிடகிறுமோகனு
ஆறுவாகனு-மழி — லாகுவாகனு
சாதஞான — வாதனேநல் (வீர)
கந்தவேளுக்கு — மூர்த்தியுதித்த
தந்திமாமுகத்தையனே
ஐந்துகையனே-வளை — ரைந்துகையனே
சாதஞான — வர்தனேநல் (வீர)
பத்தியுடனே — முத்தையன்றுதி
பங்கயமலர்ப்பாதனே
சத்யபோதனே-சதா — சத்யபோதனே
சாதஞான — வாதனேநல் (வீர)

சரஸ்வதிஸ்தோத்திரம்.

அன்னையேநானுன்னைநம்பினேனெனக்கருள்புரிகுவாய்
என்றகீர்த்தனையின்வர்ணமெட்டு.
இ-ம-கமாஸ்-தாளம்-ரூபகம்

பல்லவி.
மைந்தன்மீதுசிந்தைகூர்ந்து வந்தருள்கலைவாணியே

அநுபல்லவி.
சந்ததமுனை — வந்தனைசெய்தேன்
கந்தமாமலர்வேணியே (மைந்)

சரணங்கள்.
கோரியபடி — காரியங்களை
கூடவாமுந்தருகுவாய்

நீசியுடன் — மதுரகவிதை
செப்பக்கருணைபுரிகுவாய் (மைந்)
தேவர்கள்முதல் — யாவரும்புகழ்
செந்தமிழ்க்கடலன்னமே
ஆவலுடனே — பாவலர்களுக்
கருள்புரிந்திடும் சொர்ணமே (மைந்)
சத்தியுடைய — தெய்வமான
தவளகமலாசனி
பத்தியுடனே — முத்தையன்றுதி
பங்கஜவிலோசனி (மைந்)



சத்தியபுரிக்கிறைவனுகிய
சாரங்கதரமகாராஜாவின்
முதலாவது சபை.

விருத்தம்.

பூசுரர்மறைகள்பாடப் புலவர்கள்விரியோடத்
தேசமெண்டிசைகொண்டாடத் திகழ்மதிக்குடைகனிடத்

நாரிகளுடனமாடச் சாரங்கதரன்தராஜன்
மாளிகைக்கொலுவைகரை மகிழ்வுடன்வருகின்றனே.

கொலுத்தரு.

வேதயவத்தெநூ-சிற்குணதோரபு
என்ற இந்தஸ்தாவின் வர்ணமெட்டு.

இ-ம்-பியாகு-தாளம்-ஆதி

பல்லவி.

சாரங்கதரன்தமா ராஜன்கொலுவந்தான்

அநுபல்லவி.

பாருப்புகழ் — அணிமுடிதிகழ் (சார)

சரணங்கள்.

வேதியரெவரும் — வேதகான்பாட
மாதர்கள்வெண்சா — மரையசுபோடச் (சார)
திங்களைநிருவைடைகள் — செசின்மேல்மே
மங்கையர்பாத — வகைபுடைருடச் (சார)
வின்னவர்பரியாய் — விசையைத்தூவ
மன்னவர்கண்டு — மகிழ்வுற்பேசச் (சார)

சாரங்கதரன்தமகாராஜன் கடவுளைப்போற்றுதல்.

விருத்தம்.

அந்தார்முனிவர்போற்றுமம்பிகைபாகபோற்றி
கந்தனையீன்றெடுத்த கன்னிவேணியனேபோற்றி
மந்திரமறைகளோன்றும் வருத்தமேயப்பொருளேபோற்றி
சுந்தரமேவிவீரனாருஞ் சம்புவேபோற்றிபோற்றி.

(சாரங்கதரன்தமகாராஜன்சொல் வசனம்) காவலாஏற்றசே வகன்யாவன்;

(சேவகன் வசனம்) பாத்திபா அடியேன் காத்திருக்கின்றேன்.

சாரங்கதரன்தமகாராஜன் சொல்தரு.

வந்தனந்தந்தேனென்னுடைய வந்தனந்தந்தேன்
என்ற டாமாத்தருவின் வர்ணமெட்டு.

6

இ-ம்-பியாகு-தாளம்-ஆதி

பல்லவி.

எனதுசேவகாபிரதானின்றுமேன்வல்லே

அநுபல்லவி.

என்னகா — ரணமடா (எனது)

சரணங்கள்.

வீட்டிலிருப்பார் — விளைவாய்ப்போடா
கூட்டிக்கொண்டுநீ — குணமாய்வாடா (எனது)

(சா-வ-ம்) அடாசேவகா யானந்தப்புரத்தைவிடுத்து இந்தக்கொலுவை யடைந்துவருஞ் சந்தர்ப்பத்திற்கு முன்னதாகவே வந்து வழிமேல் விழிவைத்து என்வரவுக்கெதிர்பார்த்திருந்து வந்தபின் அருகாசனத்திற் சரியாகவிற்றிருந்து சிந்தைக்கிசைந்தமந்த்ராலோசனை எடுத்துப்போதிக்கத்தகுந்த தந்த்ரானுபவத்தை யறிந்த மந்த்ரியானவர் இதுவரை வாராத அதிசயமயாது.

(சேவ-வ-ம்.) யாதுகாரணமோ பேதையானறியேன்மகாராஜ்.

(சார-வ-ம்) விரைவிலிற்சென்று பரிவுடனழைத்து வருவாயாக.

(சேவ-வ-ம்.)செப்பியபடியேயிப்பவேயழைத்துவருகின்றேன் மகாராஜ்.

மந்திரிராஜசபைக்குவந்துசொல்-தரு.

வந்தனந்தந்தேனே வந்தசபையோர்க்கும்
என்றடாமாத்தருவின்வர்ணமெட்டு.

இ-ம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

மந்திரிபுங்கானே வந்தனஞ்செய்தேனே
வையமெண்டிசையோர்துதிசெய்யுமெங்கள்கோனே

அநுபல்லவி.

சந்ததமுந்திரு
வளர்சமுகா
சுந்தரசந்திரனே
கிருக்குமுகா (மந்)

(மந்திரிசொல் வசனம்.) விஸ்வாவர் போற்றும் அரசர்களிலே மந்திரி வந்தனம் புரிகின்றேன்.

(சார-வ-ம்.) கல்யாணப்ரதான் கிரேஷ்டா சேமமிருக்கிறதா ஆசனத்தமரும்.

(மந்-வ-ம்.) சாந்தியமுடனே வீற்றிருக்கின்றேன் மகாராஜ்.

(சார-வ-ம்) ஹேப்ரதான் சிரேஷ்டா யானெப்பொழுது மிந்தப் பொற்கொலுவைநாடி வருகின்ற முன்னமே தாம்வாறு யாவர்க்கப்புரத்தை விடுத்து வருஞ்சுத்தப்பமான வாயுக்கு வழியே ல் வீதிகைத்தெதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கக்கூடியவர் நீவிர் அவ்வாறு காலதாமதமாகி வந்தகாரணம் யாதப்ரதான்.

(மந்-வ-ம்.) மகாராஜ் பாருங்கள் யானின்று ப்ராதக்காலத்தி லெழுந்து நமது நந்தனவனத்திற்குச்சென்று ஆங்குற்ற (மல்லி கை-முல்லை-இருவாக்ஷி-சண்பகம்-ரோஜா-சந்திரவர்த்தம்-செவ்வந்தி-செவ்வந்தி-பாரிஜாத) முதலிய புஷ்பஜாதிகளுக்கு நீர்பாய்ச் சும்படி வேலைக்காரர்கட்கு கட்டளையிட்டு சத்தியாவந்தனாதி ஜபமியமங்கள் முடித்துக்கொண்டு இல்லத்திற்சென்று அநுசந்தி அப்பாலிவண் ப்ராப்தமாவதற்கு இவ்வளவு காலதாமதமிட்டது, அக்குற்றத்தை க்ஷமித்தல்வேண்டும் மகாராஜ்.

(சார-வ-ம்.) ஆ-அப்படியா யானதைப்பற்றி யாதொரு ஆக்ஷேபத்தை யடைந்ததுமில்லை.

(சாரங்கதரன்மகாராஜன் சொல்-தாவளி.)

யோகமுனிதனையோ முக்குணபேட்டோரனுசாமி

என்ற தாவளியின் வர்ணமெட்டு.

இ-ம்-தோடி-தாளம்-ரூபகம்

பல்லவி.

தேசவிசாரணை செய்யச்

சித்தமாயிருக்கின்றேன் மந்திரி

அநுபல்லவி.

காரியங்களினைதென்று
காவிலிதனில்நடக்குங்
யோசனைதனில்நீங்கேயுண்மைசொல்லுவீரேயின்று (தே)

(சார-வ-ம்.) ஹேப்ரதான் பாரும் எனக்கிந்தச்சிம்மாதனங்கிடைக்கப்பெற்றதானது எனது முன்னோர்கள் செய்த பூஜாபலமோ அல்லது யான்செய்த மாதவமகிமையோ தெரிந்திலேன் ஆதலின் எப்பொழுதோராசன் சிம்மாதனத்திற்கு ப்ராப்தமானானோ அப்பொழுதே யவனது ராஜ்யத்திலுள (ப்ராம்ம-க்ஷத்திரிய-வைஸ்ய-சூத்ரரென்னும்) சதுர்வர்ணச்ராமத்தார்களுடைய இரி வாசயாதி யொழுக்கங்களைப்பற்றி விசாரிக்கவேண்டுவது அவ்வரசனுக்குரிய முக்யமானகடமையாயிருப்பதால் இப்பொழுதியானின்றுதொட்டு தேசவிசாரணை செய்யவேண்டுமென்ற ப்ரீதியுடைத்தவனாயிருக்கின்றேனாதலின் உமதபிப்பிராய மெவ்வாறெனத் துரிதமாகத் தெரிவிப்பீராக.

(மந்-வ-ம்) மகாராஜ் பாருங்கள் எப்பொழுதோ ராசன் தேசவிசாரணை செய்யத்துவங்குகின்றனரோ அப்பொழுதே என்னைப்போன்ற மந்திரிகள் உலகத்தில் நடக்கும் சகல விசேஷங்களைப்பற்றிப் பதிலுத்தரங்கூறத் தயாராயிருப்பார்களென்பது தங்களுக்கு நன்றாய்த் தெரிந்தேயிருக்கும் அங்ஙனமிருக்க என்னை எதற்காக அபிப்பிராயங்கேட்க வேண்டும்மகாராஜ்.

(தேசவிசாரணைத்தரு.)

பன்னகசயனனே - பங்கஜநயனனே
பாலனைக்காருமையா

என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.

இராகம் - ஆரபி - தாளம் - ஆதி

(இராஜன்சொல் கண்ணி.)

நீதிலாமலேவிதம்
வேதியரனைவருங்
வேள்விசெய்கிறாரா

(மந்திரிசொல் கண்ணி.)

பேதமிலாமலே
நாதனேயனுதினம்
நடத்திவருகிறாரே

(இராஜன்சொல் கண்ணி.)

சித்ரசர்களிமக் குற்றகப்பமனைத்துஞ்
செலுத்திவருகிறாரா

(மந்திரிசொல் கண்ணி.)

கொற்றவாபுரவலர் சற்றுந்தடையில்லாமற்
கொடுத்துவருகிறாரே

(இராஜன்சொல் கண்ணி.)

மட்டெடனைவைசிய செட்டிகள்பலவித
வர்த்தகஞ்செய்கிறாரா

(மந்திரிசொல் கண்ணி.)

அட்டதிசைக்கரசே செட்டிமைமுறைவிதம்
அவர்களடத்துராரே.

(இராஜன்சொல் கண்ணி.)

சூத்திரவரவர் சேர்த்திபுடனேபல
தொழில்களைச்செய்கிறாரா

(மந்திரிசொல் கண்ணி.)

பார்த்திபனேயவர்கட் கேற்றதொழிலனைத்தும்
பண்ணிவருகிறாரே

(இராஜன்சொல் கண்ணி.)

திங்கண்மும்மாரிக ளெங்கஞுஞ்செழித்திடத்
திடமுடன்பெய்கிறதா

(மந்திரிசொல் கண்ணி.)

மங்களகுணமன்ன கங்குகரையில்லாமல்
மாரியும்பொழிகிறதே

(இராஜன்சொல் கண்ணி.)

ஆலயங்களிலேஷட் காலமும்பூஜைகள்
அந்தணர்செய்கிறாரா

(மந்திரிசொல் கண்ணி.)

சிலனேமறையவர் காலவேபூஜைகள்
செய்துவருகிறாரே

(இராஜன்சொல் கண்ணி.)

சத்திரத்தினிலேமுப் பத்திரண்டறமெனுந்
தர்மம்வழங்கிறாரா

(மந்திரிசொல் கண்ணி.)

கர்த்தனேயவரனு தினந்தமுந்தானதர்மம்
கனிவுடன்செய்கிறாரே

(சார-வ-ம்.) ஷேமப்ரதான் சிரேஷ்டா இவ்வாறுநடந்துவருகின்றனவாவென்ன.

(மந்-வ-ம்.) தடையென்ன மகராஜ்.

(சார-வ-ம்.) ஆஆ-யானதைப்பற்றி யத்யர்தசந்துஷ்டியடைந்தவனுகினேன் பாரும் யானிவ்வைம்பத்தாறு தேசங்களுக்கும் ஏகசக்ராதிபதியாயிருந்து (மன்னவர்க்கழகுசெங்கோன்முறைமை) யென்பதுபோல (ஓதல் - வேட்டல்-ஈதல்-உலகோம்பல்-படைபயிற்றல்-பொருதல்)என்றும்அரசாங்கத்திற்குரியஷட்கர்மங்களோடு எவ்வளவோ மகா கௌரவத்துடன் செங்கோன்மைவழுவாது ராஜ்பபரிபாலனஞ் செய்து வருகின்றேன் (மந்திரிக்கழகு வரும்பொருளுரைத்தல்) என்பதுபோல மந்த்ராலோசனைக்குத்தகுந்த தந்த்ரானுபவத்தை வகித்ததாமும் ஏனதருகாசனத்திற் சரியாகவீற்றிருந்து எனக்குச்சமயோஜிதமான யுக்தி சாதுர்யங்களை யெடுத்துப் போதித்து வருகின்றீர். அன்றியும், (ஆலயந்தொழுவது சாலவுநன்று) என்பதுபோல (சிவமாலய) தேவதா பூஜாவிரதங்களையும் யாதோரிடையூறின்றி யனுஷ்டித்துவருகின்றோம். ஹே துணைவா! இன்னும் பாரும் (அரசனெவ்வழி யவ்வழி குடிகள்) என்பதுபோல, நமது ராஜ்யத்திலுள சகல வர்ணாச்ரமத்தார்களும் நமதாக்னைகடவாது பக்திவிஸ்வாசத்துடன் அடங்கி நடந்துவருகின்றார்கள். இதன்றியும் எனது மாதவத்தாலுதித்த ரத்னத்தை யொத்த புத்ரசிகாமணியான சுவேதச்சந்த்ரனும் அவனுக்குரிய வில்வித்தை மல்யுத்தமுதலான கல்விகளைப் பயிற்சித்துவருகின்றான். ஹே அன்பிற்கிசைந்த நண்பா இவ்வித சாம்ராஜ்ய வைபவங்களோடு (சொர்க்க

மந்யபாதலம்) என்னுந் திரிபுவனங்களும் புகழ்ந்து கொண்டாடும்படி செங்கோற்செலுத்தி வருவதற்கு யான் முற்ஜென்மத்தில் யாதுநேரம்பிழைத்தேனோ தெரிந்திலேன், ஆஆ - நேயா! இனிமேலிந்தப் பஷத்தாராகிய சாரங்கஹஸ்தனுக்கு யாதுகுறையிருக்கின்றது ப்ரதான்.

(மந்-வ-ம்.) மகாராஜ் பாருங்கள் தாங்கள் மகா வீரசூர பராக்கிரமத்தை யுடைத்தாகிய க்ஷத்ரிய குலத்திற்கோர் திலகமாயுதித்து எண்டிசையுங் கொண்டாடும்படி இச்சத்தியபுரிக்கரசனாயமர்ந்து அவனியைம்பத்தாறு தேசங்களையுந் தங்களாக்ஞாசக்கரத்திலடக்கி மனுநீதிதவறாது செங்கோனடாத்தி வரும்போது தங்களுக்கு யாதுகுறைவு நேரிடப்போகின்றது மகாராஜ்.

(சார-வ-ம்.) ஆனால் ஓர் சிறிய குறைவுமட்டு மிருக்கின்றது ப்ரதான்.

(மந்-வ-ம்.) அது யாது மகாராஜ்.

(சாரங்கஹஸ்தமகாராஜன் சொல்-தரு.)

மாதவமே யிவ்வுருவாய் வந்தது மென் விதிவசமோ

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இ-ம்-எதுக்குலகாம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மைந்தனுக்குகந்தபெண்ணை
மணமுடிக்கவேணுமந்த்ரி

அநுபல்லவி.

இந்தவைம்பத் தைந்துதேசச்
சுந்தரமடந்தையரில் (மைந்)

(சார-வ-ம்.) ஹேப்ரதான் சிரேஷ்டா எனது வத்சனாகிய சுவேதசந்த்ரன் இப்போது சோடசவயதுடைய சுந்தரமன்மதனாயிருப்பதால் அவனுக்குத் தகுந்த சுந்தர நாயகியைத் தேடிப் பாணிக்ரஹணஞ் செய்து வைத்துக் கண்குளிரப்பார்த்துக் களிகூரவேண்டிய பாக்கியமொன்றிருக்கின்றதல்லவோ ப்ரதான்.

(மந்-வ-ம்.) வாஸ்தவந்தான் மகாராஜ்.

(சார-வ-ம்.) நல்லது தாமிப்பொழுதே நமது தூதரைவிடுத்து ஐம்பத்தைந்துதேச ராஜகுமாரிகளின் படங்களைவரவழைத்து நமது வத்சனுக்குக் காட்டி இச்சைகொண்ட பெண்ணைப் பக்ஷமாய் முடிக்கத் தக்ஷணமே எனக்குத் தெரிவிக்கவேணும் ப்ரதான்.

(மந்-வ-ம்.) சொன்னதுபோலவே மன்னவா செய்கின்றேன்.

(சார-வ-ம்.) ஆனால் யான்வந்து காலகரணமாகிவிட்டமையால் சுந்தரமிருந்த அந்தப்புரஞ்சென்று வருகின்றேன்.

(மந்-வ-ம்.) நன்று அப்படியே சென்று வாருங்கள் மகாராஜ்.

(மந்-வ-ம்.) அடா சேவகா! நமது நகரத்திலுள்ள தூதனை யழைத்துத் துரிதமாய் வருவாயாக.

(சேவ-வ-ம்.) ஓதியபடியே தூதனை அழைத்து வருகின்றேன் ப்ரபு.

தூதர்கள் வருகிறஜாவளி.

செலியாசாலுனே

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.

இ-ம்-வசந்தம்-தாளம்-சாபு

பல்லவி.

தூதர்கள்வந்தாரே மகாதுரிதமுடனிதோ
தூதர்கள்வந்தாரே

அநுபல்லவி.

சேதிகொண்டிமைக்குள்ளே காதவழிசெல்லும் (தூத)

சரணம்.

சல்லடந்தனைத்தொட்டுத்தகுந்தசொக்குகள்விட்டுத்
துல்லியமானமீசை சொகுசாய்முறுக்கிட்டுத் (தூத)

(தூதர்கள்சொல் வசனம்.) மாதவர்புகழும் நாதனே தூதர்கள் வந்தனம்புரிகின்றோம்.

(மந்-வ-ம்.) கல்யாண் தூதர்காள்.

(தூத-வ-ம்.) எங்களை யழைத்த சங்கதியாது ப்ரபு.

(மந்-வ-ம்.) ஹே தூதர்காள் நீங்களைம்பத்தைந்து தேசங்கட்குஞ் சென்று ஆங்காங்குற்ற வேந்தரைக்கண்டு சத்தியபுரிக்காசனுகிய சாரங்கதரஸ்தமகாராஜாவின் புதல்வனுகியசுவேதச்சந்த்ரனுக்கு விவாகம் புரியும்பொருட்டாக ராஜகுமாரிகளின் மடல்கள் வாங்கிவரும்படி யனுப்பியதாய்ப்புகன்று ஒவ்வொரு ராஜகன்னிகையின் படங்களையும் அவஸ்யம் வாங்கிக்கொண்டு விரைவினில் வருவீர்களாக.

(தூத-வ-ம்.) சொற்படி யாங்கள் இப்பவே சென்று அப்படியே வாங்கிக்கொண்டு வருகின்றேம் ப்ரபு.

(மந்திரியின் சபை.)

(மந்-வ-ம்.) காவலாயிருக்குஞ் சேவகன் யாவன்.

(சேவ-வ-ம்.) ஏஜர்கணண்பா ஆஜராயிருக்கின்றேன்.

(மந்-வ-ம்.) தூதர்களின்னும்வரவில்லையாவென்ன.

(சேவ-வ-ம்.) வரவில்லை ப்ரபு.

(தூதர்கள் மந்திரி சபைக்கு வருதல்.)

(தூத-வ-ம்.) காவலாயிருக்குஞ் சேவகனி யாவன்.

(சேவ-வ-ம்.) தூதரே யழைக்குஞ்சேதி என்சொல்வீர்.

(தூத-வ-ம்.) மந்திரி என்செய்கின்றார்.

(சேவ-வ-ம்.) ஆசனத்தில் வீற்றிருக்கின்றார்.

(தூத-வ-ம்.) நல்லது யாங்கள் வந்திருப்பதாகத்தெரிவிக்க வேண்டும்.

(சேவ-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் * சென்றநம் தூதர் மன்றில்வந்திருக்கின்றார்கள் ப்ரபு.

(மந்-வ-ம்.) அட்டியில்லாது விட்டுவிடுவாயாக.

(சேவ-வ-ம்.) கட்டளைப்படியே விட்டுவிடுகின்றேன் ப்ரபு * வரும்படியுரைத்தார் மகிழ்வுடன் செல்வீர்.

(தூத-வ-ம்.) நன்று அப்படியே சென்று வருகின்றேம் * ப்ரபுவந்தனம் புரிகின்றேம்.

(மந்-வ-ம்.) கல்யாண் தூதர்காள். ஹே தூதர்காள் மடல்கள் வாங்கிவந்தீர்களாவென்ன.

(தூத-வ-ம்.) வாங்கிவந்தோம் இதோ பாருங்கள் ப்ரபு.

(மந்-வ-ம்.) வெகுசந்தோஷமாயிற்று *அடா சேவகா நமதந்தப்புரத்திற்குச்சென்று ராஜபுத்ரனுகிய சுவேதச்சந்த்ரனையழைத்து வருவாயாக.

(சேவ-வ-ம்.) கட்டளைப்படியே திட்டமா யழைத்துவருகின்றேன் ப்ரபு.

(சுவேதச்சந்திரன் மந்திரிசபைக்கு வருதல்.)

(சுவேதச்சந்த்ரன் சொல் வசனம்.) அந்தரர் புகழு மந்திரி வந்தனம் புரிகின்றேன்.

(மந்-வ-ம்.) கல்யாண் ராஜவத்சா சமீபத்தில் வீற்றிருப்பாயாக.

(சுவே-வ-ம்.) சாற்றியபடியே வீற்றிருக்கின்றேன்.

(சுவேதச்சந்த்ரன் சொல்-ஜாவளி.)

போப்போவேசெலியா

என்றஜாவளியின் வர்ணமெட்டு.

இ-ம்-செஞ்சுருட்டி-இத்துல்த்ராளி-ஆதிதாளம

பல்லவி.

எந்தனையேனழைத்தீர்

அநுபல்லவி.

மந்திரி (எந்)

சரணம்.

அந்தப்புரத்தினிலே யானிருக்கும்போது
வந்தானே சேவகன் மந்திரி (எந்)

(சுவே-வ-ம்.) ஆஆ-ப்ரதான் யானந்தப்புரத்திற்பர்துவினோ யாடிக்கொண்டிருக்குந்தருணத்தில் என்னை யழைத்துவரும்படி யாக்ஞாபித்த காரணம் யாது ப்ரதான்.

(மந்திரிசொல் ஜாவளி,)

இன்னுமம்பிரானு நிஜனயனு

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.

இ-ம்-காம்போதி-தாளம்-ஆதி

பல்லவி.

வேட்டல்செய்துவைக்கக் கூட்டிவரச்சொன்னேன்

அநுபல்லவி.

மேட்டிமைசேர்வீரா வேந்தனூர்குமாரா (வேட்)

சரணம்.

சுந்தரமங்கையர் விந்தைமடல்பாராய்
சிந்தைகனிவுள்ள செய்திதனைக்கூறுய் (வேட்)

(மந்-வ-ம்.) தேற கண்மணி பார். நீ பதினாறுவயது பாலகுமாரனாயிருப்பதால் உனக்கு மணமுடித்துவைத்துக் கண்குளிரப் பார்க்கவேண்டுமென்ற கருத்தானது தினமும்வருத்திக்கொண்டிருப்பதால் ஐம்பத்தைந்து தேசராஜகுமாரிகளின் மடல்களை

வரவழைத்திருக்கின்றேன் ஆதலின் இப்படங்களைக் கண்ணுற்று உனக்கிசைந்த பெண்ணையும் உனதெண்ணமுந் தெரிவிப்பாயாக.

(சுவேதச்சந்த்ரன்சொல்-தரு.)

கருக்கினில்வளர்ந்தோங்கும் ஓ ஏகாம்பரியே

என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.

இ-ம்-பியாகு-தாளம்-ஆதி

பல்லவி.

தடுத்தானென்மொழி சொல்லத்-தகாதுமந்திரி

அநுபல்லவி.

எடுத்துரிப்போது கொடுத்தமடல்மீது-எனக்
கெள்ளளவுங்கொள்ளவில்லை உள்ளமதிலே (தரு)

(சுவே-வ-ம்.) ஹேப்ரதான் சிரேஷ்டாபாரும்(தந்தைசொன்மிக்கமந்திரமில்லை) யென்பதுபோல தாம் எனது தந்தையிடத்தில் மந்திரித்தத்துவத்தை வகித்திருப்பதால் தாமும்எனக்குத் தந்தையேயன்றிவேறன்று. ஆதலின் தமது திருவாக்குக்கு மறுவாக்குரைக்க எனக்கென்ன யோக்யதை யிருக்கின்றது. ஆயினும் பாரும்.

சுலோகம்.

கார்யேஷுதாஸி கரணேஷுமந்த்ரி
ரூபேசலக்ஷ்மி க்ஷமயாதரித்ரி
ஸ்நேஹேசமாதா சயனேதுவேஸ்யா
ஷட்கர்மயுத்தா குலதர்மபத்னி.

(அதாவது.) வீட்டுவேலையிற் பணிப்பெண்போலவும் கார்யாலோசனையில் மந்த்ரியைப்போலவும் ரூபலாவண்யத்தில் மகாலட்சுமியைப் போலவும் பொறுமையிற் பூமிதேவியைப்போலவும் போஷணத்தில் மாதாவைப்போலவும் சயனத்தில் வேசியைப்போலவும் கணவனுக்கு நடந்துகொள்பவள்பட்டுக்குலஸ்த்ரீயென்று மனுஸ்மிருதிகள்முறையிடுகின்றமையால், தாமிப்போது கொ

க்கலான இம்மயல்களனைத்தையுஞ் செவ்வையாயாராய்ந்து செய்தநில் சாஸ்திரங்கடப்படி ஷட் குணங்களுடைத்தாகிய பெண்களொன்றுங் காணப்படவில்லை இன்னும்பாரும்.

விருத்தம்.

நிட்டையிலேயிருந்துமனத் துறவடைந்தபெரியோர்க
ணிமலன்றனைக்
கிட்டையிலே தொடுத்துமுத்தி பெருமளவும் பெரியசுகங்
கிடைக்குங்காம
வெட்டையிலேமதிமயங்கிச் சிறுவருக்குமணப்பேசி
விரும்பித்தாலி
கட்டையிலேதொடுத்துகடைக்கட்டையிலேகிடத்துமட்டுங்
கவலைதானே.

அதாவது சதா நிட்டைபுரிந்து பற்றுநீங்கி மனதின்கண் துறவடைந்த பெரியோர்களெல்லாம் பரமபதியின் பதத்தைத் துதிக்கக் கிடைத்தது முதல் மோக்ஷத்தை யடையும்வரையில் பெரிதான ஆனந்தத்தை யடைவார்களென்றும் கன்னியர்கள் காமமென்னும்வெப்பத்திலே புத்திமயங்கிக்கிடப்பவர்களெல்லாஞ் சிறுமியர்க்கு விவாகமுறைபேசி விருப்பத்தோடு தாலிகட்டுவது முதல் சுடுகாட்டிலடுக்கிய கட்டைகளின்நடுமத்தியிற்கொண்டுபோய் வைக்கும்வரையிற் றுன்பமேயனுபவிப்பார்களென்றும் ஆன்றோர்களாற் கூறப்பட்டிருக்கின்றது. இன்னும்(சேலை கட்டியமாதரைநம்பினாற் றெருவில்நின்று தியங்கித்தவிப்பரே) ன்பது உலகப்ரசித்தமாயிருக்கின்றது. ஹேப்ரதான்! இத்யாதிகாரணங்களை யோசிக்கும் விஷயத்தில் எனக்கு வேட்டல்செய்துகொள்ள நாட்டமில்லை. நான்மறுத்துக்கூறியதாகக் கருத்தினில் வருத்தமின்றி அந்தப்புரத்திற்கேகச் சிந்தைகூர்ந்து தடையிலாது விடையளிக்கவேண்டும் ப்ரதான்.

(மந்-வ-ம்.) ஹே கண்மணி பார். (சந்ததிக்கழகு வந்துசெய்யாமை) அதாவது, வம்சத்திற்கழகானது புத்ரபாக்கியமுண்டாகும்படி மனைவியோடு கூடி வாழ்தலென்று சொல்லப்பட்டி

ருக்கின்றது. அங்ஙனமிருக்க நீவேட்டல்மீது நாட்டமில்லையென்று பாஷிக்கின்றனை. என்செய்கின்றது. நன்றாவுன்மனைப்போய்ச் சென்றுவா கண்மணி.



சாரங்கஹஸ்தமகாராஜாவின்

இரண்டாவதுசபை.

(சார-வ-ம்.) காவலாயுற்ற சேவகன் யாவன்.

(சேவ-வ-ம்.) பார்த்திபா அடியேன் காத்திருக்கின்றேன்.

(சார-வ-ம்.) இமைப்பொழுதினுக்குள் அமைச்சனையழைத்து வருவாயாக.

(சேவ-வ-ம்.) வழுத்தியபடியே யழைத்து வருகின்றேன் மகராஜ்.

(மந்-வ-ம்.) தாணியோர்புகழும்புரவலா மந்திரித்தனம்புரிகின்றேன்.

(சூர-வ-ம்.) கல்யாணப்ரதான் சிரேஷ்டா யோசனைக்கிசைந்தாசனத்தமரும்.

(மந்-வ-ம்.) சாந்தியபடியேவீற்றிருக்கின்றேன்.

(சாரங்கதரஸ்த மகாராஜன் சொல்தரு.)

அன்னையே நானுன்னை நம்பினேனெனக்கருள்புரிகுவாய்

என்றபிரித்தனையின் வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்

பல்லவி.

மைந்தனுடைய சிந்தையிலுள
மர்மமென்னகாணே மந்திரி

அநுபல்லவி.

விந்தையொழிந்தும டந்தையர்களை
வேட்டல்புரியகாட்டமா (மைந்)

சரணம்.

தாதர்கொணர்ந்த மாதர்படலச்
சுதனுங்கண்களாற்கண்டானு
காதலாகவே யோசியாமலு
கருத்துக்கிணங்கிக்கொண்டானு (மைந்)

(சார-வ-ம்.) தேவப்ரதான் சிரேஷ்டா யானுமக்காக்ஞாபித்திருந்தபிரகாரம் ஐம்பத்தைந்துதேச ராஜகுமாரிகளின் படங்களை வரவழைத்து எனது புத்ரரத்னமாகிய சுவேதச்சந்த்ரனுக்குக்காட்டினீரா, அவன் அந்த படங்களைப்பார்த்துச் சிந்தைக்கிசைந்த சுந்தரியைக்கண்டு வேட்டல் செய்துகொள்ள நாட்டமுற்றவனாயிருக்கின்றானா, அந்த விபரத்தை எந்தனுக்குச் சவிஸ்தாரமாயெடுத்துரைப்பீராக.

(மந்திரி சொல்ஜாவளி.)

எந்தனுவாடலகிறீடு மந்தமனு

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.

இ-ம்-கமாஸ்-தாளம்-ரூபகம்

பல்லவி.

மங்கையர்படங்களெல்லாம்
மைந்தன்பார்த்தானே

அநுபல்லவி.

பங்கமான சங்கதிசொல்லி
அங்கம்வேர்த்தானே (மங்)

(மந்-வ-ம்.) மகாராஜ் பாருங்கள் தங்களாக்ஞாபனையின் பிரகாரம் ஐம்பத்தைந்துதேச ராஜகுமாரிகளின் படங்களை வரவழைத்து மது செல்வனுக்குக் காட்டி அநேக போதனையூட்டி அவனபிப்பிராயங் கேட்டதில் தனக்குப் பிரியைத்திற் பிரியமில்லையென்று படங்களை யெறிந்து தடல்புடலாய்ச் சென்றுவிட்டான் மகாராஜ்.

(சாரங்கதரஸ்தமகாராஜன் சொல்-தரு.)

மன்னன்வரக்காணேனே யென்னசெய்குவேனானே

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இ-ம்-கமாஸ்-தாளம்-ஆதி

பல்லவி.

என்னசெய்குவேன்மந்திரி யிவ்விதஞ்செய்தானுதந்திரி

அநுபல்லவி.

கன்னியர்படங்கள்மீது காதலில்லாதென்னகுது (என்)

சரணங்கள்.

வேட்டல்செய்துவைக்கவென்று
மிக்கவாசைகொண்டேனென்று (என்)

என்னமெல்லாம் வீணாய்ப்போச்சே
என்னைப்போன் றராஜர்க்கேச்சே (என்)
இப்படியாமென் றுநானே
சொற்பனமுங்கிலேனே (என்)

(சார-வ-ம்.) ஆஆ-ப்ரதான் என்னகாலவித்யாசம் பாரும் ஏதோ தெய்வகடாக்ஷவீக்ஷண்யத்தால்என்னு வம்சமானதுஇது வரைவாழையடிவாழையாயபிவிர்த்தியாகிவந்ததுபோலவே நமதுகாலத்திலும் நமதுவத்சனுக்குப்பருவகாலத்திலேயே பாணிக்கிரகணஞ்செய்துவைத்துக் கண்குளிரப்பார்க்க வேண்டும், அவனும் இஷ்ட சுகாநுபவங்களை யனுபவித்துச் சந்தானபாக்யத்தைப் பெறவேண்டும் அப்போது

வெண்பா.

மக்கண்மெய்தீண்ட லுடற் கின்பமற்றவை
சொற்கேட்டலின்பஞ் செவிக்கு.

என்பதுபோல், நாம் அக்குழந்தைகளைக்காத்தாலெடுத்துமார்போடணைத்து முத்தியிட்டுக் கொஞ்சிக்குலாவி அக்குழந்தைகள்செவ்விதழ்வாயிறுல்மொழியும்இனியமதலைவசனசாதுர்யங்களைக்கேட்டுச் சந்தோஷமடையவேண்டுமென்றெண்ணியிருக்க, அவன் மனத்திலே வெறுத்து க்ஷணத்திலிற் சென்றுவிட்டானென்று நீர்சொன்னவார்த்தையைக்கேட்டமாத்திரத்தில்என் மனமானது தகிக்கப்படுகின்றதே, ஆஆ-எனதெண்ணமெல்லாம் மண்ணாகிவிட்டதே, ஆஆ- என்போன்றராஜரெல்லாம் ஏசுதற்கிடமாகிவிட்டதே,ஆஆ-இப்படிச்செய்வானென்று யான்சொற்பனமுங்கண்டிலேனே, ஹேப்ரதான் யானினியென்செய்வேன்.

(மந்திரிசொல்தரு.)

வந்தனமையா எனையா வந்தனமையா
என்ற ப்ராமத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-பியாகடை-தாளம்-ரூபகம்

பல்லவி.

சஞ்சலம்வேண்டாந்-துரையன்றே
சஞ்சலம்வேண்டாம்

அநுபல்லவி.

பஞ்சபாணனெய் மிஞ்சியகணைக்
கஞ்சியவனும் கெஞ்சுவானையா (சஞ்)

(மந்-வ-ம்.) ஆஆ - மகராஜ் பாருங்கள்.

விருத்தம்.

கன்னிகையொருத்திசிற்றின்பம்வேய்பெண்ணினுங்
கைக்கொள்வள் பக்குவத்தில்,

ஆதாவது,சிற்றின்பத்தைவேம்புக்குச்சமானமான கசப்பாயெண்ணியிருக்கின்ற அறிவில்லாத இளம்பெண்கள்பக்குவகாலத்தையடைந்தவுடன் மன்மதவாதை சகிக்கமுடியாமல் அந்தச்சிற்றின்பத்தை மதுவாகப்பாவித்துக் கைக்கொள்வார்களென்று ஆன்றோர்வாக்கிற்சொன்னபடி நமது வத்சனானவன்மாரபாணத்தின்கோரமின்னதென்றறியாதவனாயிருப்பதினிமித்தம் பரிணயத்திற் பிரியமில்லாதிருக்கின்றான், இனிக்காமபாணந் தைத்தமாத்திரத்தில் நாமுயற்சிசெய்யாமலே வேட்டல்செய்துவைக்கக் கேட்டுக்கொள்வானென்பதற்கு யாதுஞ் சந்தேகமில்லை, இதற்காக என்-வியாகூலப்படவேண்டு மகராஜ்.

(சார-வ-ம்.) ஹேப்ரதான் நீர்பாஷித்தது வாஸ்தவந்தான் கல்லது உமதபிப்பிராயம்போலவே இன்னுஞ் சிலகாலம் பார்ப்போம் யான்வந்து காலகரணமாகிவிட்டமையால் எனது சிந்தைக்கிசைந்த சுந்தரமிகுந்த அந்தப்புரஞ் சென்று வருகின்றேன்.

(மந்-வ-ம்.) நன்று அப்படியே சென்றுவாருங்கள் மகராஜ்.

சுவேதச்சந்திரன் நந்தனவனத்திற்குச் செல்லுதல்.

சுவேதச்சந்திரன் சொல்-தரு.

ஸ்ரீப்யாமேமோகமோனசையா
என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.
இ-ம்-பியாகு-தாளம்-ஆதி

பல்லவி.

நந்தவனம்போயுலாவுவோம் நாமுமிப்போது
நந்தவனம்போயுலாவுவோம்

அநுபல்லவி.

சிந்தைதனில்மிகவும்நல்சந்தோஷமுண்டாகுதுகொள்ள
இந்தவேளைதனில் ஏகாந்தமாகவேதானேயென்ன (வந்)

(சுவே-வ-ம்.) இப்போது வசந்தகால மேற்பட்டதினின்று சூரியவெப்பஞ் சகிக்கமுடியாமலிருக்கின்றமையால் நமது தேகம் புளகாங்கிதமுறும்படியாகக் குளிர்ச்சிபொருந்திய நமது நந்தனவனத்திற்குச்சென்று தென்றலினுவாசிக்க சிரமபரிகாரஞ்செய்து சந்தோஷியாக ஆங்குற்ற வேடிக்கைகளையும் பார்த்துவருவோமிப்போது.

சதாரம் நந்தனவனத்திற்குப் புஷ்பம்பறிக்கச்செல்லுதல்.

சதாரம் சொல்-தரு.

வந்தனம்தந்தேனே வந்தசபையோர்க்கும்
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இ-ம்-பியாகு-தாளம்-ஆதி

பல்லவி.

சந்தவனமெய்திக் கந்தமலர்கொய்து
நலமுடனிருக்கவே செல்லுவோமிப்போதே

அநுபல்லவி

சந்ததம்விந்தைசேர் ..... பறவைகள்வாழ்
அந்தமிகுந்ததா . வாமதுரும் (சந்)

(சதாரம் சொல் வசனம்.) நாம் வழக்கம்போல அந்நியிற் குடிக்கொள்ளும்பொருட்டு மகாராஜாவினது நந்தனவனத்திற்குச்சென்று ஆங்குற்ற (மல்லிகை - முல்லை - இருவாக்ஷி - சண்பகம் - பாரிஜாத) முதலிய புஷ்பங்கள் பறித்துக்கொண்டு வருவோமிப்போது,

சுவேதச்சந்திரன் சொல்-தரு.

மன்னுவுன்னைக்கண்டநாள்முதலாய் மையல்மிகக்கொண்டேனே
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இ-ம்-கமாஸ்-ஏகதாளம்

பல்லவி.

இந்தவனச்சிங்காரந்தனைகாண்
என்னென்றுசொல்லுவேன்

அநுபல்லவி.

பந்திபந்தியாய்மரங்கள் சுந்தரமாய்நிற்குதே-என்
சிந்தைமிகவுஞ்சொக்குதே (இந்த)
மல்லிகைசெவ்வந்திமுல்லைமலர்கரும்பரிமளிக்குதே-என்
மனதுமிகவுங்களிக்குதே (இந்த)
கோகிலங்களாவலுடனே கூடிக்குலவிக்கூவுதே-இதோ
குளிர்ந்ததென்றலுந்தாவுதே (இந்த)
நீலமயில்தோகைகவிய நின்றுநடனமாடுதே-கொஞ்சம்
சித்திரைவசந்தமூடுதே (இந்த)
மகிமையிதுலேயல்லவோ மாமுனிவருங்கூடுவார்-இவர்
வனத்திற்றவத்தைநாடுவார் (இந்த)
விஸ்தரித்துமுத்தையன்சொன்னவிதமுழுதுமிருக்குதே-இந்த
வேடிக்கையெனையிழுக்குதே (இந்த)

(சுவே-வ-ம்.) ஆஆ-இந்நந்தனவனத்தில் (அகத்தி- அசோகு- அத்தி-ஆசா-அலிஞ்சை-ஆச்சா-ஆத்தி-ஆல்-இத்தி- இலந்தை-இலவம்-இலுப்பை-ஈச்சு-உதிர்-எட்டி-எலுமிச்சை-ஏலம்-கடம்பு-கடவு-கடுக்காய்- கமுகு- கருக்குவாளி-கருங்காலி-கள்ளி-காயா-குங்குமம்-குருந்து-கூந்தற்பனை-கொன்றை-கோங்கு-சந்தனம்-சேவந்தி-செண்பகம்-செருந்தி-தணக்கு-தெங்கு-தேக்கு-துளசி-நாரத்தை-நாவல் - நெல்லி - நொச்சி - பச்சிலை - பனை - பன்னீர் - பாதிரி- பாலை- பிராய்-புளி-புன்முருக்கு-புனமுருங்கை-புன்னை - பூவரசு - மகிழ் - மஞ்சாடி - மருதம் - மலைப்பச்சை-மலைமல்லிகை-மாதளை-மா-முருக்கு-முருங்கை-மூங்கில் - வன்னி-வாகை-வில்வம்-விளா-வெட்பாலை-வேங்கை-வேம்பு-வேல்) முதலிய விருக்ஷஜாதிகளடர்ந்து நிழலாயிருப்பதற்கும் (வனமல்லிகை - மலருகை-முல்லை-இருவாக்ஷி-வெட்சி-அலரி- செவ்வந்தி-நந்தியாவர்த்த) முதலான புஷ்பஜாதிகள் பரிமளிக்கின்றதற்கும், கண்ணைப்பொத்த அருவிகள்பெருகியோடுகின்றகுளிர்ச்சிக்கும், கோகிலங்கள் பாடுகின்றசங்கீதத்திற்கும், மயில்களாடுகின்ற வேடிக்கைக்கும், இக்கடிக்கின்றதென்றலுக்கும், நமதுமன

மானது ஓர்விதமான ரமணீகரமாயிருக்கின்றதே. ஆ-இவ்விப ரீதத்திருலல்லவோ அன்னோர்களில்லறத்தை நீக்கித் துறவறம் பூண்டு இவ்வித செழுமையைபொருந்திய வனங்களிற் சஞ்சரித்துக் கந்தமூலபலாதிகளைப் போஜனமாயுபயோகித்துக்கொண்டு இப் பேர்க்கொத்த வேடிக்கை விநோதங்களைப்பார்த்துக் காலங்கழி த்துவருகின்றார்கள். இல்லாவிடில் அவர்கட்கு இக்கானகத்தில் வேறென்ன மகத்வமிருக்கின்றது. நல்லது இன்னுஞ்சுற்றுசுற்றி ஆங்குற்ற வேடிக்கைகளையும் பார்த்துவருவோம்.

சுதாராம் கந்தனவனத்திற் புஷ்பம்பறித்தல்.

சுதாராம்சொல் தரு.

வாராயோ வாராயோகண்ணு வைகுந்தமன்னு
என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.
இ-ம்-காதாரமக்கிரியை-தாளம்-சாபு

பல்லவி.

கந்தவனம்வந்துவிட்டோமே-மலர்செறிந்த
கந்தவனம்வந்துவிட்டோமே.

அநுபல்லவி.

சுகந்தம்பரிமளிக்குதே சிந்தைமிகக்களிக்குதே
இந்தவேளையுள்ளேசென்றிடுவோம் மலர்செறிந்த (கந்)

மல்லிகைசெவ்வந்திபிச்சிக்குராமை சண்பகம்வெட்சி
முல்லையிருவாட்சிமுதலாய் மலர்செறிந்த (கந்)

காமமிகமலர்செண்டுமாமலரைக்கொய்துகொண்டு
சேமமுடன்வீட்டுக்கேகுவோம் மலர்செறிந்த (கந்)

(சுதா-வ-ம்.) இத்தச்சுந்தரமிகுந்த கந்தனவனத்திற்குவந்து விட்டோமாகையால் இப்போது சிந்தைகளிக்கும் கந்தமலர்க ளைப்பறித்துக்கொண்டு விரைவில்கிரகத்தைநாடிச்செல்வோம்

சுவேதச்சந்திரன் சுதாராத்தைக்கண்டு
மோகங்கொள்ளுதல்.

சுவேதச்சந்திரன் சொல் ஜாவளி.

சாருமதிசாமுல்பாரிகுனே-எமனிசகிதுனே
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
இ-ம்-இந்துஸ்தானி-காபி-தாளம்-ஆதி

பல்லவி.

மாரன்கணையாற்பட்டு மயங்கிட்டுச்செய்தவன்
யாரோவதியேனோ-விவ-யாரோவதியேனோ

சரணங்கள்.

ராஜகுமாரியோ கேசவன்பாரியோ
தேஜசெனை மயக்கிச் சித்தம்ப்ரமிக்குதே
யாரோவறியேனே-யிவ ளாரோவறியேனே (மார)

ரம்பைதிலோத்தமையோ உம்பர்புகழுமையோ
வம்பணிகும்பதனா மங்கையும்ரதியோ
யாரோவறியேனே-யிவ ளாரோவறியேனே (மார)

மாதிந்திராணியோ வளர்கலைவாணியோ
ஏதுந்தெரியவில்லை யென்னென்றுசொல்லுவேன்
யாரோதெரியேனே-யிவ ளாரோதெரியேனே (மார)

இத்தரைபோற்றும் எழிற்கவிசாற்றும்
முத்தையன்பதம்பாடும் புத்தியுள்ளவளோ
யாரோவறியேனே-யிவ ளாரோவறியேனே (மார)

(சுவே-ய-ம்.) ஆஆ-என்ன ஆச்சர்யம். நாமோ இந்தக்கன வனத்தைச்சுற்றி வேடிக்கைவினோதங்களைப்பார்த்துக்கொண்டு வரும்பொழுது இப்புஷ்பச்செடிக் கருகாண்மையில் யாரோ வோர் மங்கையானவள் செங்கையால் மலர்பறித்துக்கொண்டிருக்கிறாள். இவளைப் பார்த்தமாத்திரத்திலேயே கன்மனங்கொண்ட மன்மதனானவன் கொஞ்சமேனும் நெஞ்சமிளகாமற்பஞ்ச பாணத்தை விடுக்கின்றான் அதனால் தயங்காதமனமும் மயங்கின்றதே, ஆஆ-இவள் விண்ணவர் மின்னோ, பூலோகப்பூவையோ, பாதலப்பாவையோ, யாதேர்வொன்றும் புலப்படவில்லை. நல்லது இன்னுஞ் சற்று சமீபத்திற்சென்று பார்ப்போம்.

(சுவேதச்சந்திரன் சொல்லுதல்.)

காதல்.

நீராமின்றனோ நிசாகரகன்னிகையோ
சூராமின்றனோ சுரலோகமேனகையோ
கம்மியன்கையாலடித்துக் காய்ச்சியொட்டித்தீராமல்
செம்மலரோன்கைமலராற் செய்தசொர்ணப்பாவையிதோ
வாய்பேசாவன்ன மதிலொட்டிநில்லாமல்

தாய்பேசப்பேசியின்பந் தந்துலவுஞ்சித்திரமோ
காற்றிலடிபட்டலைந்து கண்மூத்தரும்பாமல்
போற்றிமடவார் வளர்த்தெடுத்தபூங்கொம்போ
மொய்க்குழுணங்குன்றி முகங்கருகிவாடாமல்
மெய்க்குமணமென்னுநம் விசுமருக்கொழுந்தோ
பொய்கிச்சிவந்து கழுத்துப்புழுங்காமல்
தங்கமிழைமாக்ச் சமைந்தமணிப்பாவோ
கொம்புதொழும்போய்த்தாவிக் கூவித்திரியாமல்
அம்பொன்மணிபூசலிருந் தாடுங்குயிற்பேடோ
கொஞ்சிமொழிகுழறிக் கூட்டிற்கிடவாமல்
செஞ்சொன்மதனகலை செப்புங்கிளிப்பேடோ
கன்னியர்க்குத்தன்னடையைக் கற்பித்தபேடையன்னக்
தன்னடைபயிற்றுஞ் சாதியன்னப்பேடோ
தேய்ந்துபோமிக்கச் சேர்ந்தகுணம்போகாமல்
தோய்ந்துபோமிக்கத் துலங்குமின்றஜாதிமுத்தோ [போல்
கண்ணுக்குங்கண்மணிபோற் கண்மணிக்குப்பாவையைப்
பெண்ணுக்குப்பெண்ணாகை கொள்ளவந்தபெண்ணரசோ

(சுவே-வ-ம்.) ஆஆ-இவளைச் செவ்வையாகநோக்குமிடத்து ப்ரமனானவன் (இரம்பை-ஊர்வசி-மேனகை-திலோத்தமை-இலக்ஷ்மி-பார்வதி-சரஸ்வதி-ரதி) முதலாகிய அப்ஸரஸ்த்ரீகளினழகையெல்லா மொருங்காயெடுத்து மானிடருயிரை வருத்துதற்கு ஓர்பெண்ணுருவாயமைத்து மண்ணுலகிற் கனுப்பியதுபோல் மார்க்கமாய்க் காணப்படுகின்றது. ஆ-ஆ-இவள் ஸ்தனோபாரத்திற்கு என்னவுவமை சொல்லப்போகின்றோம்.

சுவேதச்சந்திரன் சொல்லுதல்

கலிவெண்பா.

தேவாசுத்தகும்பைச் செப்பலாமல்வரும்பு
ஆதவனைக்கண்டா லலருமே—தாது
வட்டென்றுவமை மதிக்கலாம்வட்டதனை
வெட்டென்றுசொல்ல விதியுண்டே—கெட்டலைச்

சக்கரவாகத்தைச் சரியுரைக்கலாமென்றும்
மிக்கசிறகுடைத்தாய்விட்டதே—முக்குமெனப்
பாரப்பருவகலை பச்சினிமிரண்ணலாம்
ஆரப்புளக மருப்பதே—விரபத்தன்
வண்ணமுடியென்று மதிக்கலாமப்பகுடத்
தண்மெனவுடுமெச்சுனவும் தாழாதே—பரன்முனிய
சித்ரமணிச்செப்பென்று செப்பலாமச்செப்பு
புத்தமிர்தபோகம் பொசியுதே—சுத்தநிச்
சுந்தரஞ்சேரப்புதத்தைத் தென்னுத்பணிரும்
சுந்தனமுங்குங்குமமும் தாங்காதே—விக்கைதெதி
அந்தகுக்கோமளி வரும்பெனலாமவ்வரும்புக்
கிந்தமுகக்கருமை யெய்தாதே—சந்தமிகும்
பூசணகும்பங்களெனப் போற்றலாமக்கும்பக்
காசினிமென்சுனைக்கு நாரதே—சிரணியும்
மாகனகவெற்பெனலா மற்றந்தவெற்பானுர்
கோகனகக்கையாற் குனிந்ததே—வாருசெதி
பந்திணைகளென்று பகரலாமப்பந்து
இந்துநுதலார்கைக் கிடைக்கெழுமே—சுந்தமிகும்
பூங்கொத்திணையாய்ப் புகலலாம்பூங்கொத்துந்
தேங்குதென்றல்வீசச் சிதறுமே—ஈங்கெவரும்
மெச்சுகலைமதியின் வெண்ணிலாவீசுமுத்தின்
கச்சுமுலைக்குவமை காணேனே.

(சுவே-வ-ம்.) ஆஆ-திரிபுவனங்களினும் வசியாகின்ற அதிக சுந்தரவதிகளாகிய பெண்களைவருக்கும் நாயகமாகப் புகழுவல்ல சர்வமங்கள ரூபலாவண்யமுள்ள இம்மங்கையின் தரிசனையைப் பெற்றமாத்திரத்தில் மனதிலேகலக்கி பொறிகள் மயங்கி மிஞ்சிய விரசமேலிடுகின்றதே, ஆஆ-இப்போக்கொத்த சுந்தரி

யைக்கூடிச் சுகித்தாலல்லவோ நமது ஜென்மமீடேறும், ஆஆ-இவள் நமது சட்டைவார்த்தைக்குச் சட்டென்றுடன்படுவளோ, அல்லது தட்டிவிடுவளோ யாதோ தெரியவில்லை. நல்லது சற்று வார்த்தையாடிப்பார்ப்போமிப்போது.

(சுவேதச்சந்திரன் சொல்-ஜாவளி.)

மோகமுனைதாளலேரா முத்துபெட்டாரங்கசாமி

என்றஜாவளியின் வர்ணமெட்டு.

இ-ம்-தோடி-தாளம்-ரூபகம்

பல்லவி.

தையலேநான் மையல்கொண்டேன்
தழுவியணைய வாடிசேடி (தைய)

அநுபல்லவி.

துய்யமலர் கொய்யவந்த
சுந்தரி-நீயே-மாதே
கைநழுவச் செய்திடாது
காதல்தீர்ப்பாயே-மானே-தேனே (தைய)

மன்மதனும் கன்மழைபோல்
வாளியெய்கிறான்-மாதே
என்மனமும் ப்ரம்மைகொள்ள
இடர்கள்செய்கிறான்-மானே-தேனே (தைய)

பஞ்சணையிற் கொஞ்சுதற்குப்
பருவமில்லையோ-மாதே
விஞ்சியோநான் கெஞ்சினிலும்
மனதுவல்லையோ-மானே-தேனே (தைய)

முத்தையன்ப தத்தைக்கேட்டும்
மொழியேனடி-மாதே
சித்தசன்போல் மெத்தவல்லை
செய்குவேனடி-மானே-தேனே (தைய)

(சுவே-வ-ம்.) ஆ-ஆ-தங்கமாமலரைச் செங்கையாற்பறிக்கும்மின்னலையொத்த கன்னிகாய் நின்னைக்கண்டமாத்திரத்தில் கன்னல்வில் மன்மதனென்னுவன் கணைகளைத் தொடுத்துக் குணமதைக்கெடுத்து மையலுண்டாகச்செய்து விட்டான், நீஇச்சமயத்தில் லச்சையை விடுத்துப் பஞ்சணைமீது பிஞ்சுகவ்வாயால் முத்தங்கொடுத்துச் சித்தசன்படுத்துஞ் சங்கடம் யாவும் பங்கமாயேகவிலாவினி லென்னை மருவியே நல்லமருந்துவ மிகுத்தசுகத்தினையளிப்பாயாக.

(சதாரம் சொல்-தரு.)

விரசமானவார்த்தைவேண்டாம் விட்டுவிடடா

என்ற ட்ராமாப்பதத்தின் வர்ணமெட்டு.

இ-ம்-காபி-தாளம்-ரூபகம்

பல்லவி.

இவராரோநம்மைக் காவிற்கண்டு
இச்சைகொள்கிறார் (இவார)

அநுபல்லவி.

செவியில்விழு அவலவார்த்தை
செப்பப்போகுமோ
கிவாருடன் இவர்மொழியைக்
கருதலாகுமோ (இவ)
பதிவிரதை மதிகெடுமோற்
பங்கமாகுமே
அதிவிரைவிற் பதியைநாடி
யகலவேணுமே (இவ)
அந்திதனிற் கொத்தளத்தில்
அணிந்துகொள்ளவே
சுந்தரஞ்சேர் சுத்தமலர்
சொகுசாய்க்கின்றுவோம் (இவ)

(சதா-வ-ம்.) ஆ-ஆ-என்னஈவலித்தியாசம். காமித்த சுந்தவனத்திற் புஷ்பங்கொய்யவந்தவிடத்தில் யாரோவோர் சுந்தர

புருஷன் வந்து நம்மைக்கண்டுமையல்கொண்டுபுத்திதடுமாறிப் பித்தனைப்போற்பிதற்றிப் புலம்புகின்றார். இவர்பாவிக்கும் அபலமானமொழியை காதெடுத்தாகக்கவனிக்கவேண்டும், அப்படிக் கவனிக்கும்பக்ஷத்தில் நமதுபதிவிரதாதர்மத்திற்குப் பங்கமுண்டாகுமாதலின் அந்தியிற் சூடிக்கொள்வதற்கினைசந்தசுந்தமலர்களைப் பறித்துக்கொண்டு விரைவிற் கிருகத்திற்குச் சென்றுவிடுவோம்.

—✠—

(சுவேதச்சந்திரன் சொல்-தரு.)

மன்னுவுன்னைக்கண்டநாள்முதலாய்மையல்மிகக்கொண்டேனே

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இ-ம்-கமாஸ்-ஏகதாளம்

பல்லவி.

மங்கையேநீயிங்கிதமுடனே
சங்கடத்தைத்தீரடி.

அநுபல்லவி.

தங்கமலர்கொய்யவந்த சுந்தரிகண்ணூற்பாரடி-என்னைச் (மங்)
சொந்தமாயெண்ணிக்காரடி.
இந்திரவைபோகமினைத்தும் எந்திமாயுனதாகுமே-என (மங்)
திடர்களென்றுபோகுமே
மன்மதனென்மீதிற்சும்மா வாளிகளெய்கிறானடி-மிகு (மங்)
வாதைகள்செய்கிறானடி.
காதலினால்வாடிவாடிக்கணைகள்மெத்தவுந்தோணுதே-மிகு (மங்)
காமவெறிகள்பூணுதே
சித்ரகவிமுத்தையன்சொன்ன செந்தமிழ்ப்பதங்கேளடி-நாம் (மங்)
சேர[illegible]டி.

(சுவேதச்சந்திரன் சொல்லுதல்.)

கலிவெண்பா.

ஒட்டாரமானே புனையாதசெம்பொன்னே
வாடாதபூவே மரகதமேட்டிதடக்

இடையாதபஞ்சவர்ணக்கிளியேகோது
படையாதபுலகண்டப் பாகே—எங்கடையாதெந்
சித்திரமேகாமன் திரவியமேமோகசற்ச
முத்திரமேகட்டாணி முத்தமே—அத்திரவென்

ஆகயமேவாழ்வே யரசேயப்சிமதூர
போகமேயான்செய்த புண்ணியமே—மோகினியே
கண்ணேவிரகக் கருவிலமேயமுதப்
பெண்ணேகலவிப்ர தாபமே—ஒன்றுதலே

கேகமேயென்றென்ற கீர்த்திப்பேன்வாழுவனு
ராகதியாகர்தர்தூ லாகாதே—வேகமதன்
காவிக்கிணையுங் கருப்புவில் லுக்கூதாற்
சேவித்துவலைக்கின்றிச் சேரேனே—பூவுலகில்

சொன்மருவுமின்கொங்கைத்துர்க்கத்திலென்னைவைத்தால்
மன்மதனுர்கொல்லவச மாவேனே—பொன்மயில்போல்
நின்றமானேநீ இலமேலெழுந்தபதங்
கன்றினுலென் மனது கன்றுதே—ஒன்றிபரை

மாத்திரையின்ப மகிழ்ந்தெனக்குப்பாவித்தென்
கோத்திரமெல்லாமடிமை கொண்டருள்வாய்—பூத்திகழுந்
தேனேபிறக்குஞ் செனனமெலாம்பாலடிமை
தானேயென்றேற்றிருக்கண் சாற்றுவாய்.

(சுவே-வ-ம்.) ஆ ஆ. மானே யானெவ்வளவோபரிதாபப்பட்டுங்கிஞ்சித்தேனும்நெஞ்சமிளகி மறுவார்த்தைகூறாது மௌனஞ்சாதிக்கிறதேயே இதுவுனக்குத்தர்மமா, பார்கஜேந்திரசம்பத்தையுடைத்தாகிய அரம்பாஸ்திரிகளைப்போன்ற பெண்களனைவரும் உன்னை வணங்கி வேண்டிய தொண்டுகளைச் செய்து போற்றிவரவும், தெய்வபோகத்தைகிகர்த்த ராஜவைபோகமுற்றினும் நீயனுபவித் தக்களித்திருக்கவுஞ்செய்வேன், ஹே காதலுக்குக்தயாதேஇன்னும்பார்,நீயித்தருணத்தில்மனத்தில்விருப்புற்றவைகளைத் தெரிவிப்பாயாகில் அவைகளைத்தகையறாயி

ருப்பினும் ஒருநிமிஷத்திலேயே தேடித்தாவல்லேனுதலின் என்னை வேற்றுமையாயென்னு துன்மதகோஷ்டியிற் சிக்கிக்காதல் கொண்ட என் வேதனையைத்தீர்த்து ரக்ஷிக்கவேண்டும் இல்லாவிட்டால் உன்னைச் சாமான்யத்தில் விடமாட்டேன் பெண்ணேவம்புசெய்யாமலன்பு கொண்டணைதற்கென்சொல்கின்றனை.

(சுதாரம் சொல்தரு.)

தும்-ஆஜாஜானி-ஆஜாச்சி-டக்ரகிராத்

என்ற இந்துஸ்தானியின் வர்னமெட்டு.

இராகம்-காம்போதி-ஏகதாளம்

பல்லவி.

இது-எதுஇந்தவாது நாமிருக்கலாகாது

அநுபல்லவி.

இவர்-காதலுடன் குதமொழி கழறுகிறாரே (இதுஎது)

சரணம்.

இவர்-அடுத்துவந்து விட்டாரினி யவதிப்படுவோம்
நாம்-எடுத்தமலர்போதும்-நக ரேகிவிடுவோம் (இது-எது)

(சுதா-வ-ம்.) ஆ ஆ-இதுவென்ன விபரீதமாயிருக்கின்றது. இவர் பாஷிக்கும் அபலமான வார்த்தைகளை நாம் செவியிலேற்றுக்கொண்டிருக்கின்றோமென் றநம்பிக்கையின்பேரில் நம்மருகில் வந்து வீணன வாதுமொழிகளைச்சொல்லுகின்றார். (இருக்கவிடங்கொடுத்தாற் படுக்கவிடங்கேட்பார்க) ளென்றபழமொழிபோல இனிமேலி நாமிங்கு காலதாமதஞ் செய்யும்பக்ஷத்தில் நம்மைப்பலோத்காரஞ்செய்து துன்பப்படுத்துவார்போல காணப்படுகின்றது. ஆகையால் நாம்பறித்த மலரே போதுமானது. இதைபெடுத்துக்கொண்டு இப்பொழுதேயிந்தவனத்தைக்கடந்துகிரகத்தைநாடி போய்விடுவோம்.

சதாரம் ஓடிப்போனவுடன் சுவேதச்சந்திரன் புலம்பல்.

சுவேதச்சந்திரன் சொல்-தரு.

மின்னுபாசி எட்ல உந்தரு

என்ற க்ருத்திகையின் வர்ணமெட்டு.

இ-ம்-பலஹம்ஸா-தாளம்-ஆதி

பல்லவி.

என்னவிந்தை-யிளகுதேசிந்தை

அநுபல்லவி.

கன்னியிப்போது காணுதேதே (என்ன)

சரணம்.

மலரதுகொய்த மங்கையுந்தானே
விலகியேசென்ற விதாதியேனே (என்ன)

(சுவே-வ-ம்.) ஆஆ-என்னுச்சர்யம். நம்மெதிராகச் செங்கையால் மலர்கொய்துகொண்டிருந்த மங்கையானவள் இப்போது காணப்படவில்லையே. ஆஆ-இருந்தாற்போலிருந்து மறைந்தாற்போல் மறைந்து எப்படியோ நம்மைவிட்டுத் தப்பிச்சென்றுவிட்டனளே. ஆஆ-நம் சிந்தையானது நொந்து தவிக்கின்றதே. ஆஆ-கொவ்வையிதழாளெவ்வழிசென்றுளோ தெரியவில்லையே இதற்கென்செய்கின்றது.

(சுவேதச்சந்திரன்சொல்-தரு.)

இத்தனை கோபமாகுமா

என்ற பதத்தின் வர்ணமெட்டு.

இ-ம்-பியாகு-தாளம்-ஆதி

பல்லவி.

எங்குநான்கண்டுதேடுவேன்-ஏந்திழையை
எங்குநான்கண்டுதேடுவேன்

அநுபல்லவி.

அங்கசன்கை யங்குமெழிற்
திங்கள்முக மங்கையை (எங்கு)

சரணங்கள்.

ஆசையெனுங்காமவலை வீசினதல்லாதுமொழி
பேசமனமில்லாமலே கூசிமலர்கொய்துபழி
மோசமதுசெய்துசென்ற தேஜசுளமங்கையை (எங்கு)

கன்னிகையைக்கண்டதல்லால் இன்னவளென்றேயறியேன்
பொன்னகரமோவலது இன்னகரமோ தெரியேன்
என்னைமயலாக்கிவைத்த அன்னநடைமங்கையை (எங்கு).

இப்படிச்செய்வாளவளே சொற்பனமதுங்காணேனே
செப்படிவித்தைபோலவே நாடகமதாகவேதானே
தப்பியெனைவிட்டகன்ற விற்புருவமங்கையை (எங்கு)

(சுவே-வ-ம்.) ஆஆ-இந்நந்தனவனத்தில் மலர்கொய்யவந்து சித்தையைக் கவர்ந்த சந்திரவதனச் சுந்தரமாதை நாம் நேத்திரத்தாற் பார்த்ததல்லாது, அவள் வார்த்தையைக் கேட்கப் பாத்திரனல்லாமற் போய்விட்டோமே, அவள் இன்னகரமோ, அல்லது பொன்னகரமோ, யாதொன்றுந் தெரியவில்லையே! ஆஆ-அக்கன்னிகை யின்னவளென்று கண்டறிந்தோமில்லையே, ஆஆ ஆசையைவீசிப் பேசிடக்கூசி மோசமாய்ச்சென்ற தேஜசுமிகுந்த செப்புமுலையாள் இப்படி நம்மைத் தப்பித்துக்கொண்டு சென்றவாளென்று சொற்பனங்கூடக் கண்டிலேமே, ஆஆ-சங்கடமளித்த மங்கையை யினிமேல் எங்குகண்டு தேடப்போகின்றோம்.

(சுவேதச்சந்திரன் சொல்-தரு,

கைசஜாருடாலாரியா-மைனஜாயுரேசையா

என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.

இ-ம்-செஞ்சுருட்டி-இந்துஸ்தானி-ஆதிதாளம்

பல்லவி.

கட்டழகுமாதேயென்னை விட்டுவிட்டுப்போனையடி

அநுபல்லவி.

கட்டிப்போவாயென்றுநானே ஜாடைபோல் நமபியேனே(கட்)

சரணங்கள்.

தோதகஞ்செய்தேகிவிட்ட பாதகிநானுசைப்பட்ட
காதலைத்தவிர்த்திடாது சூதுசெய்துபோனதேது (கட்)
மனமிகவுருகுதடி மயக்கமும்பெருகுதடி
கனவுகண்டதுபோலாச்சே கன்னிகையேயெந்தன்பேச்சே
எந்தன்பாபம்பொல்லாதடி யினிமேலுயிர்கில்லாதடி
வந்துசற்றுகண்பாரடி மையலதனைத்தீரடி (கட்)

(சுவே-வ-ம்.) ஆஆ-தோதகஞ்செய்தேகிய பாதகி, நீ என்னைவிட்டு எப்படித் தப்பித்துக்கொண்டு சென்றனையோ, தெரியவில்லையே, ஆஆ-நீ இப்படிச்செய்வாயென்று யான் முன்னமேயறிந்திருக்கும் பக்ஷத்தில் உன்னை யொருக்காலும் அப்பாற்செல்லவிட்டிருக்கவே மாட்டேனே, ஆஆ-நெஞ்சமிளகா வஞ்சகி, யான் கெஞ்சியும் பஞ்சைபோற் பாதவிக்கவிட்டுச் சென்றனையே, இதுவுனக்குத்தர்மமா, ஆஆ-உன்னைவிட்டென்னுயிர் நிலைதரிக்குமா, ஆஆ-என்பாபம் உன்னைப் பிடிக்காதா, ஆஆ-என் மனமுருகி மயங்கித்தவிக்கின்றதே, அடிபாவி ! யானுன்னிடஞ் சம்பாஷித்ததெல்லாம் கனவுகண்டவினைவுபோலாயிற்றே, ஆஆ சற்று வந்து கண்ணுற்பார்த்துக் காதலைத்தீர்த்து ரக்ஷிக்கலாகாதா,

சுவேதச்சந்திரன் புலம்புவதைக்கேட்ட
நந்தவனக்காவற்காரன் சொல்-தரு.

பசிபத்தஹரா-நைனஹரா-ரௌரதனஹரா
என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.

இ-ம்-தேசிகதோடி-தாளம்-சாபு

பல்லவி.

இவர்-வெம்பியேபுலம்பியழும் விவரமறியேன்

அநுபல்லவி.

கொம்பனைமார் இங்குமலர்
கொய்யவந்தாரோ
அன்புடனேமி கண்டுமைய
லாகிநொந்தாரோ இவர் (வெம்)

காவிலிதை யன்றிவேறு
காரணமேது
பாவமிவர் கூவுந்தொல்லை
பார்க்கவொண்ணாது இவர் (வெம்)

சொந்தமான தங்கையிடம்
பிரிதமாய்ச்சென்று
விந்தையான இந்தச்சேதி
விளம்புதல்நன்று இவர் (வெம்)

(காவற்காரன் சொல்-வசனம்.) ஆஆ-இந்தநந்தவனத்தை வேடிக்கை பார்க்கவந்த நமது ராஜபுத்ரனைவர் ஏதோவோர் பெண்பாலை நினைத்து புலம்பிக்கொண்டிருக்கின்றார். அந்தக் காரணத்தை யோசிக்குமிடத்து யாரோவோர் ரூபலாவண்யமுள்ளபெண் இங்கு புஷ்பம்பறிக்கவந்திருக்கவேண்டும். இவர் அவளைக்கண்டு காதல்கொண்டு வார்த்தையாடியிருக்கவேண்டும், அவள் இவர்வார்த்தைக் குடன்படாமற் சென்றிருக்கவேண்டும். அதனாலிவர் மையல்கொண்டு மயங்கிப் புலம்பிக்கொண்டிருக்கவேண்டும். இதைத்தவிர இவ்வனத்தில் வேறுகாரணஞ் சொல்லயாதொரு ஞாயமுமேற்படவில்லை. இவர் புலம்புதைப் பார்க்கச்சகிக்கமுடியாமலிருப்பதால், இப்பொழுதே நமது ராஜாவிடஞ்சென்று இந்தச்சங்கதியைத் தெரிவித்துவருவோம்.

சாரங்கஹஸ்தமகாராஜாவின் மூன்றாவது சபை.

(சார-வ-ம்.) காவலாயுற்றசேவகன்யாவன்.

(சேவ-வ-ம்.) பார்த்திபா அடியேன் காத்திருக்கின்றேன்.

(சார-வ-ம்.) இமைப்பொழுதினுக்குள் அமைச்சனை யழை த்து

(...த்தியபடியே யழைத்துவருகின்றேன் மக ராஜ.

(மந்-வ-ம்.) இன்னில் போற்று மன்னனே மந்திரிவந்தனம் புரிகின்றேன்.

(சார-வ-ம்.) ...வாண ப்ரதான, யோசனைக்கிசைந்த ஆச னத்தமரும்.

(மந்-வ-ம்.) சாற்றியபடியே வீற்றிருக்கின்றேன்.

(காவற்காரன் ராஜசபைக்கு வருதல்.)

(காவ-வ-ம்.) காவலாயுற்ற சேவகர் யாவர்.

(சேவ-வ-ம்.) காவற்காரா காரணம்யாது.

(காவ-வ-ம்.) மகராஜ என்செய்கின்றார்.

(சேவ-வ-ம்.) சிம்மாதனத்தில் வீற்றிருக்கின்றார்.

(காவ-வ-ம்.) நல்லது யான் வந்திருப்பதாகத் தெரிவிக்க வேண்டும்.

(சேவ-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் ※ காவற்காரன் வந்திருக்கின்றான் மகராஜ.

(சார-வ-ம்.) அட்டியில்லாது விட்டுவிடுவாயாக.

(சேவ-வ-ம்) கட்டளைப்படியே விட்டுவிடுகின்றேன் மக ராஜ * வரும்படி யுரைத்தார் மகிழ்வுடன் செல்வாய்.

(காவ-வ-ம்.) நன்று அப்படியே சென்று வருகின்றேன் ※ சுந்தரமன்னா வந்தனம்புரிகின்றேன்.

(சார-வ-ம்.) கல்யாண காவற்காரா, ஹே காவற்காரா என் ன விசேஷம்.

(காவற்காரன் சொல்-சரு.)

எங்கிருந்தோமிங்குவந்த தெப்படிநாமே

என்ற இந்த்ரசபாவின் வர்ணமெட்டு.

இ-ம்-காபி-தாளம்-ஆதி

கண்ணிகள்.

நந்தனவ — னந்தனிலே

நாதா வில்லேனோ

மைந்தன் கொண்ட — விந்தைதனை

வழுத்துவேன்கேளும்

தையல்மீது — மையல்கொண்டு

தவிக்கிறார்கேரே

பையவந்து — செய்கையெல்லாம்

பார்த்திடுவீரே

(காவ-வ-ம்.) ஆஆ-மகாராஜ். தங்கள் புத்ரசிகாமணியான வர் நந்தனவனத்திற்கு வந்து வேடிக்கையா யுலாவிக்கொண்டிருக்கும்போது ஏதோவோர் மங்கையின்மீது மையல்கொண்டு மயங்கித் தவிக்கின்றார். அந்த விந்தையை வந்து பாருங்கள் மகாராஜ்.

(சார-வ-ம்.) அப்படியா வெகு சேர்த்தியாயிருக்கின்றது.

(சாரங்கஹஸ்தமகாராஜன் சொல் ஜாவளி.)

மாயாகாணிமோசமேலா-ஏமந்துனேசெலி

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.

இ-ம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

மைந்தனது சேதிதன்னை மந்திரிகேட்டீரோ

அநுபல்லவி.

நந்தவனத்தில் வந்ததெம்மாதோ
காதலினற்கொண்ட வேதனையேதோ (மைந்த)

(சார-வ-ம்.) ஹேபிரதான். எனது வத்சனானவன் ஏதோ நந்தன வனத்தில் மங்கையின்மீது மையல்கொண்டு மயங்கித்தவிக்கின்றானென்று காவற்காரன் செப்பிய கற்பனையெப்படியிருக்கின்றது பார்த்தீரா ப்ரதான்.

(மந்-வ-ம்.) மகாராஜ பாருங்கள். (குண்டிகாய்த்தாற் குதிரை வைக்கோற்தின்னு) மென்பதுபோல, நமது வத்சனானவன் இப்பொழுது ஐங்கணைக்கிழவன் செய்யுஞ் சங்கடத்திலகப்பட்ட நிமித்தம் தையல்மீது மையல்கொண்டு தவிக்கின்றான்போலிருக்கின்றது. நல்லது இனிமேல் நாம் கோரியகாரியம் நிறைவேறுமென்பதற்கு யாதுஞ் சந்தேகமில்லை யாதலால் யானிப்பொழுதே நந்தனவனத்திற்குச்சென்று மைந்தனுடைய மர்மத்தைத் தெரிந்துகொண்டு வருகின்றேன், விடைகொடுங்கள் மகாராஜ்.

(சார-வ-ம்.) நன்று அப்படியே சென்று வாரும்.

சுவேதச்சந்திரன் மறுபடியும் புலம்புதல்.

(சுவேதச்சந்திரன் சொல்-தரு.)

வாராயோவாராயோகண்ணா-வைகுந்தமன்னா

என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.

இ-ம்-காதகௌமக்கிரியை--தாளம்-சாபு

பல்லவி.

வாராயோவாராயோமின்னே-நீயெந்தன்முன்னே
வாராயோவாராயோ மின்னே

அநுபல்லவி.

சோரமன்மதவேள் போராடுகிறான்கேள்
தாரகமாகவேயின்னாள் நீயெந்தன் முன்னே (வா)

விட்டுவிட்டுப்போனாயடி வேறுமுகமானாயடி
தட்டுக்கெட்டுநிற்கிறேனடி நீயெந்தன்முன்னே (வா)

உன்னைநினைந்துமனம் உருகுதடியேதினம்
என்னைக்கைவிடுவதோகனம் நீயெந்தன்முன்னே (வா)

பரிதாபமதுகண்டு பக்ஷமதுமிகக்கொண்டு.
வருவாயேற்புண்ணியமுண்டு நீயெந்தன்முன்னே (வா)

புத்தமிர்தம்போலவிதம் முத்தையன்சொன்னபதம்
இத்தகையேகேட்கச்சம்மதம் நீயெந்தன்முன்னே (வா)

(சுவே-வ-ம்.) ஆஆ-சண்டாளி! மன்மதன் வந்து கன்மனைப்போல பகழியைத்தூவி அகமதைநோகச்செய்கின்றானே.

(சுவே-வ-ம்.) ஆஆ,சண்டாளி! மன்மதன் வந்து கன்மனைப்போல பகழியைத்தூவி அகமதை நோகச்செய்கின்றானே, ஆஆ-நீயெகதியென்றிருக்கச் சதிசெய்து சென்றுவிட்டனையே, ஆஆ-உன்னை நினைந்து உருகித்தவிக்கின்றேனே, ஆஆ-நான்படும்பரிதாபங்கண்டு பக்ஷமுட்கொண்டு முன்னாகவந்து முத்தந்தந்து ரக்ஷிக்கலாகாதா, அடிபாவி யானுன்னைவிட்டேன்னையாயுயிர்தரித்திருக்கப்போகின்றேன்.

நந்தனவனத்திற்குச்சென்ற மந்திரியானவன்
சுவேதசந்திரன் புலம்புவதைக்கண்டு
சம்பாஷித்தல்.

மந்திரி சொல் ஜாவளி.

மோடியேலரா-நாசாமிநாபை-மோடியேலரா
என்றஜாவளியின் வர்ணமெட்டு.

இ-ம்-காபி-ஏகதாளம்

பல்லவி.

என்னகாரணம்-என்மன்னன் மைந்தனே
என்னகாரணம்

அநுபல்லவி.

உன்முகம்வாடியே பின்னமாயிருப்பதும் (என்)

சரணங்கள்.

நந்தனவனத்திற்கு வந்தசமயத்திலே
சிந்தைமெலிந்துமிக நொந்தயர்ந்திருப்பதும் (என்)

(ம-வ-ம்.) ஆஆ-கண்மணி! நீயேதோ நந்தனவனத்திற்கு விளையாட வந்தசமயத்தில் செந்தாமரைக்கமலம்போன்ற நின் வதனமானது வாடி மனமயங்கிப் பற்பலவிதமாகப்புலம்பிக்கொண்டிருக்கவேண்டிய காரணம்யாது, உனக்கு யாது சங்கடம்நேரிட்டது கண்மணி.

(சுவேதசந்திரன் சொல்-தரு.)

அடிமைநானுன்னடைக்கலமினியாகிலுமெனையாளையா
என்ற கீர்த்தனத்தின் வர்ணமெட்டு.

இ-ம்.தேசிகதோடி-தாளம்-ரூபகம்

கண்ணிகள்.

எந்தனுடைய சிந்தைவருத்தம்
என்னசொல்லுவேன் மந்திரி
தந்தையிடத்தில் விந்தையாகிய
சங்கதிசொலுந்தந்திரி

வாலரதியைப் போலவொருபெண்
வந்தாளிவ்வனந்தன்னிலே
கோலமாமலர் சாலவேயவள்
கொய்தனளெந்தன் முன்னிலே
மாதுமீதில்யான் காதல்கொண்டெனை
மருவும்படிக்குக்கோரியும்
ஏதும்விடைசொல் லாதுமறைவாய்
ஏகினளந்தநாரியும்
கன்னிகையவள் இன்னவூரென்று
கண்டிலேனென்னசெய்குவேன்
பின்னையினிமேல் என்னவிதமாய்
விட்டுத்தனியாயுய்குவேன்
கருவமன்மதன் விருவிரென்றெய்யும்
கணைகளதுபொல்லாதையா
அரிவைதனைநான் மருவிடாவிடில்
ஆவியினியில்லாதையா

(சுவேதசந்திரன் சொல்லுதல்.)

அகவல்.

தந்தையினிடத்திற் சிந்தைமகிழ்ந்து
விந்தையோசனைகள் விளம்புமந்திரியே
மனத்தினி லுற்ற வருத்தமென் சொல்வேன்
தனித்துநானிந்தத் தாவனந்தன்னில்
உற்றுத்தென்றலிலே யுலாவியேபின்னும்
மற்றவேடிக்கை வகையெலாம்பார்த்து
வருகிறபோது மாமலர்ச்செடியின்
அருகினில்ரதிபோ லழகுளவொருபெண்
நின்றுசெவ்வந்தி நெகிழ்ந்திடுரோஜா
மன்றல்சேர்முல்லை மல்லிகைமுதலாய்
பூவதுகொய்யும் புதுமையைக்கண்டு
ஆவலுங்கொண்டேயணைந்திடக்கேட்டேன்

பாவையென்மொழிக்குப் பதிலுரையாமல்
காவிலெப்படியோ காணுதகன்ருள்
கன்னிகைதன்னைக் கண்டுபிடிக்க
இன்னவுமென்றே யேழைகானறியேன்
இன்றுமாதாசி யெந்தனைவிட்டு
சென்றநேரமதாய்த் தியங்குதென்மனது
தையலைவிட்டுத் தனிமையாயிருக்க
ஐயனேயெந்த ஞலினிபாகா
பாவிவேள்விடுக்கும் பகழியைத்தடுக்க
யாவரால்முடியு மாகையினுலே
கயல்விழிமாதைக் காக்கிடேலெந்தன்
உயிராநில்லா தன்மைகாணிதுவே.

—✠—

(மந்திரி சொல் தரு.)

இதுதானோவிரகமென்பது அறியாதிருந்தேன்வருந்துதே
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்
பல்லவி.

இதுதானோ பெரியகாரியம்-எந்தன்-சுவேதச்சந்த்ரனே
இதுதானோ பெரியகாரியம்

அநுபல்லவி.

மதியைநேர்முக ரதிபோலிவ்விடம்
வந்தவ ளிந்தவூர் வஞ்சிதானஞ்சாதே (இது)

சரணம்.

வெந்துமனம் நொந்துகாமம்
மீறினுல்மிக மாறினுல்நேமம்
இந்தவேளையே சந்தமாமுலை
எந்திழையாளுடன் வாழ்ந்திடச்செய்குவேன் (இது)

(மந்-வ-ம்.) ஹே சுவேதச்சந்த்ரா இதுதானு பெரியகாரிய மென்று நினைத்து வருந்தப்படுகின்றனை. பார் அந்த மங்கையா

ள்வள் எப்பொழுது நமது நந்தனவனத்தில வந்து புஷ்பங்கொய்தனளோ, அவள் நமது நகரமாயிருக்கவேண்டுமேயன்றி தூரதேசத்திலிருந்து இங்குவந்து புஷ்பமெடுக்க யாதொருநியாயமுமேற்படவில்லை. ஆகையால் நீ இப்போதென்னுடன் நகரத்திற்குவரும்பக்ஷத்தில் அந்த மங்கை எந்தக்கிரகத்தி லிருந்தபோதிலும் தந்திரமாய்க் கொண்டு வந்துபடி. செய்து உனக்கு வேட்டல்செய்து வைக்கின்றேன் கண்மணி, இதற்கென்சொல்கின்றனை.

(சுவே-வ-ம்.) அப்படியானுல் செப்பியபடியே யிப்பவேவருகின்றேன் பிரதான் வாரும் செல்வோம்.

(மந்-வ-ம்.) அப்படியே செல்வோம்.

சாரங்கதரவ்த மகாராஜாவின் சபைக்கு
மந்திரியுஞ்சுவேதச்சந்திரனும் வருதல்.

—◆—

(மந்-வ-ம்.) மகாராஜ் மந்திரிவந்தனம் புரிகின்றேன்.

(சார-வ-ம்.) கல்யாண் பிரதான் யோசனைக்கின்சந்த ஆசனத்தமரும்.

(மந்-வ-ம்.) சாற்றியபடியே வீற்றிருக்கின்றேன் மகாராஜ்.

(சுவே-வ-ம்.) தந்தையே மைந்தன் வந்தனம்புரிகின்றேன்.

(சார-வ-ம்.) கல்யாண வத்ச என்னிடையினில்வந்துதொடையின்மேல் வீற்றிருப்பாயாக.

(சுவே-வ-ம்.) சாற்றியபடியே வீற்றிருக்கின்றேன் பிதா.

(சாரங்கதூஸ்தமகாராஜன் சொல் தரு.)

மாதேகியென்னோடுகூட வனத்துக்கேகலாம் வாடி

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இ-ம்-இந்துஸ்தானி-காபி-ஏகதாளம்

பல்லவி.

நடந்தகாரியமேது நவில்வீரென்முன் [illegible]போது

அநுபல்லவி.

அடர்ந்தநந்தவனத்தில் அமைச்சாவிந்தத்தினத்தில் (நட)

(சார-வ-ம்.) ஹேப்ரதான் இன்றைய்த்தினம் நந்தனவனத்தில் நடந்த விந்தையாது ப்ரதான்.

(மந்திரி சொல்-தரு.)

சுந்த்ரவதனு என்னைச்சேர மையல்தீரவாடா

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இ-ம்-இந்துஸ்தானி- மோஸ்-தாளம்-ஆதி

பல்லவி.

மன்னா நான்சொல்வேனந்த-மர்மமதைக்கேளுமையா

அநுபல்லவி.

இன்னாள்நந்தவனத்தில் இடுக்கண்கொண்டவிதத்தை (மன்)

சரணங்கள்.

மாமலர்கொய்யவந்த மாதொருத்தியைக்கண்டானும்
காமன்விடுங்கணையாற் காதல்மிகவுங்கொண்டானும் (மன்)

மையலாலவளிடம் வார்த்தைகளுபாடினானும்
தையலதையறிந்து தப்பியகன்றோடினாளாம் (மன்)

மருமலர்ச்சோலையெல்லாம் மைந்தன்மிகத்தேடினானும்
தெரிவையைக்காணாதாலே சித்தமதுவாடினானும் (மன்)

கன்னியின்னாளென்ற காரணமுந்தெரியானும்
பின்னையவளையாவிட்டால் மேவுமுயிர்தரியானும் (மன்)

ஆதலினாலேயந்த மாதைமணஞ்செய்யவேணும்
பேதகமாயிருந்தாற் பின்னால்மிகுதுன்பங்காணும் (மன்)

(மந்-வ-ம்.) ஆ ஆ-மகாராஜ் பாருங்கள் நமது வத்சனானவன் நந்தனவனத்திற் புஷ்பங்கொய்யவந்த ஒருமாதைக்கண்டு மையல்கொண்டு மருவும்படி கேட்டானும், அவள் மறுமொழி புகலாது மறைந்து சென்றனளாம், தேடிப்பார்த்துந் தென்படவில்லையாம். அவளைக் கண்ணாற் பார்த்ததேயல்லாது பெண்ணாளின்னாளென்பது தனக்குத்தெரியாதாம், அவளை மருவாவிடில் உயிர்நிலை நிற்கமாட்டாதென்று சொல்கின்றான். ஆதலின் அவளை யிவனுக்கு அவஸ்யம் விவாகஞ்செய்து வைக்கவேண்டுமகாராஜ்.

(சார-வ-ம்.) அவளின்னவளென்று தெரியாதிருக்கும்போழுது நாமெவ்விதம் அம்மங்கையைத்தேடிவேட்டல்செய்துவைக்கக்கூடும் பிரதான்.

(மந்-வ-ம்.) மகாராஜ் பாருங்கள் எப்பொழுது நமது நந்தனவனத்திற்கு வந்து புஷ்பமெடுத்தாளோ அவள் இன்னகரமாயிருக்கவேண்டுமேயன்றித் தூரதேசத்திலிருந்து இங்குவந்து புஷ்பமெடுக்க யாதொரு ஞாயமும் ஏற்படவில்லை. ஆதலின் இப்பொழுது நாது அன்னச்சத்திரத்தில் விருந்து செய்வதாயும் அதற்காக இன்னகரிலுள்ளவர்களில் ஐந்துவயதிற்கு மேற்பட்ட ஆண்பெண்ணடங்கலும்வந்து போஜனஞ் செய்துவிட்டுப்போகவேண்டுமென்று பறைசாட்டுவிக்கும் பக்ஷத்தில் போஜனஞ்செய்வதற்கு அந்த மங்கையும் வருவாள். அப்பொழுது நமதுவத்சனவ்வுடையாளைத் தெரிந்துகொண்டு அவள் தாய்தந்தையரிடங்கேட்டு விவாகத்தை முடித்துவிடுவோம் மகாராஜ். இதுதான் நல்ல யோசனையாக விருக்கின்றது.

(சா்ர-வ-ம்.) நல்லது அப்படியே யதற்குவேண்டியஏற்பாடு செய்யும் ப்ரதானே.

(மக்-வ-ம்.) செப்பியபடியே யிப்பவே செய்கின்றேன் மகராஜ். * அடா சேவகா நமது நகரத்திற் பறைசாட்டவேண்டிவ திருப்பதால் நமது அரண்மனைத் தோட்டியை யதிசீக்கிரமழைத்துவருவாயாக.

(சேவ-வ-ம்.) செப்பியபடியே யிப்பவே யழைத்துவருகின்றேன் ப்ரபு.

தோட்டிவரும் ஜாவளி.

செவியாசாலனே
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
இ-ம்-வசந்தம்-தாளம்--சாபு
பல்லவி.

தோட்டியும்வந்தானே-மகாஜரிதமுடனிதோ
தோட்டியும்வந்தானே

அநுபல்லவி.

தாட்டிகமுடன்கொலுச் சபைதனிலேயிதோ (தோ)

சரணம்.

இடையிற்பறையுங்கட்டி யிருகையிலுங்கெட்டித்
தடியதினலேகொட்டிக் கடதடெனவிதோ (தோ)

(தோட்டிசொல் வசனம்.) தாட்டிகமன்று தோட்டி வந்தனம் புரிகின்றேன்.

(சார-வ-ம்.) கல்யாண் தோட்டி.

(தோட்-வ-ம்.) தந்திரமிகுந்த மந்திரி ப்ரபுவே. வந்தனம் புரிகின்றேன்.

(மக்-வ-ம்.) கல்யாண் தோட்டி.

(தோட்-வ-ம்.) என்னை யழைத்துவரும்படி யாக்ஞாபித்தருளிய காரணம் யாது ப்ரபு.

(மக்-வ-ம்.) அடா தோட்டி, நமது அன்னசத்திரத்தில் இன்றையத்தினம் நமது நகரவாசிகளனைவருக்கும் விருந்துசெய்ய போகின்றமையால் ஐந்துவயதிற்கு மேற்பட்ட ஆண்பெண்ணனைவரும் வரவேண்டுமென்றும், அப்படி வாராதவர்களைச் சிறையிலடைக்கப்படுமென்றும் யாவர்க்கும் பரிஷ்காரமாய்த் தெரியும்படி பறைசாட்டி வருவாயாக.

(தோட்-வ-ம்.) செப்பியபடியே யிப்பொழுதே பறைசாட்டி வருகின்றேன் ப்ரபு.

(மக்-வ-ம்.) அடா சேவகா! நீ நமது அன்னசத்திரத்திற்குச் சென்று அங்குற்ற பரிஜாரகர்களைக்கண்டு இன்றையத்தினம் நகரவாசிகளுக்கு விருந்து செய்யும்படி அரசனுத்திரவாகி யிருக்கின்றமையால், அதிசீக்கிரத்தில் அறுசுவைப் பதார்த்தத்துடன் யாவர்வந்தனவர்க்கமாய்ச் சமையற்செய்து வைத்துக்கொண்டு யாவர்வந்தபோதினும் யாதொருதடையின்றிப்போஜனமளித்து அவர்களைவிடம் ராஜசபைக்கு வந்து உத்திரவு பெற்றுக்கொண்டு போகும்படி யனுப்பவேண்டுமென்று தெரிவித்து வருவாயாக.

(சேவ-வ-ம்.) இப்பொழுதே செப்பிவருகின்றேன் ப்ரபு.

தோட்டி பறைசாட்டுதல்.

அகவல்.

இன்னகராத்தோர் எல்லவருக்கும்
மன்னனுக்கினையை வழுத்துவேன் கேளீர்

ஊரார்க்கெல்லா மொருதினமின்று
சீராய்விருந்து செய்வதினாலே
ஐந்துவயதுக் கதிகமாயுள்ள
மைந்தர்கள்பெண்கள் மற்றதாய்தந்தை
அனைவரும்வந்தே யன்னசத்திரத்தில்
புனிதமாயன்னம் புசித்துவேளிடத்தில்
விடையதுபெற்று வெளிசெலவேண்டும்
தடையதுசெய்து தான்வராதிருந்தால்
சிறையினிலடைக்குந் தெண்டனை கிடைக்கும்
இறைவனுத்திரவு மீதறிவீரே.

நாகரத்தினஞ்செட்டியும், மனைவிமரகதவல்லியும்,
மகன் சதாரமும், மகள்மூடசிகாமணியும்,
போஜனஞ்செய்ய அன்னச்சத்திரத்திற்கு வருதல்,

நாகரத்னஞ்செட்டி சொல்தரு.
சீராரவையில்வளர் சிறந்தோர்களேவந்தனம்
என்ற உவாக விலாமிர்த ஜாவளியின் வர்ணமெட்டு.
இ-ம்-இந்துஸ்தானி-காபி-தாளம்-சாபு
பல்லவி.
மாதேயென்னகோளடி- வழங்கும்பறைசேளடி-

அநுபல்லவி.
ஏதோவிருந்துபோலே யிபம்பிடிப்பதாலே (மாதே)

சரணங்கள்.
மன்னவனது சொல்லாம் மங்கையரோராமெல்லாம்
அன்னச்சத்திரஞ்சென்று அமுதருந்துதலன்று (மா)
வள்ளல்கோபம்பொல்லாது மறைந்திருக்கச்செல்லாது
பிள்ளைகளுடன்கூடி மெள்ளச்செல்லுவோம்வாடி (மா)

(நாகரத்னஞ்செட்டி சொல் வசனம்.) ஆ ஆ - ப்ராணசகி பார்! ஏதோ நமது மகாராஜாவின் அன்னச்சத்திரத்தில் இன்று விருந்து நடக்கின்றதாம், அதற்காக ஐந்துவயதிற் கதிகப்பட்ட ஆண்பெண்ணனைவரும் வந்து போஜனஞ் செய்யவேண்டுமென்றும், அப்படி வராவிடிற் சிறைச்சாலையிலடைக்கப்படுமென்றும், இதோ தோட்டி பறைசாட்டுகின்றான், அதை மீறி நாம் போகாமல் மறைந்திருக்கும் பக்ஷத்தில் மன்னவன் கோபத்திற்குப் பாத்ரமாவதுடன் காராக்ரகப்ரவேசமுங் கிடைக்குமாதலால் (ஊரோட ஒக்கோடு-நாடோட நடுவோடு) என்பதுபோல, நாமும நமது புத்ரியாகிய சதாரமும், நமது வத்ஸலாகிய மூடசிகாமணியும், அன்னச்சத்திரத்திற்குச்சென்று போஜனஞ்செய்து வருவோம்வா ப்ராணகாந்தி.

(மரகதவல்லி சொல் வசனம்.) செப்பியபடியே இப்பொழுதே செல்வோம் ப்ராணநாத.

(நாக-வ-ம்.) கண்மணி! சத்திரத்திற்குச் செல்வோமாவென்ன?

(சதா-வ-ம்.) பிதா பாருங்கள் (தந்தைசொன்மிக்க மந்திரமில்லை) யென்பதுபோல, தங்கள்திருவாக்குக்கு மறுவாக்குரைக்க எனக்கென்ன யோக்யதை யிருக்கின்றது, நல்லது அப்படியே செல்வோம் பிதா.

(நாக-வ-ம்.) ஹே வத்சா நீயும் வருகின்றனையாவென்ன?

(மூடசிகாமணி வசனம்.) ஹே பிதா! மொத்தைச்சாதமெ ன்றால் நித்தம் போகக்கூடியவனாயிற்றே, அப்படி யிருக்க என் னையுங் கேட்கவேண்டுமா, தாங்கள் முன்னாற் சென்றால் யான் பின்னாலோடிவருகின்றேன் பிதா,

(நாக-வ-ம்.) ஆனலப்படியே செல்வோம்.

நாகரத்னசெட்டி, மரகதவல்லி, சதாரம், மூடசிகாமணி,

இவர்களவ்வரும் அன்னசத்திரத்தில்

போஜனஞ்செய்தல்.

(நாக-வ-ம்.) யாரையா பரிஜாரகர்.

(பரிஜாரகன் வசனம்.) என்காணுஞ் செட்டியாரே.

(நாக-வ-ம்.) புரவலனுத்திரவின்படி போஜனஞ் செய்யவந் தோம், எங்களுக்கமுதளிக்கவேண்டும்.

(பரி-வ-ம்.) நகர்வாசிகளெல்லோரும் வந்து போஜனஞ்செ ய்துவிட்டுப் போய்விட்டார்களே நீரென்காணுங் காலதாமதமா கிவந்தீர்.

(நாக-வ-ம்.) எங்களுக்கிப்போதுதான் சமாசாரங் கிடை த்து வந்தோமையா.

(பரி-வ-ம்.) நல்லது இதோ அறுசுவையுடன் அன்னம்வட் டித்திருக்கின்றது விற்றிருந்து போஜனஞ் செய்யுங்கள்.

(நாக-வ-ம்.) அப்படியே செய்கின்றோம்.

(மூடசிகாமணி ஆசியஞ்செய்தல்)

(மூட-வ-ம்) பிதா எனக்குத் தயிர்ச்சாதம் வேண்டும்.

(நாக-வ-ம்.) அடா வத்சா! சத்தமிடாமற் சாப்பிடவேண் டும் இல்லாவிட்டால் அடித்துவிடுவேன்.

(மூட-வ-ம்.) எனக்குத் தயிர்ச்சாதங் கொடாவிட்டால் ராஜாவிடஞ் சொல்வேன் பார்த்துக்கொள்ளுங்கள். ஹே பரிஜா ரகரே! கொடுக்கிறீரா என்சொல்கின்றீர்.

(பரி-வ-ம்.) அடா பையா சத்தமிடாதே, இதோ தயிர்வா ர்க்கின்றேன்.

(மூடசிகாமணி சொல்தரு)

வந்தனத்தேனென்னுடைய வந்தனத்தேன்

என்ற ட்ராமாத்தருவின்வர்ணமெட்டு.

இ-ம்-பியாகு-தாளம்-ஆதி

பல்லவி.

வெகுருஜியையா-இத்தயிர்-வெகுருஜியையா

அநுபல்லவி.

வெகு ருஜி ஐயா (வெகு)

சரணம்.

இன்னமும்வாரும் இச்சையைத்தீரும்

அன்னமும்போடும் அப்பாலேபோடும் (வெகு).

(மூட-வ-ம்.) ஹே பரிஜாரகரே! இத்தயிர் வெகுருஜி கரமாயிருக்கின்றது. நல்லது இன்னுங் கொஞ்சஞ்சாதம் வைத் துத் தயிர்வார்த்துவிட்டு நீரப்பாற் சென்றுவிடும், யானொருகை பார்க்கின்றேன்.

(பரி-வ-ம்.) அப்படியே யிதோ அன்னமிட்டுத் தயிர் வார் த்திருக்கின்றேன் நன்றாய்ச் சாப்பிடும்.

(மூட-வ-ம்.) ஹே பிதா! இத்தயிர்ச்சாதம் நல்ல ருஜி கரமாயிருக்கின்றது, புசிப்பதற்கு வயறு இடங்கொடுக்கவில்லை யே இதற்கென்செய்கின்றது பிதா.

(நாக-வ-ம்.) வயறிடங்கொடாவிட்டாற் கையலம்பிக்கொ ள்வாயாக.

(மூட-வ-ம்.) யானிந்தச்சாதத்தை விடமாட்டேன், வயறு இடங்கொடுப்பதற்கு ஒருதந்திரமிருக்கின்றது கொஞ்சமலபா தைக்கிருந்துவிட்டுவந்து சாப்பிடுகின்றேன் பிதா.

(நாக-வ-ம்.) அடா வத்சா! இவிடத்திற்கு வந்து இவ்வித அபலவார்த்தைகளைப்பாஷித்தாற் பார்ப்பவர்கள் நகைப்பார்களாதலாற் சத்தமிடாமற் சாப்பிடுவாயாக.

(மூட-வ-ம்.) ஆனாற் கொஞ்சஞ் சலபாதைக்காவது இருந்துவிட்டு வந்து சாப்பிடுகின்றேன் பிதா.

(நாக-வ-ம்.) அடா அஷ்டா! யானென்னசொன்னபோதினும் உன்மூடத்தனத்தை விடுகின்றாயில்லையே, இதற்கென்செய்கின்றது.

(மூட-வ-ம்.) ஆனால் இன்னொரு யோசனை புலப்படுகின்றது, அந்தப்படி செய்கின்றேன் பிதா.

(நாக-வ-ம்.) என்னடா யோசனை.

(மூட-வ-ம்.) வயற்றில்வாயுகிரம்பியிருக்கின்றபடியால் அந்தக்காற்றை வெளியில் விடுத்துச் சாதத்தை யுள்ளேயடைத்து மீந்தத்தயிரையுங் குடித்து பரிஜாரகர் மண்டையு முடைத்துக் கடைசியாக எச்சிலுமெடுத்துவிடுகின்றேன் பிதா.

(நாக-வ-ம்.) சைசை-மூர்க்கா! பரிஜாரகர் உன்னையடித்துவிடுவார் வீண்வார்த்தை பாஷியாதே.

(மூட-வ-ம்.) பரிஜாரகரடித்தால் யான் கடித்து விடுகின்றேன்.

(பரி-வ-ம்.) ஓய் செட்டியாரே! போஜனஞ் செய்தவுடனே இதோ ஜலம் வைத்திருக்கின்றது கையலம்பிக்கொள்ளுங்கள்.

(நாக-வ-ம்.) ஐயா போஜனஞ்செய்தாகிவிட்டது, அப்படியேயிதோ கையலம்பிக்கொள்கின்றோம்.

(பரி-வ-ம்.) ஓய் செட்டியாரே! நீங்களெல்லாம் ராஜசபைக்குச்சென்று விடைபெற்றுக்கொண்டு கிரகத்திற்குச் செல்லுங்கள்.

(நாக-வ-ம்.) அப்படியே செல்கின்றோம், ※ஹேபிராணசகி குழந்தைகளுடன் ராஜசபைக்குச் சென்று உத்தரவு பெற்றுவருவோம் வாருங்கள்.

(மார-வ-ம்.) அப்படியே சென்றுவருவோம்பிராணநாத.



நாகரத்னஞ்செட்டி, மரகதவல்லி, சதாரம், மூடசிக்குமணி.
இந்நால்வரும் ராஜசபைக்கு வருதல்.

(நாக-வ-ம்.) காவலாயுற்ற சேவகர்யாவர்.

(சே-வ-ம்.) என்கானுஞ் செட்டியாரே! கேட்கின்றீர்.

(நாக-வ-ம்.) உத்திரவு பெற்றுக்கொள்ள வந்தோம் மன்னனென்செய்கின்றார்.

(சேவ-வ-ம்.) நம்மாற் புகழுஞ் சிம்மாதனத்தில் வீற்றிருக்கின்றார், உள்ளே போய்வாருங்கள்.

(நாக-வ-ம்.) அப்படியே போய்வருகின்றோம். ※இன்னிலம்புகழு மன்னவா நாகரத்னஞ்செட்டி வந்தனைபுரிகின்றேன்.

(சார-வ-ம்.) கல்யாண செட்டியாரே.

(நாக-வம்.) தந்திரமிகுந்த மந்திரி ! ப்ரபுவே நாகரத்னம் செட்டிவந்தனம் புரிகின்றேன்.

(மந்-வ-ம்.) கல்யாண் செட்டியாரே.

சுவேதச்சந்திரன் சதாரத்தைக்கண்டு
மந்திரியிடஞ் சொல்லுந் தரு.

பதசா பதசா நதமுனி ஜனசுக மபா
வனசரித கருணாகரஸ்மா
சுந்தராங்கவி பாவசீ மனோக்யதந பதசா பதசா
என்றகருத்திகையின் வர்ணமெட்டு.

இ-ம-காம்போதி-தாளம்-சாபு

பல்லவி.

இவள்தானிவள்தான் - மலர் - கவரவந்தவளும்
கவலையுடனென்ன தவலமொழிதன்
கடந்தவெளியில் நடந்தவளும் (இவள்தானிவள்)

அநுபல்லவி.

அவனிதனிலிவ ளழகுபோற்பெண்டுண்டோசதா
சிவனடிதுதிசெய் தவமுனிவர்கண்டு
சிந்தையில்மயல்கொள் சுந்தரியும் (இவள்தானிவள்)

(சுவே-வ-ம்.) ஆஆ-ப்ரதான்பாரும் யானின்று நந்தனவனத்திற்குச்சென்றிருந்தபோது புஷ்பம் பறிக்கவந்து என்மனத்தைக்கவர்ந்துசென் றமங்கையிவள்தான். இவளழகிற்கிணையான

மாது புவியிலெங்கிருக்கின்றாள்பாரும். பவத்தைப்போக்குந்தவத்தருங்கண்டு மையல்கொண்டு மயங்கித் தவிப்பார்களென்றால் யான்கண்டு காதல்கொண்டு கலங்கித் தவிப்பதற்கு யாதுதடையிருக்கின்றது. ஆதலால் தாம் வாக்குக்கொடுத்தபிரகாரஞ் சீக்கிரம் யான் கோரியபடி காரியத்தை முடிக்கவேண்டும் ப்ரதான்.

(மந்-வ-ம்.) நல்லது அப்படியே செய்கின்றேன் * ஆஆ-மகராஜ் நமது வத்சனுடைய லக்ஷணத்திற்குத்தகுந்த மாதுசிரோமணியாகத்தானிருக்கின்றாள். ஆனால் மூன்றுவது வர்ணத்தவளாயிருக்கின்றாள் ஆகினும் பாதகமில்லை, இப்போது கோரியகாரியத்திற்கு முயற்சிசெய்யவேண்டு மகராஜ்.

(சார-வ-ம்.) உமதிஷ்டம்போற் செய்யும் ப்ரதான்.

(மந்-வ-ம்.) ஹே செட்டியாரே யிவ்வாசனத்தில் வீற்றிரும்.

(நாக-வ-ம்.) சாத்தியபடியே வீற்றிருக்கின்றேன் ப்ரபு.

(மூட-வ-ம்.) எனக்கொரு ஆசனம் போடுங்கள் யான் வீற்றிருக்கவேண்டாமாவென்ன.

(மந்-வ-ம்.) அப்படியா! நல்லது இவ்வாசனத்தில் வீற்றிரு.

(மூட-வ-ம்.) அப்படியே வீற்றிருக்கின்றேன்.

(மந்-வ-ம்.) ஹே செட்டியாரே ! இம்மாது யாவள்! இச்சிறுமியாவள் ! இச்சிறுவன் யாவன் ! இவர்கள் நாமதேயம் யாது.

(நாக-வ-ம்.) இவள் எனது மனைவி, பெயர் மரகதவல்லி. இவள் எனது புத்திரி, பெயர் சதாரம். இவன் எனது வத்சன் பெயர் மூடசிகாமணி ப்ரபு.

(மந்-வ-ம்.) அப்படியா வெகுசந்தோஷமுண்டாயிற்று. நல்லது உம்மால் ஓர்காரியமாகவேண்டியதிருக்கின்றதே, அதற்கென்சொல்கின்றீர்.

(நாக-வ-ம்.) அது என்னகாரியம் ப்ரபு.

(மந்திரி சொல் தரு.

அங்குசானிருந்தவளே யழைத்துவந்ததேண்டிபெண்ணே

என்ற இந்த்ரசபாவின் வர்னமெட்டு.

இ-ம்-சுருட்டி-தாளம்-ஆதி

கன்னிகள்.

உம்முடையபுத்திரியை உலகரியத்தானேநீரே
செம்மலதிமைந்தனுக்குத் திருமணஞ்செய்குவீரே
திருமணமுஞ்செய்துவைத்தால் திரவியங்கள்வேணதெல்லாம்
பெருமையுடன்றந்திடுவோம்பெண்ணுக்கொருநல்லசொல்லாம்
ஆதலினற்செட்டியாரே அட்டியேதுஞ்செய்திடாது
மேதினியெல்லாம்புகழ வேட்டல்செய்குவீரிப்போது

(மங்-வ-ம்.) ஹே செட்டியாரே! உமது புத்ரியாகிய சதாரத்தை எமது ராஜபுத்ரனாகிய சுவேதச்சந்த்ரனுக்கு வேட்டல்செய்து வைக்க நாட்டமாயிருக்கின்றோம். அப்படிச் செய்வதற்கு நீரபிப்பிராயங் கொடுக்கும் பக்ஷத்தில் உமது புத்ரிக்கு நல்ல கீர்த்தி யுண்டாவதுமன்றி உமக்கும் வேண்டிய திரவியங்களுங் கொடுப்போம், ஆன்கயாலிப்பொழுதே திருமணஞ் செய்யத்தடையிலாது விடையளிக்கவேண்டும் இதற்கென்சொல்கின்றீர்.

(ரகாரத்னஞ்செட்டி சொல்-தரு.)

சின்னபாசி-எட்ல உந்தரு

என்ற க்ருத்திகையின் வர்னமெட்டு.

இராகம்-பலஹம்ஸா-தாளம்-ஆதி

பல்லவி.

என்னவார்த்தை-சொல்கிறீரையா

அநுபல்லவி.

மன்னர்கள்நீங்கள் வைசியர்நாங்கள் (என்)

சரணம்.

இனத்தவரல்லா திருப்பதினாலே
தனத்தினிலாசை தருமோமென்மேலே (என்)

(ரக-வ-ம்.) ஆஆ-ப்ரபு! என்னவார்த்தை பாஷிக்கின்றீர்கள். பாருங்கள் தாங்கள் க்ஷத்திரியவம்சத்தைச் சார்ந்தவர்கள், யாங்கள் வைசிய குலத்தைச்சார்ந்தவர்கள் அங்ஙன மிருக்கத் தாங்கள் கொடுப்பதாகச் சொல்லுந் திரவியத்திற்காசைப்பட்டு அன்யகுலத்திற் பெண்கொடுப்பது உசிதமன்று. ஆதலின் இனி மேலிவ்வித வார்த்தைகளை என்னிடம் பாஷிக்க வேண்டாம் ப்ரபு.

மந்திரி சொல் தரு.

விட்டுப்பிரியமனம்வந்ததேனோ என்சாமியெனை விட்

என்ற ராமாத்தருவின் வர்னமெட்டு.

இ-ம்-பியாகு-தாளம்-சாபு

பல்லவி.

தட்டியுரைக்குமொழி சரியல்லவே-செட்டியாரேநீர்
தட்டியுரைக்குமொழி சரியல்லவே

அநுபல்லவி.

இது சரியல்லவே யிது சரியல்லவே
இது சரியல்லவே யிது சரியல்லவே
செட்டியாரேநீர் (தட்)

(மங்-வ-ம்.) ஒய் செட்டியாரே! பாரும் உமக்குக் கீழ்க்குலத்தோராகிய சூத்ராருக்குமட்டும் நீர்பெண்கொடுக்கக்கூடாதேயன்றி உமக்கு மேற்குலத்தோராகிய எங்களுக்குப் பெண்கொடுப்பதில் உமக்கு நிஷித்தங்கிடையாது. உம்மிடம் பெண்கொள்வது எங்களுக்குத்தான் நிஷித்தம் ஆதலின் யாங்களே பெண் கேட்கும்பொழுது நீர்கொடுக்கத் தடையாயிருக்கின்றது செட்டியாரே.

(நாகநாதன் செட்டி சொல் தரு.)

வாசுதேவனே வந்தாளுமெய்ந்தனே.

என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.

இராகம்-கல்யாணி-ஏகதாளம்

கண்ணிகள்.

இந்தராஜ்ஜியம் எனக்கேயாட்சியாய்
தந்தால்மங்கையைத் தருவேன்மாட்சியாய்
இல்லாவிட்டால்யாருமிப்பெண் ணியமாட்டேனே,
பொல்லாப்பாகினும்என் புத்திராட்டேனே

(நாக-வ-ம்.) ஆ-ப்ரபு தாங்கள் சொல்லும் ஞாயம் வாஸ்தவமாயிருந்தபோதிலும், எனக்கித்த ராஜ்யத்தைப் பட்டாபிஷேகஞ்செய்துவைக்க மனமிருக்கும் பக்ஷத்தில் எனது புதல்வியைத் திருமணஞ்செய்து கொடுப்பேன், இல்லாவிடின் என்னசமாதானவார்த்தைகள் சொன்னபோதிலுஞ்சரி கோபித்துக் கொண்டபோதிலுஞ்சரி யான் பெண் கொடுக்கவே மாட்டேன் ப்ரபு.

(மந்-வ-ம்.) ஹே செட்டியாரே! உமக்கு வேண்டிய திரவியங்கள் தருவதாகச் சொல்லியுங் கேளாமல் (வாழைப்பழத்தை கோணியுங்கொள்ளாது) என்பதுபோல, ராஜ்யமுழுமையும்பட்டாபிஷேகஞ்செய்து வைக்கவேண்டுமென்று கேட்கின்றீரே, இதுவுசிதமா செட்டியாரே.

(நாக-வ-ம்) உசிதமில்லாவிட்டால் விடைதாருங்கள் சென்று வருகின்றோம்.

(மந்-வ-ம்) நீர் வற்புறுத்திக்கேட்பதினால் ராஜ்யம் வருகின்றோம், காரியத்தை இனிமேல் சிலவையுஞ் சித்திரம்.

(நாக-வ-ம்.) ஒருக்காலுஞ் சம்மதிக்க மாட்டேன் ப்ரபு என் வீண்வார்த்தை பாவிக்கின்றீர்கள்.

(மூடசிகாமணி ஆசியஞ்செய்தல்.)

(மூட-வ-ம்.) ஹே பிதா! யானிதுவரையிங்கு சொறிந்து கொண்டிருந்ததினிமித்தம் நீங்கள் சம்பாஷித்துக்கொண்டிருந்தசங்கதி என்செவியிலொன்றும் புலப்படவில்லை யாதலால் அதென்னவென்ன பிதா.

(நாக-வ-ம்.) அடா கண்மணி! உனது தமக்கை சதாரத்தை ராஜகுமாரனுக்குக் கேட்கின்றார்கள் வத்சா.

(மூட-வ-ம்.) அப்படியா! அதற்குத் தாங்களென்னசொன்னீர்கள்.

(நாக-வ-ம்.) இந்த ராஜ்யத்தை எனக்குப் பட்டாபிஷேகஞ்செய்துவைத்தாற் கொடுப்பதாகச்சொன்னேன் வத்சா.

(மூட-வ-ம்.) வெகுநேர்த்தியாயிருக்கின்றது.

(நாக-வ-ம்.) என்னடா அது.

(மூடசிகாமணி சொல்-தரு.)

மோகங்கொண்டேன்றுரையே

என்ற நாடகத்தருவின்வர்ணமெட்டு.)

இராகம்- செஞ்சுருட்டி-தாளம்-ஆதி

பல்லவி.

என்னசெய்வேன்றந்தையே-யிம்மொழியும்விந்தையே.

அநுபல்லவி.

கன்னிதனைமன்னன்மகனுக்கீந்திடாளத் திட்டஞ்செய்தீர்

சரணம்.

கான்மனை காள்ளுவேன்டாமோ தாஜன்பகையுண்டாமோ
தேன்மொழிதமக்கையானச ... நீங்கள் காணே (என்)

—✠—

(மூட-வ-ம்.) ஹே பிதா! தமக்கையை ராஜகுமாரனுக்குக் கொடுத்துவிட்டால் யானென்செய்கின்றது அவளையான் கல்யா

ணஞ் செய்துக்கொள்ளவேண்டாமா ராஜாபகைவந்துவிடுமென்று பயங்கரப்படுகின்றீர்களோ பிதா.

(காக-வ-ம்.) அடா மூடா! உலகத்திற்றமக்கையைத்தானு விவாகஞ்செய்து கொள்வார்கள்.

(மூட-வ-ம்.) அப்படிச்செய்தாற் பிள்ளைபெறமாட்டாளாவென்ன.

(காக-வ-ம்) அடா துஷ்டா பார்த்தவர்கள் நகைப்பார்களல்லவோ.

(மூட-வ-ம்.) அவர்கள்நகைத்தால் நாம்பகைத்துக்கொள்கின்றது, இதற்காகவா அக்காளைக்கொடுத்துவிட்டு முக்காப்பே போட்டுப் படுத்துறங்கச்சொல்கின்றீர்கள், மாட்டேன்மாட்டேன்யானே கல்யாணஞ் செய்துகொள்வேன் பிதா.

(காக-வ-ம்.) சைசை மூர்க்கா! ராஜ்யத்தைக் கைப்பற்றும்வரை வார்த்தையாடாமலிருப்பாயாக.

(மூட-வ-ம்.) ஆனல் ஆப்பம்வாங்கித்தின்று ஏப்பம் விடுவதற்கு அக்காளைக்கொடுத்து முக்கால்த்துட்டு வாங்கிக்கொடுக்கின்றீர்களா பிதா.

(காக-வ-ம்.) ராஜ்பத்தைவாங்கி உனக்குக்கொடுத்துவிடுகின்றேன் கூச்சலிடாதே.

(மூட-வ-ம்.) காசுமட்டுங்கொடுத்தாற் போதும் பேசாமலிருக்கின்றேன் பிதா.

(காக-வ-ம்.) ஆஆ-ப்[illegible]ங்கள்வந்துகாலகரணமாகிவிட்டது சென்றுவர விடைதாருங்கள் ப்ரபு.

(மர்-வ-ம்.) ஆஆ-மகராஜ்! செட்டியார் கருத்துக்குத்தங்களபிப்பிராயமெவ்வாருளது மகராஜ்.

(சாரங்கஹஸ்த மகாராஜன் சொல் ஜாவளி)

மனதுகல்லோடிவஞ்சியே

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.

இ-ம்-காம்போதி-தாளம்-சாபு

பல்லவி.

இனியென்னசெய்குவோமந்திரி

அநுபல்லவி.

தனயனடைந்திற | மனவிசனமது
சங்கடம் | சங்கடம்

சங்கடம் (இனி)

(சார-வ-ம்.) ஹேப்ரதான்! இந்த ராஜ்யத்தைப் பெரிதாய்ப் பாராட்டும் விஷயத்தில் பின்னுல் எனதருமைச்சேயன்படுகின்றதுன்பத்தைக் கண்ணுற் பார்த்துச் சகிக்கமுடியாமலிருக்கும் ஆகலின் செட்டியார் மனம்போல்வே ராஜ்யத்தைப் பட்டாபிஷேகஞ்செய்துவைப்போம் ப்ரதான்.

(மந்-வ-ம்.) ஆனுலப்படியே செய்யுங்கள் மகராஜ்.

(சார-வ-ம்.) ஹேசெட்டியாரே உமது மனம்போலவேராஜ்யத்தைப் பட்டாபிஷேகஞ் செய்துவைக்கின்றேம், விவாகத்தை நிறைவேற்றிவையுஞ் சீக்கிரம்.

(காக-வ-ம்.) மகராஜ்! முதலில் எனக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவைக்கும்பக்ஷத்தில் இரண்டாவது விவாகத்தை நிறைவேற்றித்தருகின்றேன் மகராஜ்.

(சார-வ-ம்.) அவ்வளவுடை[illegible]கயில்லையா நல்லது அப்படியேபட்டாபிஷேகஞ்செய்துவைக்கின்றேன் இச்சிம்மாதனத்தில் வீற்றிரும்.

(காக-வ-ம்.) அப்படியே வீற்றிருக்கின்றேன்.

(மூடசிகாமணிசொல் ஆசிபத்ரகு.)

எங்கேவந்தாயோடா

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி

பல்லவி.

என்னவேலெசெய்தீர்என தபிதாவே யிப்போதையையோ
என்னவேலெசெய்தீர்

அநுபல்லவி.

முன்னமெனதிடத்திற் சொன்னமொழிகெடாமல்
இன்னகாராசாக்ஷி யெர்தனுக்கேகொடாமல்
ஐயையோ (என்)

(மூட-வ-ம்.) ஆஆ-பிதா! என்னவேலை செய்துவிட்டீர்கள் பாருங்கள் எனக்குராஜ்யத்தைவாங்கிக்கொடுப்பதாக முன்னமே வாக்குதத்தஞ்செய்தபடி நடவாமல் சிம்மாதனத்தில் லாஞ்சனையில்லாமல் ஆஞ்சநேயரைப்போல வீற்றிருக்கின்றீர்களே இது ஞாயமா பிதா.

(நாக-வ-ம்.) அடா துஷ்டா! எத்தவிஷயத்திற்கும் முக்திப் பாஷிக்கின்றனையே சற்று சும்மாவிருக்கலாகாதா வென்ன.

(மூட-வ-ம்.) ஆனால் யான் பட்டங்கட்டிக்கொண்டு மட்டக் குதிரையிலேறி வட்டம்போடவேண்டாமாவென்ன.

(நாக-வ-ம்.) அடா வத்சா! நீ மூடனயிருக்கின்றனையே உனக்கு யாவர் பட்டங்கொடுப்பார்கள்.

(மூட-வ-ம்.) ஆனால் யான் அக்காளைத்தூக்கிச் சொக்கரிற்போட்டுத்தெற்காலேசென்று முக்காற்றுட்டுக்குவிற்று ஆப்பம் வாங்கித் தின்று எப்பம் விட்டுவிட்டு வந்து மண்ணைக்கெளிக் தங்கள் கண்ணிலடித்துவிட்டு ஓடிப்போய்விடுவேன் பிதா.

(நாக-வ-ம்) அடா கண்மணி! அப்படிச்செய்யவேண்டாம் யான் பட்டத்தை வாங்கியுனக்குக் கொடுத்துவிடுகின்றேன் சற்றுபொறுத்துக்கொள்வாயாக.

(மூட-வ-ம்.) நல்லது அப்படியே பேசாதிருக்கின்றேன்.

(சார-வ-ம்.) ஹே செட்டியாரே! இக்கம்குடத்தைச் சிரசிற்றரித்துக்கொள்ளும்.

(நாக-வ-ம்.) அப்படியே தரித்துக்கொள்கின்றேன்.

(சார-வ-ம்.) இந்தச் செங்கோலைக் கரத்திற்பிடித்துக்கொள்ளும்.

(நாக-வ-ம்.) அப்படியே பிடித்துக்கொள்கின்றேன்.

(சார-வ-ம்.) ஹே செட்டியாரே! ஆகாயவாணி பூமாதேவி சந்த்ரசூர்யாள் சாக்ஷியாக இந்த ராஜ்யத்தை யுமக்கு மகுடாபிஷேகஞ் செய்து விட்டேன், இனிமேலாவது விவாகஞ்செய்து வைக்க யாது தடையிருக்கின்றது.

(நாக-வ-ம்.) ஹே மகாராஜ் பாருங்கள் எப்பொழுது இந்த ராஜ்யம் எனக்குப் பட்டாபிஷேகமாகிவிட்டதோ அப்பொழுதே சகல சம்பத்தும் என்னைச் சார்ந்துவிட்டது, அதனால் (எண்ணிச்செய்கிறவன் செட்டி எண்ணுமற் செய்கிறவன்மட்டி) யென்பதுபோல, எங்கள் ஜாதிவளமைப்படி அளவுக்குமிஞ்சிச் சிலவு செய்ய மனமில்லாதவனுயிருக்கின்றேன், ஆதலால் மௌதாள நட்ன சிங்கார வைபவத்துடன் விவாகஞ் செய்துவைக்கவில்லையென்று மனவருத்தப்படவேண்டாம். ஏதோ நாமிருவரும் மனமொத்து ஒருகாரியத்தைச்செய்துகொள்ளும்போது யாவர்தடைகூறப்போகின்றார்கள், ஆகையால் எனது குமாரத்தியைப் பிடித்துத் தங்கள் புத்ரசிகாமணியிடங் கொடுத்துவிடுகின்றேன் அதையே திருமணமாகப்பார்த்து ஒருமனமாக ஏற்றுக்கொள்ளுங்கள் மகாஜி.

(சார-வ-ம்.) ஆஆ-செட்டியாரே! இவ்வித வார்த்தைபாஷிப்பது உமக்குஜிதமாயிருக்கின்றதாவென்ன.

(நாக-வ-ம்.) அப்படிச்சம்மதமில்லாவிடில்விவாகச்சிலவுக்கு வேண்டிய திரவியஞ்சம்பாதித்து வருங்கள் வியாலசயாகச் செய்து வைக்கின்றேன்.

(சார-வ-ம்.) அப்படியா (மீதிணகாரியங் கூறினல்வாராது) என்பதுபோல, இனியென் செய்கின்றது. நல்லது உமதிஷ்டம் போலவே பெண்ணைப் பிடித்துக்கொடுஞ் செட்டியாரே.

(நாக-வ-ம்.) ஹே ராஜவத்சா ! எனது புத்ரியாகிய சதாரத்தைத் தேவாதிகள்ஸ்ய உனக்குக் கன்னிகாதானமாகக் கொடுக்கின்றேன், இதோ பெற்றுக்கொள்வாயாக.

(சுவே-வ-ம்.) அப்படியே பெற்றுக்கொள்கின்றேன்மாமா.

(நாகரத்னஞ்செட்டிசொல் ஜாவளி.)

மோடியேலரா-நாசாமிகுாலப-மோடியேலரா

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.

இ-ம்-காபி-ஏகதாளம்

பல்லவி.

இனியென்னகாண்உமக் கிங்கேஜோளியும்
இனியென்னகாண்

அநுபல்லவி.

மனந்தில்நினைக்கிடும் மர்மமானதீருவேன் (இனி)

சரணம்.

மாமனென்றிவன்மெல்ல வந்துறவாடுதல்
சாமதிருவோமித்த நகரைவிட்டகன்றிடும் (இனி)

(நாக-வ-ம்.) ஹே அரசினையிழந்த புரவலா ! உமது மைந்தனுன்வன் மாமாவென்று வார்த்தை யொட்டிப்பேசுவது எனக்கு ன்றாய்த் தெரியவருகின்றது, அந்தத்தந்திரம் எந்தனிடஞ் செல்லாது, உங்களிடத்திற்பெண்ணை யொப்பிவைத்துவிட்டேனல்லவோ அப்படியிருக்க, இனிமேலிந்த அரமனையிலுங்களுக்கென்ன பாத்யதை யிருக்கின்றது, நீங்களிவிடத்திலேயே யிருந்து என் குடியைக் கெடுத்கவர்பார்க்கின்றீர்கள் போதும் போதும் மரியாதையாகப் பெண்ணின் னைதனை யழைத்துக்கொண்டு

வெளியிற் சென்றுவிடுங்கள். இல்லாவிட்டாற் சேவகனை விடுத்து உங்களை வெளியிற் றள்ளச்சொல்வேன், ஞாபகமிருக்கட்டும்.

(சார-வ-ம்.) எங்களைப்பிடித்துத் தள்ளவேண்டாம் யாங்களே சென்று விடுகின்றோமையா.

(நாக-வ-ம்.) ஜல்தி ஜல்தி.

(சார-வ-ம்:) ஹே கண்மணி ! உனது பத்தினியை யழைத்துக்கொண்டுவா, அந்தப்புரத்திலிருக்கும் உனதன்னையையும் அழைத்துக்கொண்டு எங்காவது சென்று காலக்ஷேபஞ் செய்வோம்.

(சுவே-வ-ம்.) அப்படியே யழைத்துவருகின்றேன் பிதா ✻ அடி பிராணசகி வாசெல்வோம்.

(சதாரம் சொல் தரு)

இன்னுநாதன்வரக்காணேனே என்னசெய்வேன்தோகைகானே

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இ-ம்-காபி-தாளம்-சாபு

பல்லவி

எந்தனுக்குகந்த மணளா-என்னசெய்குவோங்குணளா

அநுபல்லவி.

இந்தநகர் தந்தைக்காக
ஈய்ந்துவிட்டீர் பாந்தமதாய்
என்னசெய்குவோங்குணளா (எந்)

சரணம்.

இப்படிவருமென்றுநானே சொற்பனமறிகிலேனே
சற்பனையாய் அப்பன்செய்த
சதிகளுநம் விதிவசமோ
என்னசெய்குவோங்குணளா (எந்)

(சதா-வ-ம்.) ஆஆ-ப்ராணநாத் எனது தந்தையாகிய இப்பாவியானவர் கொஞ்சமும் நெஞ்சமஞ்சாமல் நமது ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டது மல்லாமல் நம்மை வெளியிற்

பிடித்துத்தள்ளுவதாகப் பாவிக்கின்றீரே ஆஆ-நமது காலக்ஷேபத்திற்குத்தகுந்த மார்க்கந்தேட மனமில்லாமற் போய்விட்டதே, ஆஆ-இப்படிச்செய்வாரென்று நான் சொற்பனத்திலுமெண்ணவில்லையே, ஆஆ-இதுவுநமது விதிவசந்தானு ப்ராணநாத.

(சுவேதச்சந்த்ரன் சொல்-தரு.)

அரியாமல் மதிமோசமானனே

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இ-ம்-எதுக்குலகாம்போதி-தாளம்-சாப்பு

பல்லவி.

விதிவசமதுசொல்லக்கேளடி-முன்னோர்கள்பட்ட,
விதிவசமதுசொல்லக்கேளடி

அநுபல்லவி.

கேளடிசொல்லக் கேளடி முன்னோர்கள்பட்ட (விதி)

(சுவே-வ-ம்.) அடி ப்ராணசகி ஏன் விசனப்படுகின்றனை. பார்.

சுலோகம்.

ஹரிணாபிஹரேணாபி ப்ரம்மணாபிசுரைரபி
லலாடலிகிதாரேகா பரிமார்ஷ்டும்நசக்யதே.

அதாவது, விஷ்ணுவினாலாகிலும் சிவனாலாகிலும் ப்ரம்மாவினாலாகிலும், மற்றதேவதைகளாலாகிலும் தலையிலெழுதியவெழுத்தைத் தள்ளமுடியாதென்று மனுஸ்மிருதிகள் முறையிடுகின்றமையால், மகா சக்ரவர்த்திகளாகிய (அரிச்சந்தரன்-புரூரவச்சக்கிரவர்த்தி-நளன்) இன்னும் (ஸ்ரீராமர்-பஞ்சபாண்டவர்) முதலான ராஜாக்களடைந்த கஷ்டத்தைவிடவா நாமடைந்து விட்டோம். ஹே கோதாய்! நமக்கேற்பட்ட ப்ரம்மலிபிபோலதான் முடியும் அதற்காக விசனப்படுவதிலென்ன ப்ரயோசனம்? நல்லது வாசெல்வோம்.

(சதா-வ-ம்.) அப்படியே வருகின்றேன்.

(சுவே-வ-ம்.) பிதா வாருங்கள் செல்வோம்.

(சார-வ-ம்.) அப்படியே வருகின்றேன் வத்சா.

(மூடசிகாமணி ஆகியனு செய்கல்.)

(மூட-வ-ம்.) பிதா! அக்காள் முக்காடுபோட்டு அழுதுகொண்டு போகின்றாள். மைத்துனர் செத்தவன்போலேகின்றார். மாமனார் கோமுண்டியாய்ப் போகிறார். இனிமேலென்ன நல்லது சற்று சிம்மாதனத்தைவிட்டிறங்குங்கள் யான் கொஞ்சம் படுத்துறங்குகின்றேன்.

(நாக-வ-ம்.) அடா வத்சா! நீ நல்ல முகூர்த்தம் பார்த்துச் சிம்மாதனத்திற்கு வரலாம் அதுவரை சும்மாயிருப்பாயாக.

(மூட-வ-ம்.) அப்படியா ஆனால் வெகு சந்தோஷம். அத்தானுக்குமட்டும் வெகுரோஷம், இனித்தின்னப்போகின்ற சாதஞ்சேஷம் யான் போட்டுக்கொண்டது வேஷம் பிதா.

(நாக-வ-ம்.) அடா வத்சா! நல்லது இங்கிருந்த மந்திரியுஞ் சேவகனும் எங்கு சென்றுவிட்டார்கள்.

(மூட-வ-ம்.) மந்திரி முந்திரிக்கொட்டை தின்னப்போனார். சேவகன் பாவற்காய்பறிக்கப் போய்விட்டான் பிதா.

(நாக-வ-ம்.) அப்படியா நல்லது காய்கிரகத்திற்குச்சென்று வருவோம்வா.

(மூட-வ-ம்.) நான் அம்மாளோடு பேசுகின்றேன் தாங்கள் அக்காளோடு போங்கள் பிதா.

(நாக-வ-ம்.) அடா முட்டாள்தாமோழி பேசாமல்வாடா

(மூட-வ-ம்.) அப்படியே வருகின்றேன்.

சுவேதச்சந்திரன் தேசசஞ்சாரஞ்செய்யக்கருதித் தந்தையிடஞ் சொல்லுந்தரு.

ஆரண்யத்திலோராசன் நித்ரைசெய்யவே

என்ற இந்த்ரசபாவின் வர்னமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

தந்தையரே யெந்தனாலே
சங்கடப்பட்டீர்

சொர்தகர் தந்துால்ல
சுகமதுங்கெட்டீர்
செஞ்சொல்மொழி வஞ்சியினுற்
செல்வம்போச்சுதே
கஞ்சிக்குநான் கெஞ்சிகிற்குங்
காலம்வாச்சுதே
இப்படிநான் சொற்பனத்தும்
எண்ணவில்லையே
சற்பனையா யுற்பவித்த
சாரர்தொல்லையே
சத்தி்த்திற் பத்திரமாய்த்
தங்குவீர்களே
புத்தமுதுக் கித்திளமே
போவேனூர்களே

(சுவே-வ-ம்.) ஆஆ-பிதா ! ஏதோ தாங்களும்என்னுமாதா வும்இதுவரைநல்லசுகானுபவங்களையனுப்வித்தவர்கள்(தம்பிறக்கச்சம்பத்தெல்லாம் பாழாச்சு) என்பதுபோல, என்னால் ராஜ்யத்தையிழந்து பிண்டத்திற்கு வகையற்றுப் பஞ்சைக்கோலங் கொண்டிருக்கின்றீர்களே, ஆஆ-இப்படிவருமென்று சொப்பனத்திலும்நினைக்கவில்லையே, ஆஆ-உங்களைப் பார்க்க என்மனஞ் சகிக்கவில்லையே, ஆஆ-இந்த மங்கையால்நேர்ந்த சங்கடமாயிற்றே இதற்கென்னசெய்கின்றது, நல்லதுநீங்கள்நடக்கச்சக்தியற்றவர்களாயிருப்பதால் இந்தச்சத்திரத்திற்றங்கியிருங்கள், யான் சமீபத்திலுற்றநகரங்களுக்குச்சென்றுகாலக்ஷேபத்திற்குவகை தேடிவருகின்றேன் பிதா.

(சார-வ-ம்.) ஆனாலப்படியே சென்றுவா வத்சா.

(சுவே-வ-ம்.) மாதா யான் சென்று வருகின்றேன்.

(ஜகன்மோகினிவசனம்.) அப்படியேசென்றுவாகண்மணி

(சுவே-வ-ம்.) அடி ப்ராணசகி யான்சென்றுவருகின்றேன்

(சதா-வ-ம்.) ஆஆ-ப்ராணகாந்தா தங்களுடன்யானும்வருகின்றேன்.

(சுவே-வ-ம்.)அப்படியானால் உனதுமாமனார்மாமியாரிடம் விடைபெற்றுக்கொள்வாயாக.

(சதா-வ-ம்.) அப்படியே பெற்றுக்கொள்கிறேன் * ஆஆ-மாமா தங்கள் குமாருடன் யானுஞ் சென்று வருகின்றேன் விடைதாருங்கள்.

(சார-வ-ம்.) அப்படியே சென்றுவா மருகி.

(சதா-வ-ம்.) மாமி யான்சென்றுவருகின்றேன்.

(ஜக-வ-ம்.) அப்படியே சென்றுவா மானே.

தேசசஞ்சாரஞ்சென்ற சுவேதச்சந்திரன்
வழியிற் பசிதாகமடைந்து
சதாரத்திடஞ் சொல்லுந்தரு.
கண்ணாளனைக்காணாமலே கண்ணிரண்டுந்தேடுதே
என்ற இந்த்ரசபாவின்வர்ணமெட்டு
இராகம்-காபி-தாளம்-ரூபகம்.
பல்லவி.
பசிப்பிணிகாணுதடி. பத்தினியேயென்னசெய்வேன்

அநுபல்லவி.

புசிப்பதற்கொன்றில்லையே பூவைபோனென்னசெய்வேன் (பசி)

சரணம்.

நடக்கமுடியவில்லை நாயகியேயென்னசெய்வேன்
வடக்குந்தெற்குமறியேன்மங்கையேபோனென்னசெய்வேன்-பசி
கண்ணிரண்டிருளுகுதடி காதலியேயென்னசெய்வேன்
தண்ணுறைந்தகலவறைலக் தத்தால்மிகபுண்யமடி (பசி)

(நளவே-வ-ம்.) ஆஆ-ப்ராணசகி யார்காமோசத்தியபுரியைக் கடந்து அநேகதூரம் வந்துவிட்டோம், எனக்குப் பசியானது காலாக்கினிருத்ரனைப்போல வருத்துகின்றது நடப்பதற்குமுடியவில்லை கண்ணிரண்டும் பஞ்சடைந்து வருகின்றது காவுலர்ந்துபோகின்றது இத்தருணத்திற்கொஞ்சம்நல்லசலம்கிடைக்கும் பக்ஷத்தில்என்பசிக்களை நிவர்த்தியாகும்பெண்ணே இதற்கென் செய்கின்றது.



சதாரம் சொல் தரு.

ஆம்-அஜாஜாவளி-அஜாச்சி-டக்ரகிராத்
என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.
இ-ம்-காம்போதி-ஏகதாளம்
பல்லவி.
சாமிவாருமிங்கேவாரு-மிதோபாருந்நடாகும்

அநுபல்லவி.

கோரியபடிதாகந் தீருமேசாமி (வாரு)

சரணம்.

தெள்ளமுதம்போலே திகட்டப்பண்ணுமே
உள்ளிறங்கியெய்ள்ளி புண்ணுமேசாமி (வாரு)

(சதா-வ-ம்.) ஆஆ-ப்ரபு தாங்களென்வியாக்கூலப்படவேண்டாம் இதோசமீபத்தில் ஓர்தடாகந்தோன்றுகின்றது, அதிலுற்றஜலம் நல்ல ருஜிகரமாயிருக்கும்போலிருக்கின்றது ஆகையால்மெதுவாயிறங்கி ஜலமருந்திவாருங்கள் ப்ரபு.

(நளவே-வ-ம்.) வாஸ்தவந்தான்மானே நல்லது அப்படியே சாப்பிடுகிறேன்.

(நளவேந்தச்சந்திரன்சொல்ஜாவளி.)

எந்துகு வாடலகிறுடு- மந்தகமனு
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
இ-ம்-கமாஸ்-தாளம்-ரூபகம்
பல்லவி.
இந்தருஜிபோலேகாணும்-எங்குங்கண்டிலேன்
அநுபல்லவி.
அந்தரத்தவர் முக்திக்கடைந்த
அமிர்தந்தானிதோ (இந்)

(நளவே-வ-ம்.) ஆஆ-கண்ணாட்டி! இந்த ஜலத்தை யருந்தியமாத்திரத்தில்தேகம் புளகாங்கிதமுற்று பசிக்களைச்சலெடுக்கின்றது. இதுதேவாமிர்தமென்றே சொல்லும்படியான ருஜிகரம் பொருந்தியிருப்பதுடன் என்னுடையதாகத்தீர்த்துவிட்டது. நல்லது நீவையரியப்பெண்ணாயிருப்பதினிமித்தம் உனக்குச் சமயோஜிதமான தந்திரயுக்திகள் தெரிந்திருக்கக்கூடுமாதலால் இப்போது காலக்ஷேபத்திற்கு எவ்விதமார்க்கந்தேடலாமாதே.

(சதாரம்-சொல் தரு.)

ஒருமாதுவரச்சொன்னாளென்னைத்தானே
என்ற ட்ராமாஜாவளியின் வர்ணமெட்டு.
இ-ம்-காபி-தாளம்-ரூபகம்
பல்லவி.
நீங்கேதிசொல்லக்கேளுந்துரைநாதா

அநுபல்லவி.

துரைநாதா மநுநேர குணபோதா-ஒரு (சேதி)

சரணங்கள்.

செய்யுந்தொழிற் செய்யின்மேன்மை தானே
மேன்மைதானே அதானே அறிவேனே-ஒரு (சேதி)

பட்டுத்துண்டுகெட்டியாக நெய்வேன்
நானும்நெய்வேன் விலைசெய்வீர் அதானுய்வோம்-ஒரு (சேதி)

(சதா-வ-ம்.) ப்ராணநாதா பாருங்கள் உலகத்தில் பாபமில்லாத்தொழிலானது நெசவுதொழிலென்று கேள்வியுற்றிருப்பதுமன்றி (செய்யுந்தொழிலனைத்துஞ் சீர்தூக்கிப்பார்த்தாக்கால் நெய்யுந்தொழிலுக்கு நிகரில்லை) யென்று அனேக நீதிநூல்களிலும் வாசித்தறிந்து அந்தத்தொழிலில் மிகப்பயிற்சியுள்ளவளாகக் கைதேர்ந்திருக்கின்றேன், அன்றியும் யான் சின்னாளுக்குமுன்னால் நெய்தபோது மீந்த பஞ்சவர்ணப்பட்டுநூற்களுங் கைவசங்கொண்டு வந்திருக்கின்றேனாதலால் அந்தநூற்களைக்கொண்டு ஒருவித விச்சித்ரமான பட்டுச்சவுக்கம் நெய்து கொடுக்கின்றேன், அதனையெடுத்துக்கொண்டு இதோ சமீபத்திற் றோற்றப்படுகின்ற நகரத்திற்குச்சென்று விலைகூறி விற்பனை செய்துகொண்டு வரும்பக்ஷத்தில் அந்தப் பொருளைக்கொண்டு நாம் காலக்ஷேபஞ் செய்ய மார்க்கந்தேடிக்கொள்ளலாம் ப்ரபு இதற்கென்சொல்கின்றீர்கள்:

(சுவே-வ-ம்) ஆஆ-மானே! பெண்புத்தி பின்புத்தியென்று சொல்வார்கள், ஆனால்உன்புத்திக்கீடாக ஒருவரையுஞ் சொல்லக்கூடாது நல்லது அப்படியே நெய்துகொடு யான் சென்று விற்பனைசெய்துவிடுகின்றேன்.

(சதா-வ-ம்.) ப்ரபு இதோ நெய்தாகிவிட்டதெடுத்துச்செல்லுங்கள் யானிவ்விடத்திலேயே வீற்றிருக்கின்றேன் ப்ரபு.

(சுவே-வ-ம்.) அப்படியே சென்றுவருகின்றேன்,



மயபுரிக்கிறைவனாகிய

மதனமகாராஜாவின்

முதலாவது சபை.

கொலுந்தரு.

ராமமுகிப்ராணதபாலா-தயய தயய தயய தயய தயய
என்றகீர்த்திகையின் வர்ணமெட்டு.
இ-ம்-பூரிகல்யாணி-தாளம்-ரூபகம்

பல்லவி.

மதனமகாராஜன்வந்தான்-மகிழ்வுடனிதோ
கொலுவைநாடியே-மதனமகாராஜன்வந்தான்

அநுபல்லவி.

அதிகசுந்தா வதிகளாடவே
அரிவையர்வெண்சா மரைகள்போடவே (மத)

(மதனமகாராஜன்வசனம்.) காவலாயுற்றசேவகன்யாவன்.

(சேவ-வ-ம்.) பார்த்திபா அடியேன் காத்திருக்கின்றேன்.

(மத-வ-ம்.) எனது சித்தைக்கிசைந்த மந்திரி யின்னும்வரவில்லையாவென்ன.

(சேவ-வ-ம்.) புரவலா இன்னும் வரவில்லை.

(மத-வ-ம்.) நீவிருவிரும் சென்று விரைவினிலழைத்து வருவாயாக.

(சேவ-வ-ம்.) செப்பியபடியே யிப்பொழுதே யழைத்துவருகின்றேன் மகராஜ்.

(மந்-வ-ம்.) எண்டிசைபோற்று மண்டலாதிபனே மந்திரி வந்தனம் புரிகின்றேன்.

(மத-வ-ம்.) கல்யாண ப்ரதான சிரேஷ்டா பெருமையாயெத்தனருகினிலமரும்.

(மந்-வ-ம்.) சாத்தியபடியேவீற்றிருக்கின்றேன் மகராஜ்.

(மத-வ-ம்.) ஹே ப்ரதான! எப்பொழுதும் யானிந்தச் சிம்மாதனத்திற்கு வருதற்கு முன்னமே தாம்வந்து எனக்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கக்கூடியவர் இன்றிது வேளை யக்கதிகாலகரணமாகி வந்தகாரணமியாது ப்ரதான.

(மந்-வ-ம்.) மகராஜ் ப்ரபுங்கள் (அங்க-வங்க-கலிங்க-காஸ்மீர-சிங்கள-சோள-கொங்கண-தெங்கண-சிந்து-சீன-புலிந்த-யுகந்தர-குந்தள-கேகய-கூர்ச்சர-சாலவ-பல்லவ-பாண்டிய-பப்பர-கன்னட-கொல்ல-கோசல-சோனக-த்ராவிட-மகத-மச்ச-மராட-மாளவ-லாட-போட-கிராட-கன்னட-துளுவ-சோழ-கருச-காச-ஆந்திர-காந்தார-அவந்தி-காம்போஜ-அருண-ஒட்டிய-யவன-சூரசேன-குடக-குருகு-குலிந்த-சவ்வீர-நிடத-நேபாள-சக-மலையாள-பாஞ்சால-வங்காள-விதர்ப்ப) முதலான ஐம்பத்தைந்து தேசத்தில் வாழுஞ் சிற்றரசர்களால் நமக்கனுப்பிய அரசிறைப்பணங்களைக் கணக்குப்பார்த்து வாங்கிப் பொக்கிஷத்திற் சேர்த்து முத்திரையிட்டுத் தகுந்த பந்தோபஸ்துச்செய்துவிட்டு இல்லத்திற்சென்று அமுதுண்டுவர இதுவரை காலதாமதமாகிவிட்டது, அக்குற்றத்தை க்ஷமித்தல்வேண்டு மகராஜ்.

(மத-வ-ம்.) அப்படியா! யானதைப்பற்றி யத்யானந்த சந்துஷ்டியடைந்தேன் ப்ரதான!

(அவேதசந்திரன் மாபுரிக்குச்சென்று நகரசிங்காரத்தைக்கண்டு வருணிக்குந்தரு.

இந்தவனச்சிங்காரம் நந்தவனச்சிங்காரம் என்ற பாடாந்தருவின் வர்ணமெட்டு.)

இராகம்-காபி-ஏகதாளம்

பல்லவி.

இந்நகர்ச்சிங்காரம் சுந்தரவூர்ச்சிங்காரம்
பட்டணத்தின்சிங்காரம் பதியதின்சிங்காரம்

அநுபல்லவி.

என்னவென்றுநான்சொல்லக்கூடும் அந்தப்
பன்னகாதிபனும்வாய் மூடும் (இந்த)

சரணங்கள்.

ஒழுங்குள்ளசாலையும் உயர்மரச்சோலையும்
கோட்டைகளின் விஸ்தாரம்
கொத்தளத்தின் விஸ்தாரம்
அகில்களின் விஸ்தாரம்
ஆளமதின் விஸ்தாரம்
என்னவென்றுநான் சொல்லக்கூடும் அந்தப்
பன்னகாதிபனும்வாய் மூடும் (இந்த)

அவனியையாளும் அரசர்கள்வாழும்
அரண்மனைச் சிங்காரம்
ஆஸ்தானச் சிங்காரம்
மதில்களின் சிங்காரம்
மற்றுமுள்ள சிங்காரம்
என்னவென்றுநான் சொல்லக்கூடும் அந்தப்
பன்னகாதிபனும்வாய் மூடும் (இந்த)

திருத்தொண்டர்சூழுந் தெய்வங்கள்வாழும்
கோவில்களின் சிங்காரம்
கோபுரத்தின் சிங்காரம்
மண்டபத்தின் சிங்காரம்
வர்ணத்தேர்ச் சிங்காரம்

என்னவென்றுநான்சொல்லக் கூடும் அந்தப்
பன்னகாதிபனும்வாய் மூடும் (இந்த)

கெட்டுத்தெருவுகளும் கிறைந்ததருவுகளும்
வேதியர் வீதிகளும்
வேந்தர்கள் வீதிகளும்
வைசியர் வீதிகளும்
மற்றவர்கள் வீதிகளும்
என்னவென்றுநான் சொல்லக் கூடும் அந்தப்
பன்னகாதிபனும்வாய். மூடும் (இந்த)

கடைவீதியின்சிறப்புங் கட்டிடங்களின்பரப்பும்
ஓரடுக்கு மெத்தைகளும்
ஈரடுக்கு மெத்தைகளும்
மூவடுக்கு மெத்தைகளும்
நாலடுக்கு மெத்தைகளும்
என்னவென்றுநான் சொல்லக் கூடும் அந்தப்
பன்னகாதிபனும்வாய் மூடும் (இந்த)

ஐந்தடுக்குமாடிகளும் ஆறடுக்குச்சோடிகளும்
ஏழடுக்கு மெத்தைகளும்
எட்டடுக்கு மெத்தைகளும்
நவவடுக்கு மெத்தைகளும்
பத்தடுக்கு மெத்தைகளும்
என்னவென்றுநான்சொல்லக்-கூடும் அந்தப்
பன்னகாதிபனும் வாய் மூடும் (இந்தப்)

(சுவே-வ-ம்.) ஆஆ-இந்த நகரத்தின் சிங்காரங்களைப்பற்றி யென்னசொல்லப் போகின்றோம். இதோ நெடியதாவரங்கணி றைந்த சோலைகள்போன்றசாலைகளும், அதோ கூடகோபுரங்க ளிலருங்கோவில்களும்,இதோ மாடமாளிகைசெறிந்தவீதிகளும் இன்னும் பலவினோதங்களுங் காணப்படுகின்றது. இந்நகரவிசே ஷங்களைப்பற்றிக் கண்டோர்வியக்க இரண்டாயிரம்நாவைப்பெ ற்ற ஆதிசேஷனும் ஒதற்கரிதெனில் ஒருநாவைப்பெற்றநா ம்பெருமையாப்பேச என்னயோக்கியதையிருக்கின்றது, நல்ல

து இந்தப்பட்டுச் சவுக்கத்தைக்கடைத் தெருவிற்கொண்டுபோ ய்க் காட்டும் பக்ஷத்தில் வர்த்தகர்கள் குறைந்த விலைக்குக்கேட் பார்கள், இதோ எதிரிற்றோன்றப்படுவது இவ்வூராசனுடைய கொலுமண்டபம்போல காணப்படுவதால் அங்குசென்று சவுக் கத்தைக் காட்டும் பக்ஷத்தில் அரசன் விசித்திரமாக செய்திருக் கின்ற லக்ஷணத்தைக்கண்டு மகிழ்ந்து லக்ஷம்பொன் வெகுமதி யளிப்பாராதலால் இப்போதந்தக் கொலுமண்டபத்திற்குச்செ ல்வோம் * காவலாயுற்றசேவகரே யாவர்.

(சேவ-வ-ம்.) காவலாயுற்றசேவகன்யானே.

(சுவே-வ-ம்.) மன்னவனிப்போதென்னசெய்கின்றார்.

(சேவ-வ-ம்.) மன்னவன் சிம்மாதனத்தில் வீற்றிருக்கின்றார்.

(சுவே-வ-ம்.) யாரோவர்த்தகன்வந்திருப்பதாகப் புரவலன் றனக்குவிரைவினிற்றெரிவிப்பீராக.

(சேவ-வ-ம்.) நல்லதப்படியேசொல்கிறேனையா *யாரோ வர்த்தகர் வந்திருக்கின்றார் மகாராஜ.

(மக-வ-ம்.) அட்டியில்லாது விட்டுவிடுவாயாக.

(சேவ-வ-ம்.) கட்டளைப்படியே விட்டுவிடுகின்றேன் மக ராஜ் * மன்னவரும்மை வரச்சொன்னாரையா.

(சுவே-வ-ம்.) ஆறுற்சென்றுவருகின்றேன் *மகராஜவந்த னம் புரிகின்றேன்.

(மக-வ-ம்.) கல்யாண வர்த்தகரே ! நீரெந்தவூர் உமதுநாம தேயமியாது இங்குவந்த விசேஷமென்ன.

(சுவேதச்சந்திரன் சொல்வது.)

சாஹிக்கிச்சித்ரமனபிதமப்பாரே

என்ற இந்துஸ்தானியின் வர்னமெட்டு.

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி

கண்ணிகள்.

எந்தனைச்சுவேதச் சந்த்ரனென்பாரே
இருப்பதுஞ்சத்திய புரியெனும்ஊரே
விந்தைசேர்பட்டொன்று விலைசெய்யத்தானே
வேந்தனேயுமதிடம் மேவிவந்தேனே.

பட்டுசேர்கண்ணுற் திட்டமாய்ப்பாரும்
பார்த்துநல்வெகுமானம் பூர்த்தியாய்த்தாரும்

(சுசே-வ-ம்.) மகராஜ் பாருங்கள்! யானிருப்பது சத்யபுரி என்றுபெயர் சுசேலதச்சந்திரன் ஓர்பட்டுச்சவுக்கம் விற்பனை செய்யும் பொருட்டுத் தங்களைத்தேடி வந்திருக்கின்றேன், இந்தப்பட்டின் வேலைத்திரத்தைக் கண்ணுற்பார்த்துத் தக்கசன்மானங் கொடுக்கவேண்டு மகராஜ்.

(மத-வ-ம்.) நல்லது அப்படியே தருகின்றேன்பட்டுச்சவுக்கத்தை யெடும்பார்ப்போம்.

(சுசே-வ-ம்.) இதோ பாருங்கள் மகராஜ்.

(மதனமகாராஜன்சொல் தரு.)

சாமிநீவாடா இன்பந்தாடா-ஜாலமோடா என்னடா.

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இ-ம்-காபி-தாளம்-சாபு.

பல்லவி.

மந்திரியாரே-இந்தட்டவுல்
சுந்தரத்தின்விந்தையை (மந்)

அநுபல்லவி.

ஐந்துவிதநூல் கொண்டு அமைந்ததையாவித்துண்டு
சந்துவிழுகாமற்சேர்த்துச் சமத்காரமாகக்கோர்த்தவிந்தையை

(மத-வ-ம்) ஆஆ-ப்ரதான் இந்தப் பட்டுட்டவுலின் விநோதத்தை என்சொல்லப்போகின்றேன்பாரும் இந்தபஞ்சவர்ணப்பட்டுநூற்களாற் கிஞ்சிற்றேனுஞ்சந்தின்றி நெருக்கமாகக் கொடி செடிபுஷ்பமுதலான அழகுமிகுந்த விச்சித்ரவேலைகள் செய்திருப்பதுமன்றி எவ்வளவோ மிருதுவாயிருக்கின்றது பிரதான்.

(மந்-வ-ம்.) வாஸ்தவந்தான் மகராஜ்.

(மத-வ-ம்.) ஹே வர்த்தகரே! இந்தச் சவுக்கம் நீர்தானே நெய்தீர்.

(சுசே-வ-ம்.) எனது மனைவி கரத்தால் நெய்யப்பட்டது மகராஜ்.

(மத-வ-ம்.) அப்படியா நல்லது அந்தமாது இவ்விடத்திற்கு வரவில்லையாவென்ன.

(சுசே-வ-ம்) மகராஜ் என்னுடன் இவ்விடத்திற்கு வந்தவள் இந்நகரத்திற்குக் கிழ்பாலிருக்கின்ற ஆரண்யத்தில் ஓர்தாமரைத்தடாகமிருக்கின்றது அவ்விடத்திலிருந்துகொண்டு என்னை யிங்கனுப்பிவைத்தனள் மகராஜ்.

(மத-வ-ம்.) அந்த மாது நாமதேயம் யாது.

(சுசே-வ-ம்) அவள் நாமதேயம் சதாரமென்று சொல்வார்கள் மகராஜ்.

(மதனமகாராஜன் சொல்-தரு.)

அருமைக்கண்மணியைக்காணேனே-இந்த
ஆபத்துக்கென்செய்வேனே

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இ - ம் - கனகாமங்கிரிஸ்ய - தாளம் - சாபு

பல்லவி.

மந்திரிமாதுபேர்கேட்டேன்-இனி
மருவாமலுயிர்வைக்கமாட்டேன்

அநுபல்லவி.

சுந்தரவதியவள்தானே வேறு
சொல்லவும்வேண்டுமோகானே ஐயா (மந்தி)

(மத-வ-ம்.) ஹேப்ரதான்! இந்தப்பட்டுச்சவுக்கந்தான் இவ்வளவு சுந்தரமாயிருக்கின்றதென்று எண்ணியிருந்தோம், இதை நெய்தமங்கையின் பெயருஞ் சதாரமென்று சொல்வதால், அவள்சதாதினமும், மனதிற்கு ரம்மியமாயிருக்கக்கூடிய அழகினில் மிகுந்தவளாயிருக்குமென்பதற்கையமில்லை யாதலின் அவளை எவ்விதமாயாவது கூட்டிவந்து மருவிச் சுகிக்காவிடில் என்னுயிர் நிலைதரிக்கமாட்டாது. ஆகையால் இவனைப் பிடித்துக்கொண்டுபோய்க் காராக்ரகத்திலடைத்துவிட்டு நமதுசகியை யழைத்துவரும்படி செய்யுஞ்சீக்கிரம்.

(மந்-வ-ம்.) அப்படியே செய்கின்றேன். * அடா சேவகா இந்த வர்த்தகனைக் காராக்ரகத்திலடைத்துவிட்டு நமதுசமஸ்தானத்திலுற்ற நயவஞ்சக சகியை யழைத்துவா சீக்கிரம்.

(சேவ-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் ப்ரபு ✻வாவோய் காராக்ரகத்திற்கு.

(சுவே-வ-ம்.) எதற்காக என்னைக் காராக்ரகத்திலடைக்கச்சொல்கின்றீர்கள் மகாராஜ்.

(மத-வ-ம்.) அடா சேவகா! இந்தத்துஷ்டனைக் கலித்தாக் கொடுத்துக்கொண்டுபோ சீக்கிரம்.

(சேவ-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் மகாராஜ் ✻ சிரமமாக வருகின்றனையா அடிவேண்டுமோ.

(சுவே-வ-ம்.) ஐயா என்னையடிக்கவேண்டாம் தானேயருகின்றேன்.

(சேவ-வ-ம்.) சீக்கிரம் நடந்துவா.

(சுவேதச்சந்திரன் சொல் புலம்பற்கு.)

அரவபரணனே-அபிராமிநேயனே

என்ற இந்த்ரசபாவின் வர்ணமெட்டு.

இ-ம்-சங்கராபரணம்-தாளம்-சாபு

கண்ணிகள்.

ஐயையோஜெகதீசா — மையலம்பிகைநேசா
அடியேனைக்காருமையா
சிற்றறிவுளமன்னன் — குற்றமிலாதவென்னைச்
சிறையிலடைக்கச்சொன்னான்
ஜீவனஞ்செய்யவெண்ணிப் — பாவியிடத்தில்கண்ணிச்
சிறைபடவிதிவசமோ
நண்டுவிற்கவேவந்தேன்தெண்டனைபெற்றுசொர்ந்தேன்
சுந்தராஎன்னசெய்வேன்
இப்படியாமென்றுநான் — சொற்பனமறிகிலேன்
ஈசனேயென்னசெய்வேன்
காக்கக்கடனில்லையோகருணைகொஞ்சமில்லையோ
கடவுளே காருமையா

(சுவே-வ-ம்.) ஆஆ-ஜெகதீசா! யான் காலக்ஷேபஞ் செய்யும்பொருட்டாகப் பட்டுச்சவுக்கம் விற்பனைக்காகக் கொண்டு வந்தவிடத்தில் இந்தப் பாவியாகிய மன்னனானவன் யாதொரு

குற்றமுஞ் செய்யாத என்னை நிஷ்களங்கமாகச்சிறைச்சாலையிலடைத்துவிடும்படிசெய்தானே. ஆஆ எனக்குயிப்படிவருமென்று சொற்பனங்கூடக்காணவில்லையே, ஆஆ-கடவுளே என்னைக்காப்பாற்ற ரக்ஷிக்கலாகாதா ✻ஆஆ-நாமெவ்விதமாகக் கதறினாலும் இச்சேவகன்விட்டுவிட்டுபோகின்றானா ஒருக்காலுமில்லை, என் செய்கின்றது, நல்லது. இவனுடன் காராக்கிரகத்திற்குச் செல்வோம், அப்பால் விதிபோல் நடக்கின்றது.

(சேவ-வ-ம்.) வாவோய் சீக்கிரம்.

(சுவே-வ-ம்.) இதோ வருகின்றேனையா.

(சகி ராஜசபைக்கு வருதல்.)

(சகிசொல் வசனம்.) மகாராஜ் சகிவந்தனம்புரிகின்றேன்.

(மத-வ-ம்.) கல்யாண் சகி.

(சகி-வ-ம்.) ப்ரபு சகி வந்தனம் புரிகின்றேன்.

(மத-வ-ம்.) கல்யாண் சகி.

(சகி-வ-ம்) என்னை யழைத்துவரும்படி யாக்ஞாபித்தருளிய காரணம் யாது மகாராஜ்.

(மதனமகாராஜன் சொல்-தரு.)

சாமி-என்னடா தாமதஞ்செய்கிறாய்

என்ற ராமநாடகத்தருவின் வர்ணமெட்டு.

இ-ம்-கமாஸ்-தாளம்-சாபு

பல்லவி.

சகி-அன்னமேசொல்லுவேன் கேளடி.

சரணம்.

ஆரண்யத்திலே — நிரசக்கனை
அருகிலுற்றவோர்மங்கையைச்
சோரமாய்க் — காரணஞ்
சொல்லிவிட்டுவா இங்கையே-சகி (அன்)

(மத-வ-ம்.) ஹே சகி, யாரோ ஒருவர்த்தகன் என்னிடம் பட்டுச் சவுக்கம் விற்பனைக்குக் கொண்டுவந்தான்; யானதைக்கண்ணுற்று வேலைத்திறத்தைமெச்சி யாவர் செய்ததென்று வினவினேன், அதற்கு அந்த வர்த்தகன் தன் மனைவி செய்ததென்றும் அவள் பெயர் சதாரமென்றும், அவள் இன்னகாக்குக்கிழ்பாலுற்

ற ஆரண்யத்திலிராகின்ற தாமரைத்தடாகத்தின் மருங்கிலிருக்கின்றாளென்றுஞ் சொன்னான். அவளதிக ரூபவதியாயிருப்பாளென்பதாயுத்தேசித்து அவளைக்கூடிச் சுகானுபவங்களை யனுபவிக்கவேண்டுமென்றெண்ணி அந்த வர்த்தகனைச் சிறைச்சாலையிலடைத்துவிட்டேன், நீயவஞ்சகந்தெரிந்த சகியானதினிமித்தம் உனக்கெல்லாத்தந்திரங்களுந் தெரியுமாதலால் நீஇப்பவே அந்த மங்கையிருக்குமிடந் தேடிச்சென்று அவளைக்கண்டு, இவ்விடத்திற்கு வரும்படியான பொய்யான மூகாந்திரங்களைப் புகன்று எவ்விதமாவது என்னிடங் கொண்டுவந்து சேர்க்கவேண்டும், இல்லாவிடில் என்னுயிர்நிலைத்திருக்கமாட்டாது, சகி இதற்கென் சொல்கின்றனை.

(சகி-வ ம்.) ஆஆ-மகாராஜ்! யான் கல்லையுமுருகச்செய்யும் வல்லமையுடையவளென்பது தங்களுக்குத் தெரிந்திருக்குமல்லவா அங்ஙனமிருக்க,எனக்கெதற்காக விசேஷஞ்சொல்லவேண்டு மகாராஜ். அந்தப்பட்டுவஸ்திரத்தைக் கொடுங்கள் யான்சென்று அரைநிமிஷத்திற் கொண்டுவருகின்றேன் மகாராஜ்.

(மந்-வ-ம்.) ஆனால் இதோ எடுத்துக்கொண்டு விரைவாய்ச் சென்றுவா.

(சகி-வ-ம்.) அப்படியே சென்றுவருகின்றேன் மகாராஜ்.

வேதச்சந்திரன் மீண்டுவாராததைக்கண்டு
சதாரம் புலம்புஞ்ஜாவளி.
தானிபோதனு வின்டிவோரா அலா
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
இ-ம்-கமாஸ்-தாளம்-சாபு
பல்லவி.
போனவரின்னம்வரக்காணேனே-நாதன்
போனவரின்னம்வரக்காணேனே
அநுபல்லவி.
ஏனின்னந்தாமதமா யிருக்கிறாரோவறியேன் (போன)
சரணம்.
பட்டுவிற்பனையாச்சுதோ மோசம்போச்சுதோ
இட்டமதாய்நடந்த சேதியொன்றுமறியேன் (போ)

(சதா-வ-ம்.) ஆஆ-ஜெகதீசா! பட்டுச்சவுக்கத்தை விற்பனைசெய்து வருவதாக அடுத்த நகரத்திற்குச்சென்ற எனது பர்த்தாவானவர் வெகுநேரமாகியும் இன்னும்மீண்டுவாராதிருக்குங்காரணந் தெரியவில்லையே, ஆஆ- போனவிடத்திற் பட்டு விற்பனை செய்தாரோ, அல்லது சவுக்கத்தையிழந்து பரிதவித்துக்கொண்டிருக்கின்றாரோ, அல்லது இன்னும் வேறென்னகாரியார்த்தமாயிருக்கின்றாரோ, யாதோ ஒன்றும்புலப்படவில்லையே,ஆஆ-என் மனமானது பலவித சந்தேகப்பட்டுப் பதறுகின்றதே இதற்கென்செய்வேன், கல்லது இன்னுஞ் சற்று பார்த்துக்கொண்டு யானாவது சென்று தேடிப்பார்த்து வருகின்றேன்.

சகி ஆரண்யத்திற்குச்சென்று சதாரத்தைக்கண்டு
வியப்புற்றுச் சொல்லுந்தரு.
உனைநானம்பினேனையனே
என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.
இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-சாபு
பல்லவி.
இவள்தான் போலிருக்கிறதே
அநுபல்லவி.
எந்தல்சொன்ன காந்திமு (இவள்)
எந்திழையாளும்

(சகி-வ-ம்.) ஆஆ-ஈடுமோ அரசனிடத்தில விடைபெற்றுக் கொண்டு இவ்வாரணியத்திற்கு வந்தோம், இத்தாமரைத்தடாகத்திற்கருகாண்மையினால் ஏகாந்தமாய் வீற்றிருக்கின்ற மங்கையைநோக்குமிடத்து மதாசனைமுத் அருப்படி பார்த்திர்த்த சித்திரபோமைத்தையொத்த சுந்தரமுகமாது இவள்தான்போலிருக்கின்றது. நல்லது அவள் சமீபத்திற்குச்சென்று அவ்விருத்திரவார்த்தைக்குட்பட்டதின் அரயணாக்கமுத்துச் செல்வோம்போமா.

(சகி-சொல் ஜாவளி.)

இகபாலனே-வானிபொசு-இந்தாமுகிசாதனே

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

நீயாரம்மா கூடிப்பார் ஆரணியத்தில்வந்தவள்
நீயாரம்மா கூறம்மா

அநுபல்லவி.

வீருமொது பெருமெது
உள்ளபடி விள்ளுவாய்நீ (யாரம்மா)

(சகி-வ-ம்.) ஆஆ-மதிபிம்பனைக் கேர்த்த வதனத்தைவிசித்த மாதேநீயார், உனது நாமதேயம்யாது உனதூரகதெது, இவ்வாரணியத்தில் யாதொரு துணையுமின்றி யேகாந்தமாய்வீற்றிருக்குங்காரணம்யாது அதன்விபரத்தைத் தெரிவிக்கவேண்டுமானே.

சதாரம் சொல் தரு.

சுந்தரிநீ யெந்தனை வந்தாதரி

என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மங்கைபெண் சங்கதிதனைக்கேளம்மா

அநுபல்லவி.

இங்குநானொரு தங்கிலாய்வந்தேன்
இந்தநாளம்மா
என்கதனை யிப்பம்கேள்பாரே. (மங்)

சரணம்.

யானிருப்பது சத்யபுரி நாளம்மா
மானினியே சதாரமென்ற மாதுநானம்மா
வர்த்தகஞ்செய்ய வந்தோமேமையே. (மங்)

(சதா-வ-ம்.) ஆஆ-மாதே! யானிருப்பது சத்யபுரி எனது நாமதேயம் சதாரமென்றுசொல்வார்கள், மேம்மானே! யானும் எனதுபர்த்தாவும் வர்த்தகஞ்செய்யும்பொருட்டுப் பட்டுச்சவுக்கம்கைய்துகொண்டு இம்மார்க்கமாய்வரும்பொழுது என்னையிவ்வாரணியத்தில் வைத்துவிட்டு என்புர்த்தாவானவர் பட்டுவஸ்திரம் விற்பனை செய்வதற்காக அதோதோற்றப்படுகின்ற நகரத்திற்குச்சென்றவர் மீண்டுவாராதிருப்பதினிமித்தம் அவர்வரவுக்கெதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றேன் வேறுவிசேஷமில்லை மாதே.

(சகி-வ-ம்.) பட்டுவஸ்திரம் விற்கவந்தவர் உனதுநாயகன்றானோ

(சதா-வ-ம்.) ஆம் அம்மணி,

(சகி-வ-ம்.) இந்தப்பட்டுச்சவுக்கம் உனதுநாதன் கொண்டுவந்ததுதானோ நன்றாய்ப்பார்த்துச்சொல் மாதே.

(சதா-வ-ம்.) இது எனது கணவன் கொண்டுவந்த பட்டுதானம்மா உன்கையிலெவ்வாறுகிடைத்தது எனதுநாயகன்வாராதிருக்குங்காரணம்யாது அந்தவிபரந்தெரிவிக்கவேண்டுமம்மணீ.

(சகி-சொல் தரு)

வாராயோவாராயோ கண்ணே வைகுந்தமன்னே

என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாபு.

பல்லவி.

கேளாயோ கேளாயோ பெண்ணே அந்தக்கொடுமை
கேளாயோ கேளாயோ பெண்ணே.

அநுபல்லவி.

வேளாநுகூலகதி மேவினதிலேவிதி
தாளாமல்மூண்டிட்டதினால் அந்தக்கொடுமை (கேளா)
பர்த்தாவந்தவிடத்தில் செத்தாரிந்தக்ஷணத்தில்
பித்தானயானைபதத்தில் அந்தக்கொடுமை (கேளா)

(சகி-வ-ம்.) ஆஆ-மானே! அந்தக்கொடுமையையானென் சொல்லப்போகின்றேன் பார் உனதுநாயகனைவர் இம்மயபுரிக் காசனுகிய மதனமகாராஜாவின் அரமனையிற் பட்டுவஸ்திரம்விற் கவரும்போது அங்குநின்றிருந்த மதங்கொண்ட பட்டத்துயா னையினால் மிதிபட்டு இறந்துவிட்டனர். அவர்உயிர் துறக்கும்போ து இந்தவஸ்திரத்தை என்னிடங்கொடுத்து நீயிருக்குமிடத்தின் அடையாளமுங்கூறி உன்னிடத்திற்றந்துசேர்க்கவிபத்தையு றிவிக்கும்படிசொன்னார் அதற்காக இவ்விடம் வந்தேனம்மா.

(சதாரம் சொல் தரு.)

மோகங்கொண்டேன் துரைபே
என்ற ட்ராமாததருவின் வர்ணமெட்டு.
இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி

பல்லவி.

அம்மா அம்மாஎன்னஎன்னஅதை இன்னொருதரஞ்சொல்

அநுபல்லவி.

சும்மாநீசொன்னசேதி தோன்றவில்லையதுபாதி(அம்மா)

(சதா-வ-ம்.) ஆஆஅம்மா நீ சொன்னவார்த்தையிற் சிலது எனக்கு ஒன்றும் விவரப்படவில்லை, இன்னொருதரம்விபரமாய்ச் சொல்பார்ப்போம்.

(சகி-வ-ம்.) ஆஆ-மானே உனதுகணவன் அரமனைப்பட்ட த்துயானையினால் மிதிபட்டு இறந்துபோய்விட்டாரம்மா.

(சதா-வ-ம்.) ஆஆ-அம்மா இவ்வார்த்தை வாய்தவறாது நிச்சயமாய்ச்சொல்லம்மா.

(சகி-வ-ம்) கடவுள்சாக்ஷியாக வாஸ்தவந்தானம்மா

(சதாரம் புலம்புந் தரு.)

அடிபாவி துணிந்துவெட்டக் கைவருமோ
என்ற அரிச்சந்த்ரநாடகத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ஆதி

கண்ணிகள்.

ஐயோநானென்னசெய்வேன்	திருவுளமே-இந்த
ஆபத்தாக்காளாக்கிவைத்தாய்	திருவுளமே

வையகத்திலென்னைப்போலே	திருவுளமே-கொடு
மர்பாவியாருமுண்டோ	திருவுளமே
நாடுநகரிழந்து	திருவுளமே - மற்று
வீட்டோரையுமிழந்தோம்	திருவுளமே
பாடுபட்டுப்பிழைக்கத்	திருவுளமே- இந்தப்
பாழ்நகர்தேடிவந்தோம்	திருவுளமே
வந்தவிடத்திலிலே	திருவுளமே - இந்த
வகைமோசஞ்செய்துவைத்தாய்	திருவுளமே
சிந்தைகலங்குதையோ	திருவுளமே - வயிறு
தீப்பிடித்துவேகுதையோ	திருவுளமே
இப்படிவருமென்று	திருவுளமே-நானும்
சொற்பனமறியேனே	திருவுளமே
அற்பனைசெய்துவிட்டாய்	திருவுளமே - இனி
எப்பொழுதுகாணுவேநான்	திருவுளமே

(சதா-வ-ம்.) ஆஆ-ஜெகதீசா! என்னை யிவ்விதிக்காளாக் கிவைத்தனையே, ஆஆ-பூவுலகில் என்போன்றகொடும்பாவிகள் ஒருவருமில்லையே, ஆஆ-யாங்கள் நாடுநகரங்களையும் சுற்றத்தா ரையும் குபேரசம்பத்தையுமிழந்து பஞ்சைபோல பாடுபட்டுக் காலக்ஷேபஞ் செய்யவந்தவிடத்திற் பர்த்தாவைப் பலிகொடுத் துப் பரதவிக்கும்படி செய்துவிட்டாயே, ஆஆ-என்மனமானது அனலிலிட்ட மெழுகுபோல உருகித்தவிக்கின்றதே, ஆஆ- என க்கிப்பேர்க்கொத்த ஆபத்து வருமென்று யான் சொற்பனத்திலு மெண்ணவில்லையே, ஆஆ -(பெற்றுக்கித்தின்னுங் கோழியை மூக்கறுத்ததுபோல) இப்படி மோசஞ்செய்யலாமென்று எத்த னைநாளெண்ணியிருந்தாயோ தெரியவில்லையே, ஆஆ - இனிமே லென் கணவனை எப்பொழுது காணப்போகின்றேன், ஆஆ - சிவனே! இனிமேல் யானென்செய்வேன்.

(சகி-வ-ம்.) ஆஆ-மாதே! நீவேதனைப்பட்டதினால் உனது காந்தனெழுந்து வரப்போகின்றாரா, நீயேன் வீணாக ரோதனஞ் செய்கின்றனையம்மா.

(சதாரம்சொல் ஜாவளி.)

அழகுள்ள இவராரடி எம்ப்ராணசகி
என்ற ட்ராமாஜாவளியின் வர்ணமெட்டு.
இ-ம்-கமாஸ்-தாளம்-சாபு

பல்லவி.

நையவேயென்னசெய்வேன்-இந்தவினைக்குத்
நையவேயென்னசெய்வேன்

அநுபல்லவி.

ஐயோவுயிர்துடிக்குதே   இந்தவினைக்குத் (நைய)

சரணங்கள்.

பிழைக்கவந்தவிடத்திற்   பிரியனைவாளினே
இழக்கவும்விதிவசமோ   இந்தவினைக்குத் (நைய)
வெண்ணெய்திரளுமுன்னேயென்னமுடைத்ததென்னும்
உண்மைபோலாச்சுதம்மா   இந்தவினைக்குத் (நைய)
இப்படிவருமென்று   சொற்பனமறியேனே
எப்படியினிப்பிழைப்பேன்   இந்தவினைக்குத் (நைய)

(சதா-வ-ம்.) ஆஆ-மாதாசி! என் காலவித்யாசத்தை யென்சொல்லப்போகின்றேன், ஆஆ-பாவம் எனது பர்த்தாவுங்காலக்ஷேபஞ் செய்யும்பொருட்டு வந்தவிடத்தில் என் விதிவசமானது புருஷனை யிழந்து புலம்பித் தவிக்கும்படி யாகிவிட்டதே, ஆஆ-யான்திருமணம்புரிந்த பாபமே யல்லாது யாதொரு சுகத்தையுமனுபவிக்கவில்லையே, ஆஆ-இனிமேல் நல்ல சுகத்தையனுபவிக்கலாமென்று எண்ணியிருந்த எண்ணத்திற்குப் பின்னமாக (வெண்ணெய் திரண்டுவருமுன்னே பானையுடைந்த) தென்னும் பழமொழி யுண்மையாய்ப் பலித்துவிட்டதே, ஆஆ-இப்படிவருமென்று சொற்பனங்கூடக் காணவில்லையே, ஆஆ-என் மனமானது பறந்து துடிக்கின்றதே, ஆஆ-எனக்கு யாதொரு திக்குமில்லையே, இந்தத்துவினைக்கு யானென்செய்வேனம்மா.

(சகி-வ-ம்.) ஆஆ-மாதே! விதிவசத்திற்கு நாமென்செய்கின்றது. இனிமேலாகவேண்டிய காரியத்தைப் பாரம்மா.

(சதா-வ-ம்.) ஆஆ-தாயே! எனது பர்த்தா இறந்தவிடத்தைக் காட்டுவாயாகில் சற்று கண்ணிலாவது பார்த்துக்கொள்வேனம்மா.

(சகி-வ-ம்.) ஆனலப்படியே காட்டுகின்றேன், வாசெல்வோம்.

(சதா-வ-ம்) இதோ அப்படியே வருகின்றேன்.

சகி சதாரத்தை அரமனைக்கழைத்துப்போய்க்
கபடமாக அடையாளங்காட்டிச்சொல் தரு.

ஜென்மமெத்துகு புத்திவேணிர ஜென்மமெத்துகு
என்ற க்ருத்திகையின் வர்ணமெட்டு.
இராகம்-மலயமாருதம்-தாளம்-ஆதி.

பல்லவி.

இதுதானம்மா-இன்பன்செத்தவிடம்
இதுதானம்மா

அநுபல்லவி.

மதிமுகமாதே   வந்துபாரிப்போதே (இது)

(சகி-வ-ம்.) ஹேமாதே! உனதுநாயகனிறந்த அரமனையிதுதான் உள்ளேவந்து கண்ணாறப்பார்த்துக்கொள்ளம்மா.

(சதா-வ-ம்) அப்படியேவருகின்றேனம்மா.

சகி சதாரத்தை மதனமகாராஜன்சபைக்கு
அழைத்துப்போதல்.

(சகி-வ-ம்.) மகராஜ் சகி வந்தனம்புரிகின்றேன்.

(மத-வ-ம்.) கல்யாண் சகி.

(சகி-வ-ம்.) ப்ரபு சகி வந்தனம் புரிகின்றேன்.

(மத-வ-ம்.) கல்யாண் சகி.

(மத-வ-ம்.) ஹே சகி! இந்த மங்கை யாவள்.

(சகி-வ-ம்.) மகராஜ் தாங்களழைத்துவரும்படி யாக்ஞாபித்த மங்கையிவள்தான் எனது தந்திரவார்த்தைபாற் கட்டுப்படுத்தி யழைத்துவந்து விட்டேன், இனிமேல்நடக்கவேண்டியகார்

யாழியைப் பார்த்துக்கொள்ளுங்கள், யாளிந்தாஜிரகத்திற்குச் செல்கின்றேன்.

(முத-வ-ம்.) அப்படியா வெகுசந்தோஷமாயிற்று, நல்லது நான் பார்த்துக்கொள்கின்றேன், நீசொன்னவாசகப்படி நீதான் இப்பொழுதேசென்று இவள் பர்த்தாவைக் காராக்ரகத்திலிருந்து விடுவித்து வெளியிற்றுரத்திவிடுவீராக.

(மந்-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் மகாராஜா.

(சதாரம் புலப்புந்தரு.)

அறியாமல்மதிமோசமானேனே

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இ-ம்-எதுகுலகாம்போதி-தாளம்-சாபு

பல்லவி.

ஐயையோசதிமோசஞ்செய்தானே-அந்தவஞ்சியும்
ஐயையோசதிமோசஞ்செய்தானே

அநுபல்லவி.

செய்தானேமோசஞ் செய்தானே அந்தவஞ்சியும் (ஐயை)

சரணங்கள்.

நம்பியல்லவோவிங்கேவந்தேனே அவன்வார்த்தையை
நம்பியல்லவோயிங்கே வந்தேனே
வந்தேனேயிங்கே வந்தேனே-அந்தவஞ்சியும் (ஐயை)
இப்படியென்றறிந்தும் அறிந்திலேனே-பாவியென்னுடைத்தை
இப்படியென்றறிந்தும் அறிந்திலேனே
அறிந்திலேனேநானும் அறிந்திலேனே-அந்தவஞ்சியும் (ஐயை)
தப்பிச்செல்லும்வழியைக் காணேனே-இவளைவிட்டுத்
தப்பிச்செல்லும்வழியைக் காணேனே
காணேனே வழி காணேனே அந்தவஞ்சியும் (ஐயை)

(சதா-வ-ம்.) ஆஆ-பாவியாகிய சகியானவள் நமதுபர்த்தா ம்ருத்தனாய்ப் பாவிக்க கட்டின வார்த்தையைக் கெட்டியாக நம்பியல்லவோ இங்குவந்தோம் அங்ஙனமிருக்க, அவள் இவ்வரசனிடத்தில் நம்மை யொப்பிவித்துச் சிலசத்யமில்லா வார்த்தைகளைச் செப்பிவிட்டுச் சென்றதை யோசிக்கும்விஷயத்தில்நமது

பர்த்தாவானவர் இறந்துபோனதாக ஒன்றும் புலப்படவில்லை ஏதோ நமது பதிவிரதாதர்மத்திற்குப் பங்கந்தேடும்பொருட்டு இவ்வரசனுக்கிணையின்படி நம்மை யழைத்துவந்திருப்பதாகக் காணப்படுகின்றது. நாமிவனைவிட்டுத்தப்பித்துச்செல்ல யாதொரு மார்க்கமுங் காணப்படவில்லையே யென்செய்கின்றது (உரலிலே தலையை மாட்டிக்கொண்டு உலக்கைக்குப் பயந்தாற் நீருமா) என்பதுபோல, நாம் கவலைப்படுவதிற் பயனில்லை, நல்லது இனிமேலென்னவிஷயங்கள் நடக்குமோ அவைகளையறிந்து அப்பாலதற்குவேண்டிய தந்திரந்தேடிக்கொள்வோம்.

(மதனமகாராஜன்சொல் தரு.)

என்னமாயமோ இவளைக்காணேனே

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

இவளழகைநான் என்னசொல்லுவேன்

அநுபல்லவி.

உவமையெவ்விதம் உரைத்துவெல்லுவேன் (இவ)

சரணங்கள்.

ரதியும்வெட்கவே ரம்பையுட்கவே
மதியையொப்பவே வந்தாளிப்பவே (இவ)
பார்த்தகோமாய்ப் பற்றுதேமையல்
வார்த்தையாடினால் மருவுவாள்தையல் (இவ)

(மத-வ-ம்.) ஆஆ-இம்மாதுசிரோமணியினழகையும், அவ்வழகிற்குத் தகுந்த வுவமையும் என்சொல்லப்போகின்றோம், ஆஆ-ரதிமுதலான அரம்பாஸ்த்ரீகளுங்கண்டு நாணமுற்றுப்பின்னிடைவர்களெனில், மற்ற ஸ்ரீமாதர்களை இவளுக்கு நிகராகச் சொல்ல என்ன யோக்யதை யிருக்கின்றது. ஆஆ-இவளை நேத்திரத்திற் பார்த்தமாத்திரத்திலேயே மேமந்தவாந்துகாமமதிகரிக்கின்றதே, இவளைக்கலந்தா லெவ்வளவு சுகங்கிடைக்குமோ ஆஆ இவள் வந்தநேரமாய்க் கிஞ்சிற்றேனும் அச்சமின்றிப் பக்ஷமாய்

கற்பனை போதிக்கும் விலாபத்தில் மனைவருக்குப் பொருத்தம்பினாற்குவாளென்பதற்கு யாதொருச்சந்தேகமில்லை, கல்லது கொஞ்சம் வார்த்தையாடி இவள் மனதைப்பிடித்ததை யறிவோமிப்போது.

(மதனமோகராஜன் சொல்-தரு)

அங்கிருக்கிறமிங்குவந்ததெப்படி நாரிமே
என்றனிந்த்ரசபாவின் மானேயேடி.

இராகம்-காபி-தாளம்-ஆதி

கண்ணிகள்.

மங்கையேயுன் செங்கமுகின்
வடிவுகண்டேனே
மருவிழியே யாடுத்து
மயல்கொண்டேனே
சாந்துறைந்த சுந்தரமு
தன்கரமேகமே
தையலேயுன் செந்துவர்த்த
சுந்தரமுகமே
புருவமது இருபுருவேள்
பொற்கையில்வில்லே
புனலேயுன் வாய்மொழித்தல்
போன்றதற்சொல்லே
தனதுளை துளிருமாநு
சுக்ரயிப்பமே
தனபிரண்டும் தனிமிகுந்த
தங்கக்கும்பமே
காதிரண்டும் பேதமில்லாக்
கத்தரிக்கோலே
கண்ணிரண்டும் சண்முகவேள்
கைவடிவேலே
எந்திழையுன் மூக்கழகும்
எள்மலரொக்கும்

இதழிணைக்கண் டேபவளம்
எங்கியேநிற்கும்
பன்னமருசன் மின்னுகன்னம் ⌠
வடிவிற்சாணையே
மங்கையேநின் முன்கைசாணமும்
மகர்விணையே
வாயிலேசக்கன் டேகுமுக
மலரும்நாணுமே
மானேதந்த வரிசைமுத்தாய்
வழுத்தவேணுமே
கன்னிகையே உன்கழுத்துக்
கமுகம்மாமே
கறித்தெழுந்த தோட்டவிழுத்திற
கழையின்றாமே
அங்கைசாண்டும் பங்கயமென
நறையுந்தளிரே
அதிமிருக்கும் விரல்களத்தும்
அடர்ந்தகெளிறே
பத்துவிரல் நகங்களெல்லாம்
பவளத்தின்றுண்டே
பாவையேயுன் தோடைகள்வாழை
பற்றியதண்டே
இன்னுமுந்தன் வயறு விலை
யியல்போல்வாட்டமே
இலகுரோமக் கொடியதுஞ்சிற
றெறும்புக்கூட்டமே
உந்தியது நீர்ச்சுழிபோல்
உற்றதாகுமே
உன்னிடையும் மின்னலைப்போல்
ஒளித்துபோகுமே
அல்குலையான் சொல்வதென்ன
அரவபடமே

97013.

அக்குறியும் மான்குழம்பே
யாகுந்திடமே
கல்லெழுமக் தாளிரண்டும்
கண்டையொக்குமே
நற்கமலக்காற் கண்டவிரால்
கடுங்கிவெட்குமே
பாதமதைப் பங்கயப்பூப்
பார்த்தநாணுமே
பயிலுநடை அன்னமெனப்
பகரவேணுமே
இந்தவித சுந்தரஞ்சேர்
எந்திழையாளே
எந்தனுக்கு சுந்தசுகம்
ஈய்வாயிவ்வேளை
முத்தையன்ப தங்கள்கற்ற
மோகனப்பெண்ணே
முத்திழைத்த வாய்திறந்து
மொழிகுவாய்கண்ணே

(மத-வ-ம்.) ஆஆ-செப்புதற்கரிய ஒப்பிலாவாய்த்த சோகரிய, நினக்குற்ற ரூபலக்ஷணங்களைக் கண்டமாத்திரத்தில் ரஞ்சித மிஞ்சிய செஞ்சிலைமாரன் வஞ்சமாய்விடுத்த பஞ்சபாணத்தால் மிஞ்சிய விரகங்கொண்டிருக்கின்றேன், அதனஞ்சிடும்பொருட் டுன் கிஞ்சுகவாயாற் கொஞ்சிபேணத்தெண்செய்கின்றனே.

(சுதாரம் சொல் தரு.)

சின்னபாகி-எட்லஉந்தரு
என்றக்குந்திகையின் வர்ணமெட்டு.
இ-ம்-பலஹம்ஸா-தாளம்-ஆதி
பல்லவி.

என்னவார்த்தை-சொல்கிறீரையா
அநுபல்லவி.
கன்னியைக்கண்டு காதலுங்கொண்டு (என்)

சரணம்.

அயலவள்மீது ஆசையிப்போது
மயலுமுண்டாச்சோ மனுநீதிபோச்சோ (என்)

(சுதா-வ-ம்.) ஆஆ-மகாராஜ்! என்னவார்த்தை பாஷிக்கின்றீர்கள், பாருங்கள் யானோ அன்னியமாது! தாங்களோ அரசனாங்ஙனமிருக்க, மற்றவர்கள் குற்றஞ்செய்தால் மனுநீதிப்பிரகாரந் தண்டிக்கவேண்டிய அதிகாரத்தைப்பெற்ற தாங்களேயிவ்விதமான கெட்டகார்யத்திற்குடன்படும்பக்ஷத்தில் மனுநீதிக்கென்னயோக்யதை யிருக்கின்றது தாங்களென்மீது காதல்கொள்வது சரியல்ல மகாராஜ்.

(மதனமகாராஜன் சொல்-தரு.)

அடியனமே-மயிலினமே
என்ற டாமாத்தருவின் வர்ணமெட்டு.
இ-ம்-காபி-தாளம்-ஆதி
பல்லவி.

அடிவஞ்சியே-ஆசை-மிஞ்சியேயுனைக்
கெஞ்சினேனடி பஞ்சைநான்
அநுபல்லவி.

என்னை-மருவுங்கிருபை புரிவாய்-கிட்ட
வாடிமுத்தக் தாடியிளம் (வஞ்சி)
சரணங்கள்.

அடி-இன்னஞ்ஜால மென்னவெழி
லன்னகடை-யின்னே
என்னை-மருவுங்கிருபை புரிவாய்கிட்ட
வாடிமுத்தக் தாடியிளம் (வஞ்சி)
அடி-வாதுமொழி யோதுவது
சூது-இனி-மீது
என்னை-மருவுங்கிருபை புரிவாய்கிட்ட
வாடிமுத்தக் தாடியிளம் (வஞ்சி)

ஆடி-மாமவேள்கணை சேருதே-மயல்
மீறுதே-மனஞ்-சோருதே
என்னை-மருவுங்கிருபை புரியாய்விட்ட
வாடிமுத்தர் தாடியிளம் (வஞ்சி)

(மத-வ-ம்.) ஆஹா - வஞ்சி ! யான் கெஞ்சியுங் கெஞ்சமிரங்காமல் (செவுடன்காதிலே சங்கூதினதுபோல) தர்மசாஸ்திரத்தை யெடுத்துப் போதிக்கவருகின்றனையே? அவ்வார்த்தை என்செவியிலேறப்போகின்றதா, ஆஹா-பிரமாயுதத்துக்கும் மாரவேள்கணையைத் தடுப்பதற்கு யாவரால்முடியும், ஆஹா-மாதே! இனி முகாந்திரங்களைப் பாராது மனதை வருத்தாமல் மருவும்படியான கிருபைகூர்ந்து ரக்ஷிக்கவேண்டும் பெண்மணியே.

(சதாரம் சொல் தரு.)

விரசமான வார்த்தைவேண்டாம் விட்டுவிடடா
என்ற ப்ரராயபதத்தின் வர்ணமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ரூபகம்

பல்லவி.

மன்னா நான்சொன்ன வார்த்தைமீறி
வம்புசெய்கிறீர் (மன்னா)

அநுபல்லவி.

கன்னியர்கள் அன்னியர்மேற்
காதல்கொள்வரோ
தன்னிலைமை பின்னமாகச்
சகசம்செய்வரோ (மன்னா)
பதிவிரதை மதிகெடுமோ
பார்த்திபாசொல்லும்
அதிகமதாய்ச் சதுரவேண்டாம்
அப்பாலேசெல்லும் (மன்னா)
முத்தையனத் புத்திசொலவார்
முழுதுங்கேளுமே
இத்தினிய பத்தினியோ
டிருக்குமாறுமே. (மன்னா)

(சதா-வ-ம்) ஆஆ-மகராஜ்! யான்சொன்ன சமாதானவார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாமல் மறுத்து வீணான வம்புசெய்வது தர்மமன்று! அப்படிச் செய்யும் விஷயத்தில் (தன்தாரதாரபிறர்தாரபுத்ர)னென்னும் அரசாங்கத்திற்குரிய யோக்யதை கெட்டுக் கொடுங்கோலரசனென்னுங் காரணப்பெயரிருக்கக்கூடியதாயிருக்குமாதலின் தங்களுக்கு விரகவேதனை மீறியிருக்கும்விஷயத்தில் இப்பொழுதே கிரகத்திற்குச்சென்று சொந்தமனைவியைக்கூடிச்சுகானுபவங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள் மகாராஜ் இனிமேலென்னிடம் வீணானவார்த்தைகளைப் பாஷிக்கவேண்டாம்.

(மதனசுகாராஜன் சொல் தரு.)

தப்பிக்கொண்டோடலாமென்றெண்ணாதே
என்றதாராச்சந்த்ரசபாவின் வர்ணமெட்டு.
இ-ம்-மோகாரி-தாளம்-சாபு

கண்ணிகள்.

தட்டிப்பேசுவார்த்தைநீசொல் லாதே-யுந்தன்
சாஸ்திரங்க ளென்னிடஞ்செல்லாதே
ஆத்திரத்தைத்தீர்த்துவைப்பாய் மாதே-வேதோ
அட்டிசொன்னாற் காதினிற்கேளேனே
மீறுவையேலுன்றலையைத் துண்டாய்-வாளில்
வெட்டிடுவே னென்சமர்த்தைக்கண்டாய்

(மத-வ-ம்.) ஹேமாதே! யானுன்னிடத்தில் எனது பரிதாபங்களையெல்லாம் முறையிட்டும் (பாயவருமாட்டினிடம் வேதமோதுவதுபோல) காமகோபங்கொண்டவனிடத்திற் சாஸ்திரங்களையெடுத்துப் போதிக்கவருகின்றனையே அதுஎன்செவியிலேறப்போகின்றதா ஒருக்காலுமில்லை, ஆதலின் இப்போதாவது யாதொரு தடையுஞ் சொல்லாமல் எனது மனோபீஷ்டத்தை நிறைவேற்றிவைக்கவேண்டும். இல்லாவிடில் எனது கரத்திலிருக்கக்கூடிய கட்கத்தாலுனதுசிரத்தைக்கண்டனஞ் செய்துவிடுவேனிதபஹறதூர். ஜாக்ரதை.

(சதாரம் ஆலோசித்தல்.)

(சதா-வ-ம்.) ஆஆ-நாம் இவ்வரசனுக்கு அனேக நீதிகளை
யெடுத்துக்காட்டியும் ஏற்றுக்கொள்ளாமல் (தான்பிடித்தமுய
லுக்கு மூன்றேகால்) என்பதுபோல, தன்னு கொள்கையே பெ
ரிதாகப் பாவித்ததுமல்லாமல் இப்பொழுது நம்மைச் சிரச்சே
தஞ்செய்வதாகவும் பாவிக்கின்றான். இவனது கோபாவேசத்
தை யுத்தேசிக்கும் விஷயத்தில் அவ்விதமாகவே செய்வான்போ
ற்காணப்படுகின்றது. ஆகலின் நாமிப்போது இவன்வார்த்தைக்
கிணங்குபவள்போல பாவனைகாட்டி விரதமிருக்கவேண்டுமென்
று பொய்யான முகாந்திரங்களைக்கூறி நம்பச்செய்து அப்பால்
எவ்விதமாயாவது தப்பித்துச்செல்லும்படியானமார்க்கந்தேடிக்
கொள்வோம் இதுதான் நல்லயோசனை.

(சதாரம்சொல் தரு.)
சிவசுப்ரமண்யதேவேயென்கோவே
என்ற கீர்த்தனத்தின் வர்ணமெட்டு.
இ-ம்-சுருட்டி-தாளம்-சாபு

கண்ணிகள்.

கோபமென்மீது கொள்ளாதீர்சாமி
குணமதிந்திடவாது கூறினேன்காமி (கோப)
சொன்னதுபோலே தோன்றலோரமே
சுந்தரமாய்க்கூடிச் சுகங்கொடுப்பேனே (கோப)
விரதமுமொன்று வேண்டினேன்முன்னே
மேன்மையாய்நடத்திராம், மேவுவோமன்னே (கோப)

(சதா-வ-ம்.) ஆஆ-மகாராஜ! தாங்களென்மீது சினங்கொ
ள்ளவேண்டாம், பாருங்கள் தங்களுக்கென்மீது பரிபூரண கிரு
பையுளதா இல்லையாவென்பதைப் பரிக்ஷிக்கும்பொருட்டாகவே
யிதுவரை வாதாடினதேயன்றி வேறன்று. யான் தங்களிஷ்டப்
படி நடக்கச் சித்தமாயிருக்கின்றேன், ஆனால்எக்காலத்திலென
து மனோபீஷ்டத்திற்குத்தகுந்த நாயகன் கிடைக்கப்பெறுவே
னோ அதுமுதல்ஆறுமாதத்திற்குக் கௌரிசோம்பிரதமனுஷ்டிப்பதாகக்

கோரிக்கை செய்திருந்தேன், அதுபோலவே என்மனதிற்கிசை
ந்த அதிக சௌந்தர்யத்தையுடைத்தான தாங்களே எனக்குநா
யகனாகக் கிடைக்கப்பெற்றதானது எனது பூஜாபலமல்லவோ
ஆகலின் இதுமுதல் அவ்விரதத்தை யனுஷ்டித்துவந்து ஆறுமா
தமுந் தீர்ந்தபின்னுற் றங்களிஷ்டப்படி சையோகவின்பங்களை
யனுபவிக்கலாமகாராஜ். இனிமேற்றங்களைவிட்டுத் தப்பிச்செல
வேனென்று சொற்பனத்திலும் நினைக்கவேண்டாம்.

(மத-வ-ம்.) ஆஆ-மாதே! யான் ஆறுமாதம்வரை விரகதா
பத்தைச் சகித்துக்கொண்டிருக்க முடியுமாவென்ன.

(சதா-வ-ம்.) ஆஆ-மகாராஜ்! எவ்விதமாயாவது சகித்திருக்
குந்தான்வேண்டும். அதற்காக விரதபங்கஞ் செய்துகொள்ளலா
மா மகாராஜ்.

(மத-வ-ம்.) ஹே ப்ரியசகி! நீபாஷிப்பது வாஸ்தவந்தான்
இனியென்செய்கின்றது, நல்லது உனதிஷ்டப்படியே விரதானு
ஷ்டானஞ்செய்ய அனுமதி கொடுத்திருக்கின்றேன், ஆனாலுன
து விரதமுடியும்வரை உன்னைக் கன்னிகாமாடத்தில் வைத்துப்
பந்தோபஸ்துச் செய்துவிடுவேன் அதுஉனக்குச் சம்மதமாவெ
ன்ன.

(சதா-வ-ம்.) தங்களிஷ்டம்போற் செய்துகொள்ளுங்கள்
மகாராஜ்.

(மத-வ-ம்.) அடாசேவகா இவளையழைத்துப்போய் நமது
மந்திரியிடமொப்பிவித்து நாம்புதிதாக நிர்மித்திருக்கின்ற கன்னி
காமாடத்தில்வைத்துத் தகுந்த காவல்களமைத்து வெளியிற்
சென்றுவிடாதபடி பந்தோபஸ்துசெய்வதுடன் ஆறுமாதத்தி
ற்கு விரதமிருப்பதற்கு வேண்டிய சாமக்கிரிகைகளும் இன்னும்
வேண்டிய திரவியங்களுங் கொடுக்கும்படி திட்டஞ்செய்து வரு
வாயாக.

(சேவ-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் மகாராஜ். வாரும்
களம்மா செல்வோம்.

(சதா-வ-ம்.) இதோவருகின்றேன் சேவகா.

சிறைச்சாலையிலிருந்து மந்திரியால் விடுதலைபெற்ற சுவேதச்சந்திரன் சதாரத்தைக்காணப் புறப்படுதல்

(சுவே-வ-ம்.) நாமோ இவ்வூரரசனுடைய மதனமோகனராஜாவின் காராக்ருகத்திலடைபட்டுத் தெய்வாநுகூலமாயிப்போது மந்திரியினால் விடுதலைபெற்று வந்துவிட்டோம், நம்மைப்பிடித்தபிடையும் இன்றோடு தொலைந்துபோயிற்று. சுவ்லானபடியே ஆரண்யத்திற்குச் சென்று சதாரத்தை யழைத்துக்கொண்டு வேறு தேசத்திற்குச் சென்று, காலக்ஷேபத்திற்கு மார்க்கந் தேடுவோம்.

சதாரம் சிறைச்சாலையிலடைபட்டுப் புலம்புந்தரு.

மல்லிகைமுல்லை மலரையிறைத்ததைப்போலே.
என்று அரிச்சந்த்ரநாடகத்தருவின் வர்ணமெட்டு.
இ-ம்-எதுகுலகாம்போதி-தாளம்-சாபு
கண்ணிகள்.

இந்தவிதிக்குநான் என்னசெய்வேனையோ
தெய்வமே-இந்த
விந்தைவிளையுமென்று மெல்லிநானறியேனே
தெய்வமே
காலக்ஷேபஞ்செய்யக் கணவனுடன்வந்தேன்
தெய்வமே-இந்த
ஜாலம்நடக்குமென்று தையல்நானறியேனே
தெய்வமே
ஆவியும்பதறுதே அங்கமுஞ்சோருதே
தெய்வமே-கொடும்
பாவியிடத்திற்சிறைப் படும்படி விதித்தாயே
தெய்வமே
கன்னியசுகந்தரும் காதலனைக்கைவிட்டேன்
தெய்வமே-அவர்

என்னைவிட்டெங்கே யிருக்கிறாரோகாணேனே
தெய்வமே
இப்படிவருமென்று சொற்பனமறியேனே
தெய்வமே-இனி
யெப்படியிதைவிட்டுத் தப்பிநான்செல்லுவேன்
தெய்வமே

(சதா-வ-ம்.) ஆஆ-ஜெகதீசா! காலக்ஷேபஞ் செய்யும்பொருட்டுப் பார்த்தவுடன் வந்தவிடத்தில் பாவியாகிய அரசனிடத்திலகப்பட்டுக் காராக்ரக ப்ரவேசமாகும்படி செய்துவிட்டனையே ஆஆ-என் மனமானது பந்தத்துத் துடிக்கின்றதே, ஆஆ-என்னுநாயகன் என்னநிலைமையிலிருக்கின்றாரோ என்னை எவ்விடத்தித்தேடியலைகின்றாரோ தெரியவில்லையே, ஆஆ-இப்படி வருமென்று சொற்பனங்கூடக் காணவில்லையே, ஆஆ-இனிமேலிந்தக் காராக்ரகத்தை விட்டு எவ்விதமாகத் தப்பித்துச்சென்று கணவன் முகத்தைக் காணப்போகின்றேன், ஆஆ-ஏழைபங்காளா என்னைக்காத்து ரக்ஷிக்கலாகாதா.

சுவேதச்சந்திரன் ஆரண்யத்திற்குச்சென்று சதாரத்தைக்காணாமல் மனம்வருந்துந்தரு.

மோகங்கொண்டேனுனையே
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி

பல்லவி.

இதுவென்னமாயமையோ எவர்செய்தநாயமையோ

அநுபல்லவி.

மதிமுகமாதைக்காணோம் வகையொன்றுந்தோணோம்-இ

(சுவே-வ-ம்.) ஆஆ-இதுவென்னமாயமாயிருக்கின்றது, நம்மைப் பட்டுச்சவுக்கம் விற்பனை செய்துவரும்படி சொல்லிவிட்டு இந்தடாகத்தினருகாமையிலமர்ந்திருந்த சதாரம் இப்போது காணப்படவில்லையே, ஆஆ-இவ்வனத்திலெங்காவது வேடிக்

வைகயபுரவிக்கிரியச் சென்றிருப்பாளோ நல்லது இன்னுஞ்சில தூரஞ் சென்றுபார்ப்போம்.

இதுவுஞ்சுவேதச்சந்திரன் சதாரத்தைக்காணமற் புலம்புந்தரு.

களவுதனிற்கண்டமானை யெப்படிக்காணுவேன்
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இ-ம்-சுருட்டி-தாளம்-ஆதி
பல்லவி.
வனமுழுதுஞ் சுற்றினேனே மாதைக்காணேனே
அநுபல்லவி.
இனிமேலென்ன செய்வேனையோ
ஏழையுமானேனே (வன)
சரணம்
சென்றவிடம் யானறியேன்
தில்லைநேடகா
கன்றிழந்த மான்போல்மனம்
கலங்குதேபிசா (வன)

(சுவே-வ-ம்.) ஆ-ஆ-ஜெகதீசா! இவ்வனமுழுதுந் தேடிப் பார்க்கின்றேன் அந்தச்சதாரத்தை ஓரிடத்திலாவது காணப்பட வில்லையே, ஆ-ஆ - எவ்வழி சென்றுவிட்டாளோ தெரியவில்லை யே, ஆ-ஆ - பாவி! கன்றிழந்த மான்போல கதறியழச்செய்து விட்டுச் சென்றுவிட்டாளே இக்கொடுமைக்கென்செய்வேன்.

(இதுவுஞ் சுவேதச்சந்திரன் புலம்புந்தரு.)

மாதேநீயென்னொடுகூட வனத்துக்கேகலாமடி
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இ-ம்-இங்குஸ்தானி-காபி-ஏகதாளம்
பல்லவி.
ஐயையோ சதாரமென்னைக் கைநழுவவிட்டிட்டாயே
அநுபல்லவி.
தையலேயுன்னைப்பிரியத் தெய்வசங்கற்பமோ அறியேன்

சரணங்கள்.
சொந்தமாகவுன்னைநம்பித் தந்தைதாயைவிட்டகதி
இந்தவிதமாச்சுதடி எந்தனதுதலைவிதி (ஐயை)
அன்னைபிதாவீட்டதினில் அருமையுடன்வளர்ந்தேன்
உன்னுடையஆசையாலே ஊரிழந்தேனடிநாந்தேன் (ஐயை)
மாதரசேநானுன்னை வனமெல்லாந்தேடினேனே
ஏதுபிழைசெய்தேனடி என்னைவிட்டுப்போனாய்மானே (ஐயை)

(சுவே-வ-ம்.) ஆ-ஆ-சதாரம் யான் காணாத அன்யராஜ்யத் திற்கு வந்தவிடத்தில் யாதொரு திக்குமில்லாத அனாதையைப் போல கைநழுவவிட்டுவிட்டு எப்படியோ சென்றுவிட்டனையே, ஆ-ஆ-பாவி! உன்னைநிமித்தம் எனது நாடுநகரங்கள் முத லான ராஜரீகத்தையுனது தந்தைக்கொப்படைத்து அருமையா ய்வளர்த்த மாதாபிதாக்களையுமறந்து நீயேகதியென்றெண்ணிவ ந்தேனே, ஆ-ஆ-பாதகனுக்கு யாதொருகுற்றமுஞ் செய்யாதிரு க்க (நம்பினவனை நட்டாற்றில் விட்டதுபோல) என்னை இப்படி ச்சதிசெய்துவிட்டாயே, ஆ-ஆ-இதுவும் என்விதிவசந்தானோயா தோ தெரியவில்லையே, ஆ-ஆ-சண்டாளி! உன்னை இவ்வனமெல் லாந்தேடிப் பாதங்களெல்லாம் நோவெடுக்கின்றதே, ஆ-ஆ-மா தே! யானினிமேலுன்னை எப்போது காணப்போகின்றேன்,* ஆ-ஆ-ஈதிவ்வாரண்யத்தில் வீணாய்ப்புலம்பிக்கொண்டிருப்பதிற் பயனில்லை, சதாரம் ஒருவேளை நம்மைக்காணேனென்று போடிக் கொண்டு இம்மயபுரிக்குச் சென்றிருப்பாளோ யாதோ தெரியவி ல்லை. நல்லது அவ்விடமுஞ்சென்று தேடிப்பார்ப்போமிப்போது

(சதாரம் சிறையிலிருந்து மறுபடியும் புலம்புந்தரு.)

அரவாபரணனே அபிராமிநேயனே
என்ற இந்த்ரசபாவின் வர்ணமெட்டு.
இ-ம்-சங்கராபரணம்-தாளம்-சாபு
கண்ணிகள்.
ஐயையோஜெகதீசா தையலங்கேநைகநேசா
அடியாள்நானென்னசெய்வேன்.

சின்னஞ்சிறுவயதில் நல்லயசுகமின்றிச்
சிறைபடவிதிவசமோ
நித்தியமுநானிருந்த நிலவறையிலிருக்க
நேருமோஎன்பனது
இந்தப்புவிதனிலே யென்போலகொடும்பாவி
யெங்குநான்கண்டிலனே
கணவனுமெனைத்தேடிக் காணேனென்றெவ்விதங்
கலங்கித்தவிக்கிறாரோ
தப்பியோடுவோமென்றால் தடமொன்றுமறியேனே
சங்காரகங்காதரா
மங்கைதுபாகற்ற வந்துதவிசெய்குவாய்
மாதுமைநாயகனே

(சதா-வ-ம்.) ஆஆ-ஜெகதீசா! எனது விதிவசத்தையென் சொல்வேன், ஆஆ-சிறியவயதில் நல்ல சுகானுபவங்களை யனுபவிப்பதை விட்டுவிட்டுப் பாழுஞ்சிறையிலடைபட்டுப் பரதவிக்கும்படி செய்துவிட்டனையே, ஆஆ-இப்பூவுலகில் என்போன்ற பாபிஷ்டிகள் யாவிருக்கின்றார்கள். ஆஆ-அனுதினமும் இச்சிறைச்சாலையிலிருந்து எவ்விதமாகக் காலந்தள்ளுவேன், ஆஆ-எனது ஆசைநாயகன் என்னைக்காணேமென்று எவ்விடத்தில் வதிப்படுகின்றாரோ தெரியவில்லையே, ஆஆ-இச்சிறையைக்கடந்து வெளியிற் செல்வதற்கு யாதொரு மார்க்கமுங் காணப்படவில்லையே, ஆஆ-அடியாளுக்குநேர்ந்த கஷ்டத்தை நிவர்த்திசெய்து காத்துரக்ஷிக்கலாகாதா * ஆஆ-நாமெவ்விதம் புலம்பினும் நம்மையாவர் விடுவிக்கப்போகின்றார்கள், ஒருவருமில்லையாதலின் நாம் பட்டுச்சவுக்கம் நெய்ததில்மீந்து நமது வசமிருக்கின்ற நூல்களால் ஒரு நூலேணி செய்துவைப்போம். அரசன் விரதத்திற்காகக் கொடுத்திருக்கின்ற திரவியங்களுமிருக்கின்றது, ஏதாவது இதுவிஷயமாய்த் தப்பித்துச்செல்வதற்குத் தெய்வசகாயம் ஏற்படும்விஷயத்தில் அந்தச்சமயத்தில் வேண்டியமார்க்கந் தேடிக்கொள்வோம் இதுதான் நல்லயோசனை இப்போது நூலேணி செய்வோம்.

மயபுரிக்குச்சென்ற சுவேதச்சந்திரனானவன்
சிறைச்சாலைக்கருகில் நின்று சதாரத்தைத்தேடிப்
புலம்புகிறது.

உனக்கெதுவேணுஞ் சொல்நெஞ்சமே
என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.
இ-ம்-முகாரி-தாளம்-சாபு

பல்லவி.

ஐயோசதாரம் மானே சதாரம் தேனே சதாரம்
மயிலே சதாரம் குயிலே சதாரம் உனைத்தேடியே
இப்போதுமிகத் தயங்குதேமனம்வாடியே

அநுபல்லவி.

தையலேயுனக்காகச் சம்பத்துமுதலான
சகலமுந்தோற்றேனடி-நீயுந்
துப்பட்டினைவிலை செய்யென்றுபொய்மொழி
சொன்னதையேற்றேனடி (ஐயோ)
இப்படியெனைவிட்டுத் தப்புவாயென்றுநான்
எண்ணாமற்போனேனடி-உன்னைப்
பற்பலவிடமெல்லாம் பார்த்துங்காணாதாலே
பாதேசியானேனடி (ஐயோ)
உன்னைச்சதமென்றுநான் அன்னைபிதாவையங்கே
ஒண்டியாய்விட்டேனடி-இப்ப
என்னைத்தனிமையாய்விட் டேகினபடியாலே
யேழைநான்கெட்டேனடி (ஐயோ)

(சுவே-வ-ம்.) ஆஆ-சதாரம் உன்மீது யான்கொண்ட ஆசையினால் எனது ராஜ்யத்தையிழந்து அன்னைபிதாவைத் தனிமையாய்விடுத்து உன்னைச் சதமென்று வந்து நீ சொன்னபிரகாரம் பட்டுச்சவுக்கம் விற்கப்போயிருக்குந்தருணத்தில் கிஞ்சித்தேனும்நெஞ்சிரக்கமின்றி என்னைவிட்டேகிவிட்டனையே, ஆஆ-சதாரம் நீ இப்படி மோசஞ்செய்வாயென்று யானறிந்திருக்கும் பக்ஷ

த்தில் யானுன்னைவிட்டகன்றிருக்கமாட்டேனே, ஆஆ-சதாரம் யாருமற்ற அநாதையாகிவிட்டேனே, ஆஆ-சதாரம் யானுன்னை எவ்விடந்தேடிக் கண்டுபிடிக்கப்போகின்றேன், ஆஆ- சதாரம்-சதாரம்-சதாரம்.

சுவேதச்சந்திரன் வார்த்தையைக்கேட்டு
சதாரம் ஆலோசித்துச்சொல்லுந்தரு.
தஞ்சிராமாரேயிந்திரேகை-சேபதல்கயி
என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.
இராகம்-காபி-தாளம்-சாபு.

பல்லவி.

இன்னேரமிந்தச் சன்னலோரம் என்பேர்கேட்குதே

அநுபல்லவி.

மன்னேவல்லாது இன்னும்யாரோ
வந்துபார்க்கிறேன் (இன்)

(சதா-வ-ம்.) ஆஆ-என்னாச்சர்யம்! நாமேதோ காலவித்யாசத்தால் இச்சிறைச்சாலையிலடைபட்டுத் துன்பசாகரத்திலாழ்ந்திக்கொண்டிருப்பதை நிவர்த்திக்கும்பொருட்டு ஜாலேவளியின் வழிக்கொண்டிருக்குந்தருணத்தில் இச்சென்னலுக்கருகாண்மையில் யாரோ சதாரம் சதாரமென்று வற்புறுத்தியழைக்கின்றார்களே ஒருவேளை யின்னகரத்தரசனாகிய மதனமகாராஜனாயிருக்கக்கூடுமோ அல்லது வேறுமனுஷாளாயிருக்கக்கூடுமோ தெரியவில்லையே, நல்லது இச்சன்னல்வழியாய்ப்பார்ப்போமிப்போது ஆஆ-இவர் நமதுபர்த்தாவல்லவோ, ஆஆ-நம்மைத்தேடிப் புலம்பிக்கொண்டல்லவோ வருகின்றார்- நல்லது சம்பாஷிப்போமிப்போது * ஆஆ-ப்ராணநாத.

(சுவேதச்சந்திரன் சதாரத்துடன் சம்பாஷித்தல்.)

(சுவே-வ-ம்.) ஆஆ-நாம் சதாரத்தைக்காணோமென்றுஇம்மயபுரிமுழுதுந் தேடிப்புலம்பிக்கொண்டுவரும்போது இந்தராஜமாளிகைச் சன்னலின்வழியாக யாரோவோர் மங்கையானவள்

நின்றுகொண்டு நம்மைப்பார்த்து ஆஆ-ப்ராணநாத என்கின்றாளே ஒருவேளை சதாரமாகத்தானிருக்கக்கூடுமோ நல்லதுவிசாரிப்போம். ஆஆமாதே நீயார்.

(சதா-வ-ம்.) ஆஆ ப்ராணகர்த்தா யான்றங்களடியாளாகிய சதாரம் ப்ரபு.

(சுவேதச்சந்திரன் சொல் ஜாவளி.)
அல வானிகுல ரம்மனே
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி

வந்தவிதமென்னடி யிங்கு
வந்தவிதமென்னடி.

அநுபல்லவி.

எந்தனுக்குகந்தகண்ணாட்டி யிங்கு (வந்த)

சரணம்.

சிதவனமெல்லாஞ் சென்றுன்னைத்தேடினேன்
மாதரசேமனம் வாடினேன்-ஓ
மாதரசேமனம் வாடினேனிப்போது
எந்தனுக்குகந்தகண்ணாட்டி யிங்கு (வந்த)

(சுவே-வ-ம்.) ஆஆ-மானே! மலரிலுறைந்ததேனே நடனமயிலே ரஞ்சிதக்குயிலே பூவையர்போற்றும்பொன்னே பாவையர் துதிக்குமின்னே தேவருக்கு மெய்தாத சித்திரமே எனதாவலுக்குகந்த ரத்தினமே, ஆஆ-கண்ணாட்டி யானுன்னைக் காணாமல் என்மனம் புண்ணாகிக் காடு மலை வனம் வனாந்திரங்களெல்லாந்தேடிக் காலமுழுதும் கதறிக்கதறிக் கவித்தேனே, ஆஆ-நேசாஞ்சிதமே! யானுன்னைக் கானகத்தின் கண் விடுத்துவந்த பின்னர் நடந்த விர்த்தாந்தமும் இப்போதிம்மாளிகையில் வாசம்புரியுங் காரணமும் விபரமாகத்தெரிவிப்பாயாக.

(சதாரம் சொல்தரு)

அடியனமே யென்னைத்தனியாய்விட்டமான்கண்ணே
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இ-ம்-காபி-தாளம்-ஆதி

பல்லவி.

அரைமதனையிங்கேவந்தசேதி யென்சொல்வேன்

அநுபல்லவி.

என்சொல்வேன்நா   னென்சொல்வேன் (அரை)

(சதா-வ-ம்.) ஆஆ-ப்ராணவல்லபா! யானிங்குவந்த விர்த்தாந்தத்தை என்சொல்லப்போகின்றேன், பாருங்கள் தாங்கள் பட்டுவிற்பனைசெய்யச் சென்றபின்னர் ஒருமங்கை ஆரண்யத்திற்குவந்து என்னைக்கண்டு தாங்கள் யானையால் மிதிபட்டிறந்துபோனதாகப் பாஷித்துப் பட்டுச்சவுக்கத்தை அடையாளங் காட்டினள். யான் வாஸ்தவமென்று நம்பித் தங்களைப்பார்க்க அவள்கூடச் சென்றேன். அந்தப்பாவியானவள் என்னை யிவ்வூரரசன் சமுகத்திற்கொண்டுபோய் விட்டுவிட்டுச் சென்றுவிட்டனள். அவ்வரசன் என்னைக்கலவிபுரிய முயற்சித்தான். யான் ஆறுமாதம் விரதமிருக்க விடைகேட்டேன் அவனவ்விதமேயுத்திரவுகொடுத்து யாரோடிப்போகாவண்ணம் இச்சிறைச்சாலையி லடைத்திருக்கின்றான் வேறு விசேஷமில்லை ப்ராணநாத.

(சுவே-வ-ம்.) அப்படியா! அந்தப்பாவி யென்னையும் அப்படித்தான் செய்தான் நல்லது இப்போது தப்பிக்குமார்க்கமென்னமாதே.

(சதா-வ-ம்.) ஆஆ-ப்ராணகாந்தா! இதோ இந்த முடிப்பில் இரண்டாயிரம்பொன்னிருக்கின்றது அதையெடுத்துக்கொண்டுபோய் இரண்டு குதிரைகளும் ஒரேவிதமாய் இரண்டுஜோடி ஆண் உடுப்புகளும் வாங்கிக்கொண்டு வாருங்கள். யானிதோ நூலேணி கட்டிவைத்திருக்கின்றேன் அர்த்தராத்திரிவேளையில் நூலேணிவழியாயிறங்கி வருகின்றேன் நாமிருவரும் உடுப்புகள்

தரித்துக்கொண்டு குதிரையேறி வேகமாய்ச் சென்றுவிடலாம் ப்ரபு சீக்கிரமுடிப்பையெடுத்துச் செல்லுங்கள்.

(சுவே-வ-ம்.) நல்லது ப்ராணசகி அப்படியே வாங்கிக்கொண்டு நிமிஷத்தில் வருகின்றேன்.

(கள்ளன் வந்து சொல்லுந்தரு.)

தந்தானமடிதந்தானமடி-தந்தானக்குயிலே
என்ற சில்லரைப்பாட்டின் வர்ணமெட்டு.

இராகம்-புன்னுகவராளி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வந்தேனையிதோ வந்தேனையிதோ வந்தேனே திருடன்
வந்தேனையிதோ வந்தேனையிதோ வந்தேனே திருடன்

கூத்திருடன் ராத்திரியிற்   கன்னம்போடுவான்
பார்த்திருந்து கன்னம்வைக்கும்   பக்காத்திருடனான் (வந்)

அரைத்திருடன் இருட்டினிலே   அசந்ததுபார்ப்பான்
பருத்ததொகைக் கன்னம்வைக்கும் பக்காத்திருடனான் (வந்)

முக்காற்றிருடன்ராக்காலத்தினில் மூட்டைத்தூக்குவான்
பக்காத்திருடன் தொக்காயடிப்பேன் சர்க்காரியலே (வந்)

என்பேர்சொன்னாலேமன்கூட   ஏகிவிடுவானே
முனைபோற்றிருட என்னாலிப்போது முடியவில்லையே (வந்)

(கள்ளன்சொல் வசனம்.) பூலோகத்திற் கூத்திருடனென்று பேரெடுத்தவன் ராத்திரிகாலத்தில்மட்டுங் கன்னம் போடுவான் அரைத்திருடனென்று பேரெடுத்தவன் அர்த்தராத்திரிவேளையயர்ந்து நித்திரை செய்யும் வீட்டுவாசலிற் கிடக்கும் பண்டபாத்திரங்களைத் திருடுவான், முக்காற்றிருடனென்று பேரெடுத்தவன் நடுச்சாமத்தில் மூட்டை முடிப்பு வைத்திருந்தாற் றூக்கி வருவான். யானவர்களைப்போலல்ல என்பேர் பக்காத்திருடன் பட்டப்பகலிலேயே பார்த்திருக்கக் கன்னம்வைத்து உள்ளதையெல்லாங் கவர்ந்துகொண்டு வருவேன். என்பேரைக்கேட்டால் எமனுங்கூடப் பயமுற்று ஒருபக்க மொதுங்குவனென்பது

சர்க்காருக்குத்தெரியும் ஆனால் முன்போல கன்னம்போட இப்போதென்றால் முடியாது. இப்போது பொழுது போய்விட்டது. வயறு பசிக்கின்றது வீட்டிற்கஞ்சியிருக்கின்றதோ இல்லையோ தெரியவில்லை. நல்லது என்மனைவியைவிசாரிக்கின்றேன் * அடி கண்ணாட்டி.

(கள்ளிசொல் வசனம்.) அடே சாமி எனைழைக்கின்றாய்.

(கள்ளனுக்குங் கள்ளிக்குந்தர்க்கம்.)

பஞ்சவெட்டிப்பருத்திவெட்டி ஆமடாசாமி பாங்குடனே
ஆமடாசாமி பாங்குடனே நால்நாற்றுதன்னலே
என்ற சில்லைப்பாட்டின் வர்ணமெட்டு.
இ-ம்-எதுக்குலகாம்போதி-ஏகதாளம்
கண்ணிகள்.

(க-ன்) கண்ணிருண்டுவருகுதடி அடிபெண்ணேயென்கண்ணாட்டி
அடிபெண்ணேயென்கண்ணாட்டி கஞ்சிகொஞ்சமில்லையோடி
தில்லாத்தான்.

(க-ளி) கஞ்சிக்குவகையைக்காணேம் அடேசாமியென்புருஷா
அடேசாமியென்புருஷா கையிலொருகாசுமில்லை
தில்லாத்தான்.

(க-ன்) காசில்லாச்சந்தையது அடிபெண்ணேயென்கண்ணாட்டி
அடிபெண்ணேயென்கண்ணாட்டி கசுமாலச்சந்தையடி
தில்லாத்தான்

(க-ளி) சந்தையிலிற்கொண்டுவந்த அடேசாமியென்புருஷா
அடேசாமியென்புருஷா தானியங்கள்தீர்ந்துபோச்சு
தில்லாத்தான் [ண்ணாட்டி

(க-ன்) தீர்ந்துவிட்டதென்றுசொன்னாய் அடிபெண்ணே யென்க
அடிபெண்ணேயென்கண்ணாட்டி சிலுவாட்டுப்பணமில்லையோ
தில்லாத்தான்

(க-ளி) பணமிருந்தாலிதுவரையும் அடேசாமியென்புருஷா
அடேசாமியென்புருஷா பார்த்துக்கொண்டிருப்பதுண்டோ
தில்லாத்தான் [ணாட்டி

(க-ன்) இருக்காட்டால் மயிர்போச்சு அடிபெண்ணே யென்கண்
அடிபெண்ணேயென்கண்ணாட்டி இப்பக்கடன்வாங்கிவாடி
தில்லாத்தான்

(க-ளி) கடனமக்கார்கொடுப்பார் அடேசாமியென்புருஷா
அடேசாமியென்புருஷா கள்ளரென்றும்பயப்படுவார்
தில்லாத்தான் [ட்டி

(க-ன்) பயப்படுவாரென்றுசொன்னாய் அடிபெண்ணேஎன்கண்ணா
அடிபெண்ணேஎன்கண்ணாட்டி பக்குவம்நாமென்னசெய்வோ
தில்லாத்தான் [ம்

(க-ளி) செய்யுமவகையைச்சொல்லுவேன் அடேசாமிஎன்புருஷா
அடேசாமியென்புருஷா திருடவேபோய்வருவாய்
தில்லாத்தான் [ட்டி

(க-ன்) திருடவேபோகச்சொன்னாய் அடிபெண்ணே என்கண்ணா
அடிபெண்ணேஎன்கண்ணாட்டி சிக்கிக்கொண்டா லென்னசெ
தில்லாத்தான் [ய்வேன்

(க-ளி) சிக்கிக்கொண்டாயேயானால் அடேசாமியென்புருஷா
அடேசாமியென்புருஷா ஜெயிலிலிருந்துவாடா
தில்லாத்தான்

(க-ன்) ஜெயிலிருப்பேனுனல் அடிபெண்ணே என்கண்ணூட்டி
அடிபெண்ணேயென்கண்ணூட்டி சீரழிந்துபோய்விடுவாய்
இல்லாத்தான்

(க-ளி) சீரழியமாட்டேனடா அடேசாமியென்புருஷா
அடேசாமியென்புருஷா செல்வமுடனிருப்பேன்
இல்லாத்தான்

(க-ன்) செல்வமுடனேயிருக்கும் அடிபெண்ணே என்கண்ணூட்டி
அடிபெண்ணேயென்கண்ணூட்டி செப்கைதனைச்சொல்வாயடி
இல்லாத்தான்

(க-ளி) சொல்லுதென்னபயல்களிடம் அடேசாமியென்புருஷா
அடேசாமியென்புருஷா குட்டுகளைநான்பறிப்பேன்
இல்லாத்தான்

(க-ன்) குட்டுப்பறிப்பதென்றால் அடிபெண்ணேஎன்கண்ணூட்டி
அடிபெண்ணேஎன்கண்ணூட்டி செருக்குப்பொடி தேவையுண்
இல்லாத்தான் [டோ

(க-ளி) தேவையொன்றுமில்லையடா அடேசாமியென்புருஷா
அடேசாமியென்புருஷா சிறுபயலாய்மேய்ப்பேனடா
இல்லாத்தான்

(க-ன்) சிறுபயலேமேய்ப்பாயானல் அடிசிறுக்கிகண்டாரோழி
அடிசிறுக்கிகண்டாரோழி செருப்பாலடித்திடுவேன்
இல்லாத்தான்

(க-ளி) செருப்பாலடிப்பாயானல் அடேபயலேசீரழிவான்
அடேபயலேசீரழிவான் நீத்திடுவேன்விளக்குமாற்றால்
இல்லாத்தான்

(கள்ளன் வ-ம்) எங்கடிசிறுக்கிவிளக்குமாற்றாலடிபார்ப்போம்

(கள்ளி வ-ம்) எங்கடாபயலே செருப்பாலடிபார்ப்போம்

(கள்ளன் வ-ம்) இதோ அடிக்கின்றேன் பாரடி

(கள்ளி வ-ம்) இதோசாத்துகின்றேன்பாரடா

(கள்ளன் வ-ம்) அப்பப்பா தோளியகள் கொஞ்சங் கூட அஞ்சிக்
கையில்லாமல் எதிர்த்து விளக்குமாற்றி லடித்துவிட்டாளே இத

ற்கென் செய்கின்றது இவள் உத்திரவுப்படி திருடப்போகா விட்
டாற் கொஞ்ச மேனும் கஞ்சி யூற்றமாட்டாள் அன்றியும் இவள
நிற்கின்ற நிலைமையைப்பார்த்தால் இன்னும் அடிப்பாள்போலிரு
க்கின்றது நல்லது காமதேவதைகளை வருந்தி வேண்டிக்கொண்டு
திருடச்செல்வோ மிப்போது.

(கள்ளன் தேவதைகளை வருந்துதல்.)

கொண்டிச்சிந்து.

திருடவே போய்வாரேன் என்றாண்டவனே திருடவேபோ
ய்வாரேன்-வன-தேவதைகளோசகாயஞ் செய்யவேணும் மயிலாடு
ம்பாறைக்கருப்பா-உனக்கு-மதுபானக் கோழிமுட்டை வைத்து
ப்படைப்பேன் பனையடிவாழுங் கருப்பா-உனக்குப்-பன்னயங்கள்
வைத்துமிகப் படைத்திடுவேன் பச்சையாற்றில் வாழுங் கருப்பா
உனக்குப்-பண்புடனேயாடு வெட்டிப் பலியிடுவேன் அம்மாபட்
டிக்கருப்பா-உனக்கு-அன்புடனே ரத்தச்சாதம் அளித்திடுவேன்
வைரவா நீதுணையே-உனக்கு-வடைதோசை பானக்கமும் வைத்
துப்படைப்பேன் பட்டத்து விநாயகனே-உனக்குப் பழந்தேங்கா
யுடைத்துநான் பூஜைசெய்வேன் கோசலை விநாயகனே-உனக்குக்
கொழுக்கட்டைவடை தோசை கொடுத்திடுவேன் பாதரை விநா
யகனே-உனக்குப்-பச்சிளநீர்கண்திறந்து படைத்திடுவேன் அரச
ஞ்சிப் பிள்ளையாரே-உனக்கு-அவல் பொரி கடலைகள் அள்ளிப்ப
டைப்பேன் மாட்டாந்தம்பிரான்சாமி-உனக்கு-வாழைப்பழந்தே
ங்காயும் வைத்துப்படைப்பேன் பழனி யாண்டவனே-உனக்குப்
பஞ்சாமிர்த அபிஷேகம் பண்ணி வைப்பேன் இடும்பா நீதுணை
யே-உனக்கு-இளநீரபிஷேகம் இன்பமாய்ச்செய்வேன் பதினெட்
டாம் படியானே-உனக்குப்-பத்துக்குப்பிசாராயம் படைத்திடுவே
ன் சன்னாசி நீதுணையே-உனக்குச் சந்தனம் விபூதிகொண்டு சாத்
திடுவேன் ஐயனர் நீதுணையே-உனக்கு-ஆட்டுக்கிடாய வெட்டிப்
பொங்கல் அன்புடன்செய்வேன் பெரியாண்டையாரே-உனக்குப்-
பிரியமாயபிஷேகஞ் செய்வேனே கன்னடியப் பெருமானே-உனக்
குக்-கன்னியமாயபிஷேகஞ்செய் துவைப்பேன் ஆயிரங்கண்மாரி
த்தாயே-என்னம்மணி-ஆயிரங் கண் மாரித்தாயே-உனக்கு-ஆட்
டுக்கிடாய் வெட்டிநானும் பொங்க லிடுவேன் உச்சினிமா காளித்
தாயே உனக்கு-உச்சிதமாய்க்கோழிவெட் டிப் பொங்க லிடுவேன்

பத்திர.காளித்தாயே-உனக்குப்-பச்சைமருசவசாத்துப்படி பண்ணிவைப்பேன் தாடகை நச்சியம்மா-உனக்குத்-தங்கத்தாலே சரப்பளி சாத்திடுவேன் மருதகாளியம்மையே-உனக்கு-வச்சிரப் பதக்கமது பூட்டிடுவேன் முத்தாலம்மைத் தாயே-உனக்கு-முத்திருலேசரப்பளிபோட்டிடுவேன்செல்லாண்டியம்மையே துர்க்கை உனக்குச்-சித்திரவர்ணப்பட்டுச்சேலை-சாத்திடுவேன் அங்காளம்மைத் தாயே-உனக்கு-அஞ்சுவர்ணப்பட்டுச்சேலை யணிந்திடுவேன் பெரியநாயகியே-உனக்குப்-பீதாம்பரப்பட்டுச்சேலை போர்த்திடுவேன் திருட்டுக்கிடைத்ததானால்-இப்ப-செப்புமொழிதப்பிடாமற் செய்வேனே எல்லோருந்துணை யிருங்கள்-நானும்-இப்பொழுதே திருடியே வருவதற்கு காட்டிக் கொடுத்திடாதீர்-இதோ-நானே யெடுத்துப்பணிகிறேன் தெய்வங்களே (தெண்டஞ்சமர்க்கிறது)

(கள்ளன்-வ-ம்) அடிகண்ணாட்டி நான்உன் மனம்போல திருடச் செல்கின்றேன் கோபத்தை விடுத்து விடைகொடடி ப்ராண்சகி.

(கள்ளி-வ-ம்) அப்படியே சென்றுவா என் கண்ணாளா

சுலேதச்சந்திரன் குதிரைகளும் உடுப்புகளும்வாங்கிக்

கொண்டு சிறைச்சாலையருகில்வந்து சதாரத்தைக்

காணுமற்சொல் தரு.

மாதிவளமுகை யானெடுத்துரைக்க மன்னாஎன்னாலாகாதாகா

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

பல்லவி.

இதுதிமிலையான் இயம்பியபடியே
குதிரையுமுடுப்புங் கொண்டுவந்தோமே (இ)

சரணம்.

இவ்விடமாது எதிர்ப்படாதாலே
செவ்வையாய்நித்திரை செய்குவாள்மேலே (இ)

(சுலே-வ-ம,) ஆ ஆ நாம சதாரத்தின் சொற்படி கடைவீதிக்குச்சென்று வேகமுள்ள குதிரைகளும் சேர்த்தியான உடுப்புகளும் வாங்கிவைத்திருந்து அந்தச் சதாரத்தையழைத்துச் செ

ல்வதற்குத்தகுந்த ஜனநடமாட்டமில்லாத இவ்வர்த்த ராத்திரிவேளையில் இம்மாளிகைக்குவந்தோம் இப்போது நம்முகண்ணாட்டியைக் காணப்படவில்லை ஒருவேளை நித்திரைசெய்துகொண் டிருப்பாள்போலிருக்கின்றது நல்லது இப்போதிந்தக் கம்பத்திற் குதிரைகளைக் கட்டிவிட்டு உடுப்புகளை மூட்டைகட்டித் தலையணையாகவைத்து இவ்விடத்தில் நித்திரைசெய்துகொண் டிருக்கும் பக்ஷத்தில் நமதுபத்தினி விழித்தெழுந்தவுடன் றாலேனிவழியாயிறங்கிவந்து நம்மைத் துயில்விட் டெழுப்புவாள் அப்போது இருவருங் குதிரையேறிச் சென்றுவிடலாம் இதுதான் நல்லயோசனை யானதால் அந்தப்படியேசெய்வோ மிப்போது.

கள்ளன் மயபுரிக்குவந்து சதாரம் அடைபட்டிருக்கின்ற

சிறைச்சாலையிற் கன்னம்போட உத்தேசித்துச்சொல் - தரு

எங்கிருந்தோ யிங்குவந்ததெப்படி நாமே

என்ற இந்திரசபாவின் வர்ணமெட்டு

இராகம்-காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

திருடுதற்கு விரைவாயிவ்வூர் தேடிவந்தோமே
பொருளிருக்குந் திருமனைக்குப் போவோமின்றுமே
இங்குமொரு தங்கமனை யெதிரிற்காணுதே
அங்குநின்றால் தங்கமுண்டென் றறிவிற்றோணுதே
கன்னம்வைத்துப் பொன்னனைத்துங் களவுசெய்யலாம்
மன்னனைப்போல் இந்நிலத்தில் வாழ்ந்தேயுய்யலாம்
ஆகையினால் வேகமாக அவ்விடஞ்செல்வோம்
சோகமின்றிப் பாகமாகச் சுவரினைக்கெல்லுவோம்

(கள்ளன்-வ-ம.) ஆ ஆ நாமோர் திருடும்பொருட்டாகக் கமலாபுரியைவிட்டு அனேகதூரங்கடந்து இம்மயபுரிக்கு வந்துவிட்டோம் இதோ எதிரிற்றோன்றுகின்ற மாளிகையானது அரசனுடைய மாளிகைபோல காணப்படுவதால் அவ்விட்டிற் கன்னம் போடும்பக்ஷத்தில் அனேகதிரவியங்களகப்படும் அதைக்கொண்டு நாமெப்போதும் மகாராஜனைப்போல் வாழ்ந்து சுகிப்பதற்கு ஏதுவாயிருக்கும் ஆகையால் இப்போது நமதுதொழிலுக்குத் த

குக அர்த்தராத்திரிவேளையாயிருப்பதால் அவ்விடத்திற்குச்செ ன்று கன்னமிட்டுக் கலர்ந்துவருவோ மிப்போது.

சுவேதச்சந்திரன் படுத்திருப்பதையும் தலைமுட்டையையும்

குதிரைகள்கட்டியிருப்பதையுங் கள்ளன்கண்டுசொல்-தரு

வாடிநிற்ப தேதுகாரணமோ

என்ற டீராமாத்தருவின் வர்ணமெட்டு

இராகம்-கமாஸ்-ஜம்பைதாளம்

பல்லவி.

யாரோநித்திரை செய்கிறானதியேன் இந்த
அர்த்தராத்திரிவேளைதனில் மெத்தவுமிந்தவிடம்
யாரோநித்திரை செய்கிறானதியேன்.

அநுபல்லவி.

நேராய்க்குதிரைதனை சேர்ந்திருக்கக்கண்டேன்
கண்டேன் கண்டேன் கண்டேன் அதால்
ஹராஜமன்னவன் வகைபோல் உண்மையாய்மனங்கொண்டேன் ()

தலையணையைப்போலே விலையுயர்ந்தமுட்டை
முட்டை முட்டை முட்டை ஒன்று
மல்லேபோலிருப்பதாலே வாயத்தகேகலவேட்டை(யாரோ)

(கள்ளன்-வ-ம்.) ஆ ஆ நாமகன்னமிடலாமென்று எண்ணி வந்த வீட்டினருகில் யாரோ ஒருவன் நித்திரைசெய்கின்றான். இ வவிடத்தில் விலையுயர்ந்த இரண்டு குதிரைகள் கட்டப்பட் டிரு க்கின்றமையால் இங்குதுயில்கின்றவன் ராஜவம்சத்தைச் சார்ந்த வனாகத்தா னிருக்கக்கூடும் இவன்சிரசுக் கடியில்வைத்திருக்கின் ற முட்டையில் ஏதாவது திரவியங்க ளிருக்குமோ விருக்கின்ற து. ஆகையால்நாம் இவனருகில் மெதுவாகப் படுத்துக்கொண்டு இவனுடைய நித்திரைக்குப் பங்கம்வராமல் முட்டையைக் கொஞ் சங்கொஞ்சமாக இழுத்து மெல்லக்கவர்ந்துகொண்டு அப்பால் வீட்டிற் கன்னம்போடுவோம்.

(பாராக்காரர்கள்வசனம்) () சௌக்குப்பாரா உஷார்

() இந்தமாதிரி பாராக்காரர்கள் அடிக்கடி உஷார்ப்படுத்த வேண்டும்.

(கள்ளன்-வ-ம்.) ஆ ஆ நாம்முட்டையைக் கவரப்போகுந் தருணத்திற் பாராக்காரர்கள் அடிக்கடி உஷார்ப் பண்ணுகின்று ர்கள் அந்தச் சப்தங்கேட்கும்போதெல்லாம் இவன் விழித்துக் கொள்வானோ யாதோவென்று பயங்கரமாயிருக்கின்றது. நல்லது இப்போதாவது மெல்லமுட்டையை யெடுப்போம். ஆ ஆ முட் டையை யெடுத்துக்கொண்டோம் இதிலென்ன இருக்கின்றதெ ன்று அவிழ்த்துப் பார்ப்போம். ஆ ஆ இம்முட்டையை யவிழ் த்துப் பார்த்ததில் இரண்டுஜோடி யுடுப்புகள்மட்டு மிருக்கின்ற தேயன்றிப் பொருளொன்றுங் காணப்படவில்லை. இருந்தாலுமி ருக்கட்டும் இந்தமாளிகையிற் கன்னம்போடுவோ மிப்போது.

நித்திரைசெய்த சதாரம் துயில்விட்டெழுந்துசொல்-தரு.

நித்துவதமாரி னைனேகடா

என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு

இராகம்-கமாஸ்-இந்துஸ்தானி-ஆதிதாளம்.

பல்லவி.

நித்திரைசெய்தேனே நேரமதாய் அஹா அஹா
நித்திரைசெய்தேனே நேரமதாய்.

அநுபல்லவி.

பர்த்தாவந்தாரோ ஏதோ பார்க்கிறேன் அஹா அஹா(நித்)

(சதா-வ-ம்.) ஆ ஆ நான் சற்றுசயனித்திருக்கலாமென் றெ ண்ணி யிவ்விடம் படுத்திருந்ததில் நித்திரைமயக்கமீறி அதிகநே ரமாய்த் தூங்கிவிட்டேனே ஆ ஆ குதிரைகளும் உடுப்புகளும் வாங்கச்சென்ற பர்த்தாவானவர் வந்துவிட்டாரோயாதோ தெரி யவில்லையே. நல்லது இந்த ஜன்னல்வழியாகப் பார்க்கின்றேன்.

கள்ளன் சதாரத்தைக்கண்டு சொல்-சிந்து.

வெண்ணிலவெளிச்சத்திலே விடியற்காலநேரத்திலே
புளியம்பூராவிக்கைக்குள்ளோ பூரான்வந்துபூந்தபடி
இல்லாத்தானடாங்கு ராஜா இல்லாத்தானடாங்கு

என்ற கீர்த்தனின் வர்ணமெட்டு

இராகம்-முகாரி. தாளம்-சாபு.

கண்ணிகள்.

கன்னமிவைக்கவந்தவொரு கட்டிடத்தின்மெத்தையிலே
ஜன்னல்வழியாகவொரு மின்னொளிவுதோனுதையோ (இல்

பச்சைமரக்கனிவாழ் பஞ்சவர்ணக்கிளிதானோ
இச்சைபெறக்கூவிநல்ல இன்பந்தருமரக்குயிலோ (இல்)

மாடப்புருவிதுவோ மாகதமாமயிலோ
ஆடிநடைபயிலும் அன்னமிதோ நானறியேன் (இல்)

சந்திரபிம்பமிதோ தங்கப்பதுமைதானோ
விந்தையதாய்த்தோணுது சுந்தரிபோற்காணுதையோ ()

கண்டாற்கலியகலும் காரிகையின்வாயமிர்தம்
உண்டாலவர்களுக்கு உடனேசுகங்கிட்டுமையோ (இல்)

பார்த்தவுடனேயவர்க்கும் பாபமெல்லாம்போய்விடுமே
சேர்த்தணைந்தாலென்னுடைய ஜென்மமீடேறத்தடையோ

என்னைமயக்கிவிட்டா ளிருதயத்தைக்கொள்ளைகொண்டாள்
கன்னிகையைவிட்டுவிட்டுக் களவுசெய்யவுமுண்டோ (இல்)

மானேமாகதமே வடிவிட்டதெள்ளமுதே
தேனேயெனக்கிசைந்த தேவியேநீவாராயோடி (இல்)

மயிலேகுயிலினமே மாளிகையைவிட்டுவிட்டு
ஒயிலாகவந்தன்முன்னே போடிவந்துசேராயோடி (இல்)

பெண்ணேபிடியிடையே பேசமனமில்லையோடி
கண்ணேயெனக்குமிக்க காமன்கணைதைக்குதடி (இல்)

ஆவி தவுதடி யங்கமதுசோருதடி
பாவியெனைத்திரும்பிப் பார்த்தாலுனக்கினமுண்டோ (இல்)

என்னென்னசொல்லியுமே யேந்திழையாள்பார்க்கவில்லை
அன்னநடையாளெனக்கு ஆசைகாட்டிமோசஞ்செய்தாள்.

(கள்ளன்-வ-ம்.) ஆ ஆ நான் கன்னம்போடலாமென்றுவந்த இந்தமாளிகை மெத்தைஜன்னல்வழியாக ஓர் பிரகாசந்தோன்

றப்பட்டது. அதை யாராய்ந்துசெய்ததில் ஓர் சுந்தரமங்கையாகக் காணப்பட்டாள் யானவள்மீது விசைகொண்டு பற்பலவிதமாகப் பதறிக்கதறியும் (யாருக்குவந்ததோ வடுவுமாங்காய்) என்பதுபோல கொஞ்சமேனும் லக்ஷயமின்றி மௌனமாயிருக்கின்றாள் (கண்ஜாடைக்குவராதவள கையைப்பிடித்திழுத்தால் வருவாளா என்பதுபோல இவ்வளவுசொல்லியுந் திரும்பிப்பாராதவள் இனிமேல் வரப்போகின்றாளா ஒருக்காலுமில்லை இவளைவிட்டுச் செல்வதற்குக் கொஞ்சங்கூட மனமில்லை. ஏதோகன்னமிட்டுப்பொருளையாவது கவர்ந்துபோகலாமென்றால் இவள் விழித்துக்கொண்டிருக்கின்றாளே யென்செய்கின்றது. நல்லது இந்தக்குதிரையாவது இவளுக்குத்தெரியாமல் மெல்ல அவிழ்த்துக்கொண்டுபோய் விற்பனைசெய்து காலக்ஷேபஞ் செய்துகொள்கின்றேன்.

சதாரம் குதிரையையவிழ்க்குங் கள்ளனைக்கண்டு
தன்புருஷனென்று மதித்துச்சொல் - தரு
வந்தனமையா எனையா வந்தனமையா
என்ற பிரமாத்தருவின் வர்ணமெட்டு
இராகம்-பியாகடை-தாளம்-ரூபம்.

பல்லவி.

வந்துவிட்டாரே கணவனும் வந்துவிட்டாரே

அநுபல்லவி.

சுந்தரமிகும் கந்துகங்கொண்டு
இந்தஇருளில் குந்தகோத்தில்(வந்து)

(சதா-வ-ம்.) ஆ ஆ நாம் கணவன்வரவுக் கெதிர்பார்த்துக் கொண்டிருக்குந் தருணத்தில் அடியிற்கேட்ட சப்தங்களைப் பாராக்காரர்களுடைய சப்தமெனமதித்துப் பேசாதிருந்துவிட்டோம இப்போது நன்றாய்ப் பார்க்கும்பொழுது நமது பர்த்தாவானவர் குதிரைகள்மட்டும் வாங்கிக்கொண்டுவந்து இதோ சப்தமிடாமல் நமதுவரவுக் கெதிர்பார்த்துக்கொண்டு நிற்கின்றார். உடைப்புகள் வாங்கிக்கொண்டுவந்தாரோ யாதோ தெரியவில்லை நாமிப்போது சப்தமிட்டுக் கேட்கும்பக்ஷத்தில் பாராக்காரர்கள் கண்டுகொள்வார்கள், ஆகையால் இன்னாலேணி வழியாய்க் கீழிறக்

கிச்சென்று பர்த்தாவிட்டத்தில் ரகஸ்யமாக விசாரிப்போமிப்போது.



சதாரம் நூலேணிவழியா யிறங்கிவருவதைக்கண்டகள்ளன் சந்தோஷித்துச்சொல்-தரு.

கம-பப்பப் - பமகமா-கமபரிகமகா-கமபபபம-ரிகமபமக-ரிசனிசா னிதய என்றபட் சாமாகோட்டின் வர்ணமெட்டு

இராகம்-பெயாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

இதோ-எந்திழையுகம்மேற் பரந்தமாகவேநூல் ஏணியதனை யூன்றிமெதுவா யிறங்கிவருகிறாள்

அநுபல்லவி.

இனிச் சாந்தமுடனழைத் தேகிடுவோம்
இனிச் சாந்தமுடனழைத் தேகிடுவோம்-இதோ (எந்)

(கள்ளன்-வ-ம்.) ஆ ஆ நாம் சிங்காரமாகப் பாடிக்கொண்டிருந்த பாட்டின் மதுரத்தைக்கேட்ட இந்த மங்கையானவள் நம்மீது மையல்கொண்டு நூலேணிவழியா யிறங்கிவருகின்றாளாதலின் இவளைக் கூட்டிக்கொண்டு குதிரையேறிச் சென்றுவிடுவோமிப்போது.

சதாரம் கள்ளனைத் தன்கணவனாகமதித்துச் சம்பாஷித்தல்.

(சதா-வ-ம்.) ஆ ஆ ப்ராணநாத் குதிரைகள்தான் கொண்டுவந்திருக்கின்றீர்கள். உடுப்புகள் கொண்டுவந்தீர்களாவென்ன

(கள்ளன் - வ-ம்.) இதோ கொண்டுவந்திருக்கின்றேன் பெண்ணே.

(சதா-வ-ம்.) ஆறுமெனக்கொரு ஜோடிகொடுத்துவிட்டுத் தாங்களொரு ஜோடிதரித்துக் கொள்ளுங்கள் ப்ரபு.

(கள்ளன்-வ-ம.) அப்படியே தரித்துக்கொள்கின்றேன் இதைநீ தரித்துக்கொள் மாதே.

(சதா-வ-ம்.) யானுந் தரித்துக்கொண்டேன் யானிந்தக்குதிரையி லேறிக்கொள்கின்றேன் தாங்களந்தக் குதிரையிலேறிக்கொள்ளுங்கள் ப்ராணநாத்.

(கள்ளன்-வ-ம்.) அப்படியே யேறிக்கொண்டேன்வந்துவி

(சதா-வ-ம்.) நல்லது தாங்கள் முன்னுடிவழிகாட்டிச் செல்லுங்கள் யான் பின்பற்றி வருகின்றேன்.

(கள்ளன்-வ-ம்.) அப்படியே செல்கின்றேன்.

விடிந்தபின் சதாரம் கூடவந்தவனைக் கள்ளனென்னறிந்து வியாகூலப்பட்டுச் சொல்-தரு

பரிபந்தநுரா மைனமரா னௌரதனஹரா என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு

இராகம்-தேசிகதோடி-தாளம்-சாபு.

பல்லவி.

இவனோரெந்த ஊரோஎன்றம் காமறியோமே

அநுபல்லவி.

சோரனைப்போற் றோன்றுகிறவன்
கூதறியோமே
சொந்தங்காட்டித் தந்திரமாய்த்
தூரத்திடுவோமே யிவ (னோ)

(சதா-வ-ம்.) ஆ ஆ என்னகாலவித்யாசம் நாமேதோ கணவனென்றெண்ணிக் கூடவந்தோம. இப்போது விடியற்காலமாகிவிட்டது கூடவருகின்றவனைப் பார்க்கும்போது கள்வனைப்போல காணப்படுகின்றதே யினியென்செய்கின்றது நல்லது நாம் முன்போல சொந்தத்தைப்பாராட்டித் தண்ணீர்கொண்டு வரும்படி ஜாலமபேசியனுப்பிவிட்டு நாம் வேறுமார்க்கமாய்த் தப்பித்துச் சென்றுவிடுவோம் * ஆ ஆ ப்ரபு யான் அந்தப் புரத்திலேயே

சுகமாயிருந்து வழக்கப்பட்டவளாதலின் இப்போது குதிரையேறிச் சவாரிசெய்துவந்ததி னிமித்தம் எனக்கொருவிதமான மயக்கமுந் தாகவிடாயும் அதிகரிக்கின்றமையால் தாங்களிப்பொழுதேசென்று தண்ணீரெவ்விடத்தி லிருந்தபோதிலுந்தேடிக் கொஞ்சங்கொண்டுவந்து கொடாவிடில் என்னுயிர்போய்விடும் அப்பாலிந்தச் சதாரத்தைக் காணமாட்டீர்கள் ப்ரபு.

(கள்ளன்-வ-ம்.) அப்படியா இதோ நொடிக்குள்ளாகக் கொண்டுவருகின்றேன் மானே.

சதாரம்-மந்திராலோசனை.

(சதா-வ-ம்.) ஆ ஆ கள்வனானவன் நமது வார்த்தையை மெய்யென்றுநம்பிக் குதிரைவிட்டிறங்கி வெகுதூரஞ் சென்றுவிட்டான் அவனேறிவந்த குதிரையைச் சும்மாவிட்டுவிட்டுப் போகும்பக்ஷத்தில் மறுபடியுங் குதிரையேறி யெவ்விதமேனும் பின்பற்றிவந்து பிடித்துக்கொள்வான் ஆகலால் இப்போதிந்தக் குதிரையின் கால்களைவெட்டிவிட்டு நாமிந்தக் குதிரையை வேகமாகச் செலுத்திவிடும்பக்ஷத்தில் அக்கள்வன் நம்மைக் கண்டுபிடிக்கச் சாத்தியப்படாதாகையால் இப்போது குதிரையின் கால்களை வெட்டிவிடுவோம் ஆ ஆ நாம் குதிரையின் கால்களை வெட்டிவிட்டோம் இப்போ இந்தக் கானக மார்க்கமாய்ச் சென்றுவிடுவோம்.

கள்ளன் தண்ணீர்கொண்டுவந்து
சதாரத்தைக் காணாமற் புலம்புதல்-தரு
ஆகாவிதென்னகாலம் அமைந்ததேயிந்தக்கோலம்
என்ற-வே-முத்தையாசாரியார் அரிச்சந்த்ர நாடகத்தருவின்
வர்ணமெட்டு-இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

தேவியிதென்னமாயம் செய்தாயேயநியாயம்

அநுபல்லவி.

பூவைதன்னைக்காணேனே போனவிதந்தோணேனே (தே)

சரணங்கள்.

தாகந்தீர்த்திடவெண்ணித் தண்ணீர்க்கிணற்றைநண்ணி
வேகமாகவேதானே மிகநீர்கொண்டுவந்தேனே (தே)

கோணமேலேகிளாறுங் கொணர்ந்தஜலமுந்தானும்
வீணாகவேபோச்சுதே விசனமுமுண்டாச்சுதே (தே)

நற்குதிரையுமெட்டி நடவாமற்கால்வெட்டிப்
பக்குவமாயிப்போது பறந்தாளோ அந்தமாது (தே)

எந்தவழிபோனாளோ என்னகதியானாளோ
சிந்தையெல்லாம்நோகுதே தீப்பிடித்துவேகுதே (தே)

மங்கைபோனநேரமே வாழ்க்கைவெகுதூரமே
சங்கையில்லாமல்நானே சன்யாசங்கொள்வேனே (தே)

(கள்ளன்-வ-ம்.) ஆ ஆ ஜெகதீசா ஈதென்ன மாயமாயிருக்கின்றது நீசெய்த அன்யாயந்தான்போலிருக்கின்றதே ஆ ஆ யானேதோ சதாரத்தின் வார்த்தையைநம்பித் தாகத்தைத் தீர்க்கும்பொருட்டு வேகமாகக் கிணற்றுக்குச்சென்று ஜலங்கொண்டுவந்தேனே. ஆ ஆ அவளையிங்கு காணப்படவில்லையே ஆ ஆ அவள்போனவிதமுந் தோணப்படவில்லையே. ஆ ஆ யான் கொண்டுவந்த ஜலமானது வீணாகப்போய்விட்டதே ஆ ஆ யானேறிவந்த குதிரை நடவாமலிருக்கும்படி கால்களைவெட்டிவிட்டு ஒருநிமிஷத்திற்குள்ளாக எந்தமார்க்கமாய்ப் பறந்துபோனாளோ என்னகதியானாளோ தெரியவில்லையே ஆ ஆ அவள்போனதையெண்ணி யென்சிந்தையானது வெந்து புண்ணாகின்றதே ஆ ஆ இனிமேல அவளை யெவ்விதந்தேடிக் கண்டுபிடிக்கப் போகின்றேன் ஆ ஆ சதாரம் உன்னையிவ்வாரண்யத்தில் எங்குகாணப்போகின்றேன் ஆ ஆ பாதகி யென்னுயிர்தத்தளிக்கின்றதே யென்செய்வேன் ஆ ஆ ஈசா அந்தருபலக்ஷணமுடைத்தாகிய பெண்ணைக்கண்ட கண்ணுன்று வேறொருகாரிகைமுகம் பார்க்கப்போகின்றதா ஒருக்காலுமில்லை ஆதலால் இனிமேலெனக்கு இவ்வுலகவாழ்க்கை யெதற்காகவேண்டும் யானிப்பொழுதே காஷாயந்தரித்துப் பரதேசத்துக்குச் செல்கின்றேன்.

கவேதச்சந்திரன் விடிந்தபின்னெழுந்து குதிரைகளும்

உப்பு மூட்டையும் சதாரமும் காணாமற் புலம்புந் - தரு

விஸ்வேசா வுந்தனைநான் வேண்டினபலனிதுவோ

என்றழுக்கவேலார் அரிச்சந்த்ரநாடகத்தருவின்வர்ணமெட்டு

இராகம்-கமாஸ். தாளம் ருபகம.

கண்ணிகள்.

ஜெகதீசாவுந்தனைநான் சிந்தித்தபலனிதுவோ
தேவிதனைக்காணேனையா ஆவிநிகப்பதறதே
தேவனே தேவனே தேவனே தேவனே (ஜெக)

புரவியிரண்டுடனே பொன்னுப்புங்காணேமையோ
போனவிதம்நானறியேன் வானவர்தொழுஞ்சிவனே
போச்சுதே போச்சுதே போச்சுதே போச்சுதே (ஜெக)

காமேகரிழந்து கல்லதைத்தாயிழந்து
நாயகியைநம்பிவந்தேன் மாயமாகச்சென்றிட்டாளே
நாதனே நாதனே நாதனே நாதனே (ஜெக)

இப்படிச்செய்குவளென்று சொற்பனமும்நானறியேன்
வந்தனைத்தனியாய்விட்டுச் சுந்தரியுஞ்சென்றிட்டாளே
என்செய்வேன் என்செய்வேன் என்செய்வேன் என்செய்வேன்.

(கவே-வ-ம்.) ஆ ஆ ஜெகதீசா என்ன காலவித்யாசம் ப தோ எனது விதிவசத்தாற் பெண்சாதியைப் பறிகொடுத்து என் சாணுடம்பும் ஒரு சாணைவாகக்குன்றி மயங்கித் தேடித்தருணத் தில் (கும்பிடப்போனதெய்வங் குறுக்கேவந்தது) என்பதுபோல நேற்றைத்தினம் தன்னிருதையால் மனைவியைச்சந்தித்து அவளுத் திரவின்படி குதிரைகளும் உப்புகளும் வாங்கிக்கொண்டு அர்த் தராத்திரிவேளைபார்த்துவந்து பாரியாளைக் காணுதிருந்த நிமித்த ம் நித்திரைசெய்கின்றுவென்றெண்ணிக் குதிரைகளை யிக்கம்பத்தி ற் கட்டிவிட்டு உப்புகளை மூட்டையாகக்கட்டித் தலையணையா கவைத்துப் படுத்திருந்தேன் இப்போது விடிந்துவெகுநேரமாகி விட்டது குதிரைகளும் உப்புமூட்டையும் சதாரத்தையுங் கா ணப்படவில்லை இந்த ஜன்னல் வழியாக நூலேணியிட்டுக் கட்

டப்பட்டிருக்கின்றது. இவைகளை யோசிக்குமிடத்தில் பாரி யாயமர்ந்த காரியானவள் சோரநாயகனுடன் எவ்விதமாகவோ சென்றுவிட்டாள்போ லிருக்கின்றதே. ஆ ஆ மகாதேவா யுது ன்னைச் சந்ததமுஞ் சிந்தித்துக்கொண் டிருந்ததற்குக்கிடைத்த பலனிதுதானோ. ஆ ஆ தெய்வமே எனது நாடுநகர் பவுஷா பாக்யா திகளையுமிழந்து அன்னைபிதாவையும்பிரிந்து சதாரமேசதமென் று நம்பிவந்தேனே ஆ ஆ பாவியானவள் ஆவிபதைத்திடும்படி து யக்கவிட்டுச் சென்றுவிட்டாளே இப்படிச் செய்வாளென்று சொற்பனங்கூடக் காணவில்லையே இனியென்செய்வேன் ஆ ஆ தாரகமாயிருந்த நாயகியைக் கைதவறவிட்டுவிட்டபடியால் என க்கிவ்வுலகாசை யெதற்காகவேண்டும் ஆகையால் யானிப்பொழு தே யில்லறவொழுக்கத்தைவிடுத்துத் துறவறவொழுக்கத்தை யடுத் துக் காஷாயவஸ்திரமுடுத்துப் பரதேசிவேஷ மெடுத்துத் தேசச ஞ்சாரஞ்செல்கின்றேன்.

மதனமகாராஜன் நித்தியவழக்கப்போற்

சதாரத்தைப் பார்க்கக் கருதிச் சொல் - தரு

மனமுருகமாரன் நினைகன்தாவுதே

என்ற ப்ரமாத்தருவின் வர்ணமெட்டு

இராகம்-இந்துஸ்தானி-தோடி-ஏகதாளம்

பல்லவி.

அநுதினம்போற் பார்த்துவருவேனே

அநுபல்லவி.

இனியகுணசதாரத்தை (அநு)

(மத-வ-ம்.) சிறைச்சாலையி லடைபட்டிருக்கின்ற சதாரத் தைக்கண்டு க்ஷேமலாபங்களை விசாரித்துவருகின்ற நித்யவழக்க ப்போல் இன்றையத்தினமுஞ் சிறைச்சாலைக்குச்சென்று அவள் வி ரதானுஷ்டானஞ் சரியாய் நடந்துவருகின்றதா வென்பதைப் பா ர்த்துவருகின்றேனிப்போது.

மதனமகாராஜன் சிறைச்சாலையி லடைபட்டிருந்த
சதாரத்தைக் காணுமற்புலம்பும்-தரு
பஞ்சமாபாதகம்படமாட்டாதோ எந்தன் பாவவினைகளுன்னைத்தொட
மாட்டாதோ என்றட்டாமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-காபி-திரிபுடைதாளம்

கண்ணிகள்.

கைலையங்கிரிவாழ்பவன்	காதகனே பெண்ணைக்
கவலைப்படவைத்தா	யேயனே
கன்னிகைதனையிங்கு	காணேனேயோ காவல்
கடந்துபோனசங்கதி	தோணேனேயோ
விரதமிருப்பதாக	வேஷ்டினளோ - அதை
மெய்யென்றுநானிருக்கத்	தாண்டினளே
எத்தனைமோசஞ்செய்ய	எண்ணினளோ - அவள்
எண்ணம்போலெனைமோசம்	பண்ணினளோ
இப்படிச்சதிசெய்வா	ளென்றறியேன் - கண்டால்
இடைவிட்டொருபோதும்	நான்பிரியேன்
சிறையினிலடைபட்ட	தேனுனேயோ - இப்பத்
தெரியாமலெவ்வழியாய்ப்	போனாளேயோ
மனதுமிகவுநொந்து	வாடுரதே - அந்த
மங்கைமேலென்னுயிர்தானும்	நாடுரதே
அரசாங்கமதைவிட்டு	கன்றிடுவேன் - காவி
பணிந்துபரதேசமுந்து	சென்றிடுவேன்

(மத-ன-ம்.) ஆ ஆ ஜெகதீசா என்னையுங் கவலைக்குள்ளாக்கி வைத்தனையே ஆ ஆ இக்காராக்ரகத்தி லடைபட்டிருந்த சதாரத்தைக்காணேனே ஆ ஆ அவள் விரதமிருப்பதாகப் பாஷித்த வார்த்தையை மெய்யென்று நம்பியல்லவோ அவள் மனம்போல உத்திரவு கொடுத்திருந்தேன். ஆ! ஆ! இப்போ தென்னைவிட்டுத் தப்பித்துச் சென்றுவிட்டாளே, ஆ! ஆ! இப்படி மோசஞ்செய்பவளாமென்றுதான் விரதமிருக்கறாள்போ லிருக்கின்றதே, ஆ! ஆ!

அவளென்னப்படி முடித்துவிட்டாளே ஆ ஆ இப்படிச்செய்வாளென்றுமா னறிந்திருக்கும்பக்ஷத்தில் க்ஷணப்போதாவது இ லடைவிட் டகன்றிருக்கமாட்டேனே ஆ ஆ அவளெந்தவழிசென்றாளோ தெரியவில்லையே ஆ ஆ என்மனம் வாடுகின்றதே அவள் மீதே ஞாபகத்தைச் செலுத்துகின்றதே ஆ ஆ அப்போக்கிரித்த சுந்தரவதியைக் கைதவறவிடுத்தமேல் மதனமகாராஜனென் னு நாமதேயத்தைவைத்து ராஜரீகஞ்செய்வதி லென்னபிரயோஜனம் ஆகையால் யானிப்பொழுதே காஷாயவஸ்திரமுடுத்துச் சன்யாசிபோல வேஷமெடுத்துப் பரதேசஞ் செல்கின்றேன்.



பொன்னரங்கபுரியில்வசிக்கும்
புரந்தரனென்னும் ராஜகுமாரனும்
புத்திமானென்னும் மந்திரிகுமாரனும்
வேட்டைக்கு வந்துவிடத்தில்
சதாரத்தைக்கண்டு புரந்தரன்சொல்-தரு
இஜர்மதோரைஹ ஜானி - இஜர்மதோரைஹ
என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாபு.

பல்லவி.

யாரோபாரடா மித்ரா யாரோபாரடா

அநுபல்லவி.

சேர்ந்துநிரை யேதிலுவ (தாரோ)

சரணங்கள்.

ஆடையணிந்த ஜாடைகளினும்
ஆடவனைப்போற்காணுதே
வேடந்தோணுதே கொண்ட வேடந்தோணுதே
சேரிக்குதிரை யேறிவருவ (தாரோ)

(புரந்தரன்சொல்-வசனம்.) ஹேமித்திரா யான் பொன்னகர்
கபுரிக் கிறைவனுகிய புனிதாக்ககமகாராஜாவுக்குப் புதல்வனாகப்
பிறந்து புரந்தரனென்னும் நாமதேயத்தைப்பெற்றும் நீ மதிநுதி
மந்திரிக்கு மைந்தனாகப்பிறந்து புத்திமானென்னும் நாமதேயத்
தைப்பெற்றும் நாமிருவரும் அநுதினமும் இவ்வாரண்யத்தில்
வந்து வேட்டையாடப் பழகினேமேயன்றி ஒருநாளாவது குதி
ரையேறிச் சவாரிசெய்து பழகினேமில்லையே ஆ ஆ நம்மையும்
ராஜபுத்திரர்களென்று சொல்வதற்கு என்னயோக்யதை யிருக்கி
றது இதோபார் இவ்வழிமார்க்கமாக யாரோ அதிவேகமாகக்
குதிரைச்சவாரி செய்துவருவதுபோல் பாருந் செய்தாலல்ல
வோ யோக்யதை நல்லது அக்குதிரைமே லேறிவருவது ஆணா
கவும் பெண்ணென்றும் புலப்படவில்லை ஆனால் அணிந்திருக்
கின்ற பொற்சிமிழ் யுப்புமுதலான வேஷத்தினால் ஆண்பா
லென்றே மதிக்கத்தக்கதா யிருக்கின்றது உனதபிப்ராய மென்
னவாது மித்ர.

புத்திமான் சொல்-தரு

மாதவமே யிவ்வுருவாய் வந்ததுமென் மித்ரவசமோ
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு
இராகம்-நாதநாமக்ரியை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பொன்னுடைப்பு மின்னுவதாற்
புருஷனென்று புகலவந்தாய்

அநுபல்லவி.

சின்னமதாம் கன்னிகைபோற்
தெரியுதையா அதிசயமே (பொன்)

(புத்திமான்சொல்-வசனம்.) ஆ ஆ நண்பா நீயேதோ தவி
த்திருக்கின்ற உடுப்பைமட்டும்பார்த்து ஆண்பாலென்று மதித்த

க்கொண்டவனைபோ லிருக்கின்றது அப்படியன்று இப்பொழுது
யா னுற்றுநோக்கிச் செய்ததில் அவயவங்களிலுற்ற சின்னங்களினாலும்
முகக்குறிப்பினாலும் பெண்பாலென்றே வெளியாகின்றது மித்ரா ந
னறியப்பார்.

புரந்தரன்சொல்-தரு

விரசமான வார்த்தைவேண்டாம் விட்டுவிடடா
என்ற ட்ராமாப்பத்தின் வர்ணமெட்டு
இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மித்ரா நீசொன்ன வார்த்தைதன்னை
மெய்யாய் நம்பினேன்

அநுபல்லவி.

மத்தகத்தை யொத்ததனை
மங்கையைக்கண்டேன்
மெத்தவுமே புத்திமாறி
மோகமுங்கொண்டேன் (மித்ரா)

புர-வ-ம் ஆ ஆ நேசா நீ யாலோசித்ததுமெய்தான்பார் மத்த
கம் நிகர்த்தசித்திர மிகுந்த கொங்கைகளையுடைய மங்கையினது
கமலவதனத்தைக்கண்டவுடனே யெனக்குவிரகதாப முண்டாகி
ன்றதே யிதற்கென்செய்வேன்.

புத்திமான்சொல்-தரு.

இந்தசமயம்புரா இனகுலதிலகா
என்றகீர்த்தனையின் வர்ணமெட்டு
இராகம்-உதயரவிசந்திரிகா-தாளம்-ஆதி

பல்லவி.

எனக்குமப்படியே யிருக்குதே துணைவா (என)

அநுபல்லவி.

தனிக்கவேகானே தயங்கிடலானேன் (என)

சரணம்.

வதனமுங்கண்டேன் மையலுங்கொண்டேன்
இதற்கென்னசெய்வேன் எவ்விதமுய்வேன் (என)

(புத்-வ-ம்.) ஆ ஆ தோழா யானவள் முகாரவிந்தத்தைக்க ண்டவுடனே எனக்கும அதிகமைய லுண்டாகின்றதே யிதற்கெ ன்செய்வேன்.

(புர-வ-ம்.) அடா துஷ்டா எனக்கு விரகதாப முண்டாகின் றதெனறு சொன்னதைக்கேட்டு நீயுமையலுண்டாகின்றதென் று சொல்கின்றனையே யிது வுசிதமா

(புத்-வ-ம.) அடாமூர்க்கா யான் மையல்கொண்டிருப்பதை க் கண்டிருந்தும் மறுத்துக் கூறுகின்றனையே யிது நீதியா.

(புர-வ-ம்.) அடாபாவி யானவள்வரவைக் காட்டாவிடில்நீ மையல்கொள்ள ஞாயமுண்டாவென்ன.

(புத்-வ-ம்.) அடா சண்டாளா யானவளைப் பெண்ணென் று வெளியாக்காவிட்டால் நீ விரகமுற யோகயதையுண்டா வெ ன்ன.

(புர-வ-ம்.) நல்லது யானவளை வரிப்பபடுத்திக்கொண்டால் நீ யென்செய்வாய்.

(புத்-வ-ம்.) நல்லது யானவளைக் கெந்தருவம்பண்ணிக்கொண் டால் நீயென் செய்வாய்.

(புர-வ-ம்) நல்லது உன் சமர்த்தும் என் சமர்த்தும் பார்ப் போம்.

(புத்-வ-ம்.) அப்படியே பார்ப்போம்.

சதாரம் புரந்தரனையும் புத்திமானையுங்கண்டு

சந்தேகித்துச் சொல்தரு.

சுந்தரவதனுஎன்னைச் சேரமையல்கிரவாடா

என்றட்சரமாந்தருவின் வர்னமெட்டு

இராகம்-இந்துஸ்தானி-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

இங்குநிற்கின்றவர்க ளெவரோகாணு மறியேனே

அநுபல்லவி.

சங்கையில்லாமற்றுனே ஜாடைபேசவுங்கண்டேனே(யிங்)

(சதா-வ-ம.) ஆ ஆ என்னகாலவிக்பாசம் காளனேதோ மகா ராஜாவின் சிறையையும் கள்வனையும் விடுத்துத் தப்பித்துஅனே கதேசங்களையுங்கடந்து இவ்வாரண்யத்திற்கு வந்தேன் இப்போ துயாரோ இரண்டுபேர்கள் கரத்தில் வில்பிடித்து நிற்கின்றார்கள் அவர்களைப் பார்த்தால் வேட்டைக்கு வந்த ராஜகுமாரர்களைப் போற் காணப்படுகின்றது ஏதோ என்னைக் கண்டவுடன் இருவ ரும வாக்குவாதஞ் செய்துகொண்டதை யோசிக்கும்விஷயத்தில எனது பதிவிரதா தர்மத்திற்குப் பங்கந்தேடக் கருதி யிருக்கின் றார்கள்போற் காணப்படுகின்றதே ஆ ஆ (பட்டகாலிலேயே படு ம கெட்டகுடியேகெடும்) என்பதுபோல எனக்கெப்பொழுதும் இப்படிக் கஷ்டந்தானு சம்பவிக்கவேண்டும் இனியென்செய்கின் றது நல்லது (வழிரண்டுபட்டாற் கூத்தாடிக் கெனிது) என்பது போலஇவ்விருவரும் பகைகொண்டிருப்பதாய்த் தெரியவருவதா ல் இவர்களை யெப்படியாவது ஏமாற்றித் தப்பித்துக் கொள்கின் றேன்.

(சதாரத்திடம் புரந்தரனும் புத்திமானும் சம்பாஷித்தல்.)

(புர-வ-ம்.) ஆ ஆ ஸ்ரீமாதே நீயெந்தவூர்

(சதா-வ-ம். யான்சத்யபுரி ப்ரபு

(புத்-வ-ம்.) ஹேகோதாய் உன் நாமதேயம்யாது

(சதா-வ-ம்.) என்னைச்சதாரமென்று சொல்வார்கள்ப்ரபு

(புர-வ-ம்.) ஹேமங்காய் யானுன்னைக்கண்டு விரகங்கொண் டவனு யிருப்பதால் இப்போதென தெண்ணத்தை நிறைவேற்று கின்றனையா அல்லது எனதுகரத்தி லிராகின்ற அம்புக்கிரையாகி ன்றனையா சீக்கிரந்தெரிவிப்பாயாக.

(புத்-வ-ம) ஹேநங்காய் யானின்னைப் பார்த்து மையல் பூ த்தவனுயிருப்பதால் இச்சமயமெனது கருத்தை முடிக்கின்றனை யா இல்லாவிடில் எனதுகையிற் பற்றியவில்லுக்குப் பலியாகின்ற னையா விரைவினி லறிவிப்பாயாக.

(சதாரம் சொல்-தரு.)

மோகமுனேதானலோ முத்துபெட்டராகசாமி
என்றதாளவரியின் வர்ணமெட்டு.

இராகம் - தோடி. - தாளம்-ரூபகம்.

பல்லவி.

இருவரென்னைமருவுதற்கு எனையவ்கொண்டால்
என்னசெய்வேன் (இருவ)

அநுபல்லவி.

பெரியபகை வருதயிக்கப்
பேச்சுக்குள்ளைப் படமாட்டேன்
ஒருவரானு லிவ்விவகாரம்
உடன்படவிரோதம் காட்டேன். (இருவ)

(சதா-வ-ம.) ஆ ஆ ப்ரபுக்காள் பாருங்கள் யானுங்களிருவர் பத்திலு மிணக்கந் தவிட்டிவில்லை ஆனால் நீங்க ளிருவரும என்மீது காதல் கொண்டவர்களா யிருப்பதால் யாரொருவருக் கிணங்கினும் மற்றொருவருக்குப் பெரியவிரோதம் பிரசம்பவிக்குமே. அதற்கென்செய்கின்றது.

(புர-வ-ம்.) ஆ ஆ பெண்ணே நீயென் பக்ஷத்தி லிருப்பாயாகில் யானிவனை யோர் க்ஷணத்தில் கொன்று யமலோகத்திற்கனுப்பிவிடுகின்றேன் நீயவனைப்பற்றி யோசிக்கவேண்டாம்பாவாய்

(புத்-வ-ம.) ஆ ஆ மின்னே நீயென் பக்ஷ மிருப்பாயாகில் யானிவனை யோர்க்ஷணத்திற் சம்மரித்து யமபுரத்திற் சேர்க்கச் செய்கின்றேன் நீயதுவிஷயத்திற் கவலைப்படவேண்டாம் பூவாய்

(சதா-வ-ம்.) ஆ ஆ ராஜகுமாரர்காள் பாருங்கள் இவ்வற்ப விஷயத்திற்காக நீங்கள் கொலை புரிவதாகப் பார்ப்பது உசிதமன்று ஆதலின் அதோதெரிகின்ற தடாகத்தின் மத்தியிற் புஷ்பித்திராநின்ற தாமரை மலரை யாவர் முன்னறப் பறித்து வந்து கொடுக்கின்றீர்களோ அவர்கள் கருத்துக் கிணங்கி நடக்கத் தயாராயிருக்கின்றேன் ப்ரபுக்காள் இதற்கென் சொல்கின்றீர்கள்.

(புர-வ-ம்.) அப்படியா இதோ வோர் க்ஷணத்திற் பறித்து வருகின்றேன் மானே.

(புத்-வ-ம்.) ஆ ஆ மாதே யானவனுக்குமுன்னமே சென்று கொய்துவந்து கொடுக்கின்றே னிப்போது.

(சதாரம் மந்திராலோசனை

(சதா-வ-ம்.) ஆ ஆ காமமேயோ கடமாயுரைத்த வார்த்தையைக் கேட்ட ராஜகுமாரர்க ளிருவரும் கோகனக மலர் கொய்ய வேகமாய்ச் சென்று தடாகத்திற்குள் ளிறங்கிவிட்டார்கள் அவர்கள் மீண்டுவருவதற் குள்ளாக அவர்கள் நேத்ரத்திற்குப் புலப்படாமல் இவ்வழிமார்க்கமாகக் குதிரையை நடத்தி யேதாவது ஓர் நகரத்தை நாடிச்செல்வோ மிப்போது.

புரந்தரன் தாமரைப்புஷ்பங் கொண்டுவந்து
சதாரத்தைக் காணுமற்புலம்புந் தரு.
தந்திரமாரே யிந்திரனை சேபதல்கயி
என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-சாபு.

பல்லவி.

இங்கேயிருந்த மங்கையிப்போ தெங்கே காணேனே

அநுபல்லவி.

பங்கயமலரிங்குதமாய்ப் பறித்துவந்தேனே (யிங்)

சரணங்கள்.

மந்திரிமகள் சிந்தைகோக வைதுபகைத்தேன்
சொந்தமறந்து விந்தைவார்த்தை சொல்லிநகைத்தேன் (யிங்)
செவ்விதழாளும் எவ்வழியைத் தேடிப்போனாளோ
ஒவ்வியாமலே கொவ்வையாமென் றோடலானாளோ (யிங்)
இப்படிவிட்டுத் தப்புவாளென் றெண்ணவில்லையே
கற்பனையாக உற்பவித்த காதல்தொல்லையே (யிங்)
பூவையைவிட்டுப் பாவிநானும் புவியையாளேனோ
தீவிரமாகக்காவிருடித் தேசஞ்செல்வேனோ (யிங்)

(புர-வ-ம்.) ஆ ஆ ஜெகதீசா என்னவிபரீதமா யிருக்கின்றது இவ்விடத்தி லிருந்துகொண்டு தாமரைப்புஷ்பங் கொண்டுவரு

மயறியாகப் பாவித்த சதார மென்பவளை யிங்கு காணப்பட வில்லையே ஆ ஆ அவனுத்திரவின்படி முண்டகமலர் பறித்துக்கொண்டு முன்னாடி வந்தேனே ஆ ஆ அவனுடைய இஷ்டத்தைக்கருதி அப்புநேசனாகிய மந்திரிகுமாரனையும் பலவாறு வைதுபலாத்தாக்கொண்டேனே ஆ ஆ கொவ்வை யிதழாள் எவ்வழி சென்றாளோ தெரியவில்லையே ஆ ஆ இப்படி மோசஞ் செய்வாளென்று சொற்பனத்திலுங் காணவில்லையே ஆ ஆ விரகவேதனையைச் சகிக்க முடியவில்லையே யினியென் செய்வேன் ஆ ஆ அப்பேர்க்கொத்த ரூபவதியைக் கண்டகண்ணானது வேறுமங்கையர்களைப் பார்க்கப் போகின்றதா ஒருக்காலுமில்லை அந்தச் சுந்தரியைக்கை தவற விட்டுவிட்டு ராஜரீகஞ்செய்வதி லென்னபிரயோஜனம் ஆகையா லிப்பொழுதே காஷாயவஸ்திரந் தரித்துப் பரதேசஞ் செல்கின்றேன்.

புத்திமான் தாமரைப்புஷ்பங் கொண்டுவந்து
சதாரத்தைக்காணாற் புலம்புந்-தரு.
தேவபாஷையோரே ஆஜா மேரீ
என்றஇந்துஸ்தானியின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-இந்துஸ்தானி-ஆதிதாளம்.

பல்லவி.

ஈசா வனிதைதனை யிங்கே காணேன்

அநுபல்லவி.

ஆசைமயிலி மோசஞ்செய்தகன்றாளே (ஈசா)

சரணங்கள்.

மயிலன் சேயிடத்தில் பகையாகியே
வாருடன் மலர்கொய்ய வேகமாயேகியே
தகையுடனேவருஞ் சந்தர்ப்பத்தினிலே (ஈசா)

அரிவை தனைவிடுத்துப் புரியேகவே
அடியவன் மனந்திடப் பரிமோகமாகவே
பரதேசஞ் செல்கிறேன் பஞ்சையைப்போலவே (ஈசா)

(புத்-வ-ம்.) ஆ ஆ ஜெகதீசா என்னாச்சரியமாயிருக்கின்றது பங்கயமலர் கொண்டுவரும்படி யிங்கிதமாகப் பேசிய மங்கையா

ளவளை யிங்கு காணப்பட வில்லையே ஆ ஆ ஆசையைக் காட்டி மோசஞ் செய்தேகிவிட்டாளே ஆ ஆ இவள் நேசத்தைக் கோரியென்து ப்ராணசிநேகிதனாகிய ராஜகுமாரனையும் பகைத்து அவனுத்திரவுப்படி மலர் பறித்து வருங் கருணத்தில் இங்கிருந்தவள் எப்படியோ தப்பித்துச் சென்றுவிட்டாளே ஆ ஆ இந்த விதஞ் செய்வாளென்று சிந்தையி லெண்ணவில்லையே ஆ ஆ அவ்வித சுந்தரியைப் பார்த்த நேத்திரமானது மற்ற நங்கையர்களை நோக்கப்போகின்றதா ஒருக்காலுமில்லை அம்மாதைக்கைதவறவிடுத்து நகரத்திற்குச் செல்ல மனஞ் சமாதானப்படவில்லை யாதலால் இனிமே லெனக் கில்லற வாழ்க்கை பெறுதற்காக வேண்டும் கல்லனு இப்பொழுதே பஞ்சையைப்போல காவியுடையணிந்து தேசசஞ்சாரஞ் செல்கின்றேன்.

சாமளாபுரிக் கிறைவனாகிய மோகனங்கத மகாராஜாவின்

மந்திரியினது முதலாவதுசபை.

(மந்திரிசொல்-வ-ம்.) காவலாயுற்ற சேவகன்யாவன்.

(சேவ-வ-ம்.) ராஜர்கண்ணப்பா ஆஜராயிருக்கின்றேன்.

(மந்-வ-ம்.) இணக்கமாயுரைக்குங் கணக்கனை யழைத்துவா சீக்கிரம்.

(சேவ-வ-ம்.) செப்பியபடியே யிப்பவே யழைத்து வருகின்றேன் ப்ரபு.

(கணக்கன் மந்திரிசபைக்கு வருதல்.)

(கணக்கன்சொல் வசனம்.) துரைராஜர்கேசா கருணீகன் வந்தனம் புரிகின்றேன்.

(மந்-வ-ம்.) கல்யாண கணக்கா தரையாசனத்திற் பரிவாய் வீற்றிரு.

(கண-வ-ம்.) சாற்றியபடியே வீற்றிருக்கின்றேன்.

(மந்திரிசொல் தரு.)

சரிகரிசன்வராளிகைகரிசரி ஜகமுழுமாருமே

என்றபட்டாயா கேட்டின் வர்ணமெட்டு.

இராகம்-தருலகாயபோதி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

இத்தினம்மாமதராசன் புத்திரியாட்குப்புருஷன்
இல்லைமந்திரிசொல் கணக்கா (இ)

இப்பொழுதுசேவகனை யேவியந்நாயகனை
யிங்குவரச் செய்குவோமே (இ)

(மந்-வ-ம்.) சேவகாஇதோ மகாராஜபுத்திரியாகிய சசலீலா வதிக்கு இன்றைப்பத்தினை நாயகனாக நியமிக்க வேண்டிய விடை யவே ஆகையால் தெரிவிப்பாயெனில் இப்பொழுது அவ்விதமிருக்க வையாய் இருப்பதால் உமது சேவகனை விடுத்து அந்த நாயகனை ராத்திரிக்கு இங்குவந்து சேரும்படியாக முன்னாடி யோசித்து வரச்செய்வோம் கணக்கா.

(கண-வ-ம்.) அப்படியே யோட்டைப் பார்த்து விட்டைத் தெரிந்து சொல்லுகின்றேன் பிரபு.

(மந்-வ-ம்.) அப்படி ஆகட்டும்.

(கண-வ-ம்.) பிரபு பாருங்கள் இந்தச் சாமளா புரியில அன்னசாலை வைத்திருக்கும் முனையைப் பார்ப்பனத்தியாகிய ஆதிசப்பம்மாள் வீட்டிலிருக்கின்றவனது இன்றையத்தினம் கணக்கில் சேர்ப்பட்டிருக்கின்றது பிரபு.

(மந்-வ-ம்.) அப்படியா ＊ அடா சேவகா நீ யிப்பொழுதே அந்த ஆதிசப்பம்மாள் கிரகத்திற்குச்சென்று மகாராஜபுத்திரிக்கு இன்றையத்தினம் நாயகனாக எப்படி வேண்டியது உன் வீட்டிலுறையும் இருப்பதால் அரமனையிற் பள்ளியறை யலங்கரிக்கப் போகின்றார்கள் ராவையில் ராத்திரி நிமையமொருதடவையில் ஒரு நாயகனை யனுப்பவைக்க வேண்டுமென்றும் இல்லாவிட்டால் சிரச்சேதஞ் செய்யப்படுமென மந்திரியப்பாயறிவித்து வருவாயாக.

(சேவ-வ-ம்.) அப்படியே நிட்டயாயறிவித்து வருகின்றேன் பிரபு.



(சதாரம் சாமளாபுரியைக்கண்டு சொல்-தரு.)

வந்தனமுந் தந்தேனிதோ மந்தகாசமாய்

என்றபட்டாயாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சுந்தரஞ்சே ரிந்நகர் வந்துவிட்டோமே—அதி
சுந்தரஞ்சே ரிந்நகர் வந்துவிட்டோமே

அநுபல்லவி.

விந்தையதாகிய வீதிகள்தோறுந்
அந்தணர்வாழ்மிகு அக்கிராரங் காணுது (சு)

(சதா-வ-ம்.) ஆ ஆ நாம் ராஜகுமாரர்களை விடுத்துத் தப்பித்து அனேக தூரங்கடந்து இச்சுந்தர நகரத்திற்கு வந்தோம் இப்பொழுது அஸ்தமானமாகும் தருணமா யிருக்கின்றது இன்னேரத்தில் அனேக சிங்காரமான வீதிகள் காணப்படுகின்றது அதோ நல்ல மனுஷர் வாழும் அக்கிரார வீதியுந் தோன்றுகின்றது நல்லது இந்தக் குதிரையை யிவ்விடத்திற் கட்டிவிட்டுப் பார்ப்பனர்கள் அன்னசாலை யிருக்கு மிடந் தேடிப் போஜனஞ்செய்து அப்பாலாக வேண்டிய காரியங்களை யோசித்துக்கொள்வோம்.

{ அன்னசாலை வைத்திருக்கும் ஆதிகப்பம்மாளுக்கும்
அவள் மகன் ஜோதி முத்தையனுக்கும் சம்வாதம். }

(ஆதி கப்பம்மாள் சொல்-வசனம்.) அடா குழந்தாய் தனி கைசலமதாகவிட்டது சாப்பிடத்தருந்தமனுஷாளொருவரையுங் காணோமே இனி யென்செய்கிறது.

(ஜோதிமுத்தையன் சொல்-வசனம்.) அடியம்மா அதிருக்கட்டுமடி நானொருசந்தேகங் கேட்க வேண்டியதா யிருக்குது. அதற்கென்னடி சொல்லுறை.

(ஆதி-வ-ம்.) என்னடாப்பா இத்தனைநாளு மில்லாமல் இன்றைக்கு மட்டும் நோக்குச் சந்தேகந் தோணுகித்து அதைத் தான்சொல்லேன் பார்ப்போம்.

(ஜோதி முத்தையன் சொல்-தரு.

பள்ளிகளிலே யிருந்து பிள்ளைகளுக்கு மெனக்கும்

படிப்புச் சொல்லி வைபமமா

என்றதர்ராசச்சந்த்ர சபாவின் வர்ணமெட்டு

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

மூண்டச்சியகனென் றென்னைக்

கண்டவுடனே யெல்லோரும்

மொழிகிறாரடியம்மா

அநுபல்லவி

பண்டுவிதிப்பயனிதோ பாவிநானுமறியேனே
அன்னடையாத்துச் சுப்பன்றினஞ்சன்னடைக்குவருகிறானே (மூண்)

(ஜோதி-வ-ம்.) அடியம்மாபாக் நான் பள்ளிக்குப்போம்போதெல்லாம் என்னைக்கண்ட பிள்ளைகளெல்லோரும் சும்மனாட்டுமின்னா வந்துட்டான் வந்துட்டானென்று வெர்ணப்பரிகாசம்பண்ணுறான். அதிலும் நம்முட அன்னடையாத்துச்சுப்பனாலும் மோட்டைச்சிமகனென்று இட்டிக்கின்டு சன்னடைக்கும் வந்துடுறான். இதுவும் ப்ரம்மவிதானென்று நோக்காலும் என்சானுடைம்பும் ஒருசாணுகக்குன்றிப்போ. அவாள்சொல்வது நிஜந்தானோடியம்மா.

ஆதிகப்பம்மாள் சொல்-தரு

சாமிநீரென்னுடனே சரசமாடவாருமே

என்ற ட்ராமாப்பகத்தின் வர்ணமெட்டு

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி

இந்தவிப்ரமெல்லாம் மூதேவியாயோடா

அநுபல்லவி

மைந்தாநீதெரியாயோடா உண்மையாய் (இந்த)

சரணங்கள்.

ஆறுவயதிலுந்தன் அப்பனைநான்வரித்தேன்
ஏழுமேழினிலறுத்தேன் தாலியும் (இந்த)

ஒன்பதுவயதினில் தென்பாய்ப்பக்குவமுற்றேன்
பின்புபத்திலுனைப்பெற்றேன் அருமையாய் (இந்த)

பாவைநானிதைபன்றிப் பாபமொன்றுமறியேன்
யாவருக்குமேதெரியும் ஊரிலே (இந்த)

(ஆதி-வ-ம்.) அடா கண்மணி நீயிந்தனைநாளும் இந்தச் சங்கதிதெரிந்துகொள்ளவில்லையாவென்ன பார் நான் ஆறுவயதில் உங்கப்பனைக் கல்யாணம் பண்ணினேன் ஏழுவயதில் தாலியறுத்தேன் ஒன்பதுவயதிற் புஷ்பவதியானேன் பத்துவயதில் உன்னைப்பெற்றேன் இதைத்தவிர வேறேயொரு பாபமுமறியேன் இந்தச்சேதி ஊரிலெல்லோருக்குந் தெரியுமடா கண்மணி.

(ஜோதி-வ-ம்) ஏன்டியம்மா நீதான் ஏழுவயதில தாலியறுத்துட்டையே அப்படியிருக்கப் பத்துவயதில் என்னையெப்படியம்மாபெற்றாய்

(ஆதி-வ-ம்.) அடா வந்சா நான் புஷ்பவதியான நான்முதலாக நம்முட எதிராத்துச்சேஷையர் நம்மாத்துக்குவாரத்துப்போவது நோக்குக்கூடத்தெரியுமே நீகூட எத்தனையோதரம்போய் அழைத்துக்கின்டு வந்திருக்கிறையே.

(ஜோதி-வ-ம்.) அதுதெரியுமடியம்மா வேறேயாராவது வந்தானோவென்று சந்தேகமாய்க்கேட்டேன் அதனால் நோக்கேதாவது கோபமுண்டோடியம்மா.

(ஆதி-வ-ம.) கேக்கேனுக்குக்கோபம் மனஸ்தாபந்தான் நல்லது யாராவது சாப்பாட்டுக்குவந்தால் நான் ஏற்பாடாகப் பேசிக்கொள்ரேன் நீ குறுக்கேவந்து கோணக்காலை வைத்துடாதே காக்கப்போகுது தெரியுமா.

(ஜோதி-வ-ம.) அடியம்மா கேக்கேனுக்கடி வருத்தம் உன் மனம்போலேயே நடந்துகொள்றேனம்மா.

(ஆதி-வ-ம.) ஆனால்சரி

சதாரம். ஆதிகப்பம்மாள் அன்னசாலையைக்கண்டு சொல்லுகிறு மன்னுவுன்னைக்கண்டான்முதலாய் வையல்லிக்கொண்டேனே.

என்றட் ராமாத்தருவின் வர்ணமெட்டு

இராகம்-கமாஸ்-ஏகதாளம்.

பல்லவி.

இந்தமனைதன்னிலே நமக்குகந்தசாதம் கிட்டுமே

அநுபல்லவி.

விந்தையுடனேமுன்பாக விளக்குஸ்தம்ப மெரியுதேயிதோ
விளம்பரமொன்றுதெரியுதே (இந்த)

(சதா-வ-ம.) ஆ ஆகாம் போஜனஞ்செய்ய வேண்டுமென்று இவ்வக்ரகாரவீதி முழுமையுஞ்சுற்றி அன்னசாலையைத் தேடிக் கொண்டுவருவதற்குள்ளாகச் சூரியன் அஸ்தமனமாகிவிட்டான் இவ்வீட்டுக்கு முன்பாகத் தீபஸ்தம்பமொன்று பிரகாசமாயெரி கின்றது அதனருகில் விளம்பரமொன்று கட்டப்பட்டிருக்கின்றது. அதில் (ஆதிகப்பம்மாள் கொப்பெறாள்) என்றுவரையப்பட்டிருப்பதால் இங்கு நமதுபசியைநிவர்த்திசெய்வதற்குத் தக்கசாதம் கிடைக்கக்கூடுமாதலால் விசாரிப்போம் போமாறு * யாரம்மா இக்கத்தில்.

(ஆதி-வ-ம.) யாரப்பா கேக்கிறது

(சதா-வ-ம.) அம்மா பான் தேசசஞ்சாரி இங்கேதாவது சாப்பாடு கிடைக்குமோ.

(ஆதி வ-ம.) கன்னுப்கிடைக்கும்.

(சதா-வ-ம.) ஆனால் ஓராங்க சாப்பாட்டுக்கு என்னவிரயந் தொடுக்க வேண்டும்.

(ஆதி-வ-ம.) அடாகுழந்தாய் நீசொல்லுறையோ நான்சொல்லட்டுமோ.

(ஜோதி-வ-ம.) அம்மாநானே சொல்றேனே.

(ஆதி-வ-ம.) அடாகண்மணி நோக்கு வகைதொகையாய்ச் சொல்லத்தெரியாது நானே சொல்றேன்.

(ஜோதி-வ-ம.) அப்படித்தான் சொல்லேன் நீசொன்னாலென்ன நான்சொன்னாலென்ன (ஓட்டைப்பானை யானாலும் கொழுக்கட்டை வெந்தாப்போருமானது.)

(ஆதி-வ-ம.) ஹேதேசசஞ்சாரி எங்கள் அன்னசாலையில் இரண்டணாக்கொடுத்தால் ரசமுஞ்சாதமும் போடுவோம். நாலணாக்கொடுத்தாற் குழம்புஞ்சாதமும் போடுவோம். எட்டணாக்கொடுத்தாற் பதினெட்டுவகைக் காயகரி வடை பாயசத்துடன் சாதம்போடுவோம் ஒருரூபாய்கொடுத்தால் நல்லசாப்பாடுடன் ஏற்பாடுமுதலானபடுக்கையும் இங்கேவைத்துக்கொள்ளலாம். நோக்கெந்த ரேட்டுவேணும்.

(சதா-வ-ம.) ஆ ஆ அம்மா எனக்கவ்வளவு விசேஷமான ஏற்பாடுகளெல்லாம் வேண்டுவதில்லை நாலணாச் சாப்பாடுபோட்டாற்போதுமானதம்மா.

(ஆதி-வ-ம.) அதுதான் ஏதுக்கு உன்னைப்பார்த்தால் என் பிள்ளையை வச்சரித்தாற்போலேயிருக்கு நோக்குவேணுமானால் வெர்ணச் சாதம் வட்டிக்கிறேன் கண்ணுய்த் தின்னுட்டுப் போயேன்.

(சதா-வ-ம.) ஆனால் மெத்தச்சந்தோஷம் நல்லது அப்படியே சாப்பிடுகிறேன்.

(ஜோதி-வ-ம.) அடியம்மா நான்பேசினாலும் ஒழுங்காய்ப்பேசி ஆளைவிழுக்காட்டுவேன் நீபேசப்போக (உள்ளதும் போச்சுதடி கொள்ளைக்கண்ணி) யென்பதுபோல கொடுக்கக்கூடிய நாலணாவையுங்கெடுத்துட்டையே.

(ஆதி-வ-ம) இருக்கட்டும் வெர்ணவாயை மூடிக்கிண்டு பேசாதிரேண்டாப்பா.

(ஜோதி-வ-ம்) உன்பாடு நிலைச்சனியன் போக்கென்னாடியம்மா போறது.

(ஆதி-வ-ம்) அப்பா இதோ ஜலம்வைத்திருக்கு எடுத்துக் கையலம்பிக்கொண்டு இலைபோட்டுக்கொண்டு உட்காரு இதோ சாதம்வட்டிக்கிறேன்.

(சதா-வ-ம.) அப்படியே வீற்றிருக்கின்றேன்.

(ஆதி-வ-ம.) போக்கு அறுசுவைப் பதார்த்தங்களுடன் சாதம் வட்டிவிட்டேன் சம்ப்ரமாய்ச் சாப்பிடப்பா.

(சதா-வ-ம்.) அப்படியே சாப்பிடுகின்றேன்.

சதாரம் போஜனத்தைவியந்து சொல்லுதல்

இதிருவாயா ஸ்ரீராமசந்த்ரா

என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு

இராகம்-ஸ்ரீரஞ்சனி-தாளம்-ஆதி

பல்லவி.

இதுநாளிதுபோல் எங்கும்கண்டதில்லையே

அநுபல்லவி.

முந்தினம்செய்த விந்தையன்னம்தானே (இந்த)

(சதா-வ-ம.) ஆ ஆ அம்மா இந்தப் போஜனத்தின் ருசிகரத்தைப்போல யாவிதுவரையிலும் யெங்குமேன் முன்னம் கண்செப்பதாகும் இதுவாகத்தா னிருக்குமோ விருக்கின்றதம்மா.

(ஆதி-வ-ம்.) ஆனால்இதோ மறுசாதம் வைக்கிறேன்.

(சதா-வ-ம்.) அம்மாவேண்டாம் இதுவேபோதும்

(ஆதி-வ-ம்.) ஆனால்தண்ணீர்தரேன் கையலம்பிக்கொள்

(சதா வ-ம்.) அப்படியே அலம்பிக்கொள்கிறேன்.

(ஆதி-வ-ம்.) கையலம்பிக்கொண்டாயல்லவோ நல்லது போஜனஞ்செய்த களைப்புத்தீரச்சற்றே உட்காருகிறேன்.

(சதா-வ-ம.) அப்படியே யிருக்கின்றேன்.

சேவகன் மந்திரிசொல்லிய விபரத்தை

ஆதிகப்பம்மாளுக்குத் தெரிவித்தல்.

(சேவ-வ-ம்.) யாரம்மாவீட்டில்

(ஆதி-வ-ம்.) யாரப்பா கேட்கிறது.

(சேவ-வ-ம.) அம்மா யான் இன்னகரத்தில் இறைவனாகிய மோகனாங்கமகாராஜாவின் ஆசாரவாசற் சேவகன்.

(ஆதி-வ-ம்.) அடா சேவகா எங்கே வந்தாய் போக்கேதாவது சாப்பாடு தேவையோ.

(சேவ-வ-ம்.) இல்லையம்மா நமது மகாராஜாவின் புத்ரியாகிய சசிலேகவிக்கு இன்றையத்தினம் நாயக னனுப்பவேண்டியது தங்கள் வீட்டு முறை யாதலால் ஒருநாயகனை யனுப்பிவைக்க வேண்டுமென்றும் இல்லா விட்டாற் சிரசசேதஞ் செய்யப்படுமென்றும் தங்களுக் கறிவிக்கும்படி மந்த்ரியானவர் சாயரக்ஷையே யாக்ஞாபித் திருக்கார் அதைத் தெரிவிக்கும் பொருட்டா யிங்கு வந்தேனம்மா.

(ஆதி-வ-ம்.) அப்படியா நல்லது உன் பின்னாலேயே யனுப்பிவைக்கிறேன் நீபோய்வா.

(சேவ-வ-ம்.) ஆனைப்படியே போய்வருகின்றேன்

ஆதிகப்பம்மாள் தன்புத்திரனாகிய

ஜோதிமுத்தைய னிடம புலம்புதல்

சங்கரனேயென்னையிந்தச் சஞ்சலப்படவிட்டாயோ

என்றட்ராமாத் தருவின் வர்ணமெட்டு.

இராகம்-காபி தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

கண்மணியே

எவ்மகனே

யென்ன செய்குவோமடா

தெய்வமம்மை

ஐயையோ

யாபத்தினில் விட்டதே

அருமையாக

ஒருமகனென்

உன்னைநான் வளர்த்தேனே

தன்னைக்கட்டி

மன்னன்மகள்

மடியப் போகிறயடா

இப்படியாய் உற்பவிக்கச்

சொற்பனமுங் கண்டேனே

சிங்கையெல்லாந் தொந்தருகித்

தீப்பிடிக்க வேகுதே

காதலியே பேதையுன்னைக்

காண்பேனோ இனிமேது

(ஆதி-வ-ம்.) ஆ ஆ கண்மணி நமக்கு நேர்ந்தவிதிவசத்தை யாரிடத்திற் சொல்லி மாற்றப் போகிறோம் ஆ ஆ தெய்வம் இப்படிச் செய்துவிட்டதே ஆ ஆ வந்தால் நேக்கு நீயொரே பிள்ளையாயிருந்த நிமித்தம் கண்ணெல்லாவோ அருமையாக வளர்த்துப் பரீட்சைகளுஞ் செய்தேனே ஆ ஆ இப்போது மன்னன் மகளைக் கட்டி மடிந்திடப்போறையே ஆ ஆ இப்படி வருமென்று நான் சொற்பனங் கூடக்காணலியே ஆ ஆ என் மனமானது தீப்பற்றி யெரிகிறதே ஆ ஆ தனயா இனிமே உன்னை யெப்போதடாப்பார்க்கப் போறேன்.

(ஜோதி-வ-ம.) அடியம்மா மகராஜா மகளைக் கல்யாணஞ் செய்துகிண்டால் இறந்திடுவேனோடி யம்மா.

(ஆதி-வ-ம்.) ஆமடா கண்மணி.

(ஜோதிமுத்தையன்சொல்-தரு.)

என்னகாலம் எங்களுக்கு வந்ததோ லம் யானறியேன் ஈஸ்வரனே

என்றமெட்டாமத் தருவின் வர்ணமெட்டு.

இராகம் செஞ்சுருட்டி தாளம் சாபு.

கண்ணிகள்.

அன்னையோநான் என்னசெய்வேன்

அனாதச்சேதி மதனைப்பிடி

(அன்னை)

யாருதம்மா

பாவியன் ஆவிகொல்லப்

பண்ணினதை பெண்ணிமனம்

(அன்னை)

பதறுதம்மா

உற்பவித்த தப்பினக்கு

ஓடாருமய் ஒளிந்துகொள்வேன்

உண்மையம்மா

(ஜோதி-வ-ம் ஆ ஆ அம்மா நீ சொன்ன வார்த்தையைக் கேட்டவுடனே நேக்குப் பயமாயிருக்கு பாவியாகிய பிரம்மதேவன் இவ்வித துன்பத்துக் காளாக்கி விட்டதை யெண்ணி மனம் பதைக்கிறது ஆகச்சே நானெங்காவது ஓடிப்போய் ஒளிந்து கொள்கிறேனம்மா.

(ஆதி-வ-ம்.) அடா தனயா நீயெங்கடா ஒளிந்துகொள்வாய்

(ஜோதி-வ-ம்.) ஆடுப்பாங் குழியிற் படுத்துக் கொள்றேனம்மா.

(ஆதி-வ-ம்.) அடா கண்மணி அங்கிருந்தாலும் உன்னைக்கண்டு பிடித்துக்கிண்டு போயிடுவார்க ளப்பா.

(ஜோதி-வ-ம்.) ஆனால் எறும்புக் குழியில் நுழைந்து கொள்றே னம்மா.

(ஆதி-வ-ம்.) அடா துரையே அப்படியே நுழைந்தாலும் விடமாட்டார்க ளப்பா.

(ஜோதி-வ-ம்.) ஆனால் இனி யென்ன செய்றது நடக்கிறபடி நடக்கட்டும் பார்க்கலாம்.

(ஜோசம் ஆதிசெப்பமமாளை வினவுந்தரு.)

சரிகக்கக்கா ரிகமம்மமமா சரி கமபதபமகரி ஸஸஸஸா

என்றமெட்டாமா சோட்டின் வர்ணமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-ஏகதாளம்.

பல்லவி.

துயரேதம்மா எவர் குதம்மா அதி

துரிதமுடனேயதை யோதம்மா (துய)

அநுபல்லவி

அயர்வொடுசேயன் பயமுறவே மிக

அயர்வொடுசேயன் பயமுறவே

அழுதாய் அழுதாய அழுதாய் அழுதாய் (துய)

(சதா-வ-ம்.) ஆ ஆ அம்மா தாங்கள் மகனைப் பார்த்து விம்மியாகலமுற்று எதற்காக ரோதனஞ் செய்கின்றீர்கள் உங்களுக்கு யாதுவிபத்து நேர்ந்துவிட்டதம்மா.

(ஆதிசப்பம்மாள் சொல்தரு.

சண்முகனே சரவண கதிர்வேலனே சண்முகனே.

என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம் ஆதி.

பல்லவி.

என்சொல்லுவேன் தனயா அந்தச்சேதி
என்சொல்லுவேன்.

அநுபல்லவி.

முன்செய்தநீ வினையோ
அறியோமே
பஞ்சைசட்டனே வந்ததே
ஒருநிமை (என்)

(ஆதி-வ-ம். ஆ ஆ தனயா வெகுகாலமா எங்களுக்கு சேர்ந்த விபத்தை யென்ன சொல்லப் போகிறேன் பார் இச் சாமவாபுரிக் கிறைவனுகிய மோகனுக்கு மகாராஜ னுனவன் தன்புத்திரியாகிய சாரசிங்கனியை யாருக்காவது கலியாணஞ் செய்து கொடுத்தால் பட்டாபிஷேகஞ் செய்து வைக்கும்படி மந்திரிக்குச் சொல்லி நீண்டகாலமாகியா விருந்துவிட்டான் அப்போதே மந்திரி ராஜகுமாரர்களை யெல்லாம் வரவழைத்து அந்தச் சாரசுவிக்கு கல்யாணஞ் செய்து ராஜ்யபரி பாலனை யமைக்க கால காலமாக பார்த்தாலும் மாப்பிள்ளை பிரதமாய்ப் போகவே மீளக்க வழக்கமாயிருந்தது இந்த விசித்திரத்தைக் கேள்விப்பட்ட மற்ற ராஜாக்கள் விவாகத்திற்கு சம்மதியாமல் விலகிக்கொண்டார்கள் அதனாலிந்த ராஜ்யத்தைப் பட்டாபிஷேகஞ் செய்து செங்கோல் நடத்த மார்க்கமில்லாதே போயிற்று அப்பால மந்திரியானவன் இவ்வூரிலுள்ள ஆளுக்கொருநாள் ஒவ்வொரு மாப்பிள்ளை யனுப்பவேணுமென்றும் இல்லாவிட்டால் பிரசாசேதஞ் செய்யப்படுமென்றும் அப்படியனுப்பப் பட்ட விருவருக்கும் யாவரும் யாகல்யாணஞ் செய்து பதிக்கையாகக் கொடுப்பதற்கு மணநாளைப் பிரைத்திருக்கிறபோ அவனுக்கு இந்த ராஜ்யத்தைப் பட்டாபிஷேகஞ் செய்கிறதென்றும் கட்டுப்பாடு உத்திரவு செய்த பிரகாரம் இதுவரை பலாக ஆத்துக் காரர்கள்

பிள்ளைகளை நமனுக்குப் பலிகொடுத்துக்கொண்டு வந்தார்கள் இன்றைக்கு என்னுடைத்துமுறை யென்று சேவகர் வந்து எச்சரித்துவிட்டுப் போகிறார்கள் நான் ஒருபிள்ளைப் பெற்று அருமையாய் வளர்த்திருந்தேனே அவனை யிரைகொடுத்துவிட்டு என்னசெய்கிற தென்று மனவியாகூலத்தால் அழுதுகொண் டிருந்தேனே யன்றி வேறே விசேஷ மில்லையப்பா.

சதாரம்சொல்-தரு.

அரசர்களிந்த அநீதிசெய்தால அருமோமன்று
என்றபட்டாமாநத்தருவின்வர்ணமெட்டு
இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அட்டா இந்த ஆபத்தும்அந்த
அரன்செயலம்மா (அட்டா)
ஆகினும்நானே அவ்விடந்தானே
அகலச்செய்வேனே (அட்டா)
உன்மகன்பேரை உண்மையாய்கேளே
ஓதுவாயம்மா (அட்டா)

(சதா-வ-ம்.) ஆ ஆ அம்மா உங்களுக் கிவ்விதத்துன்பம்நேர்ந்ததாலது சிவன்செயலேயன்றி வேறில்லை ஆகினும் அவ்விடமானது நீங்குதற்கு யானொருதந்திரஞ் செய்கிறேன் தங்களுடைய புத்திரனுடைய நாமதேயத்தைச் சொல்லுங்களம்மா.

(ஆதி-வ-ம.) இவன்பெயர் ஜோதிமுத்தையனென்று சொல்வார்களப்பா.

சதாரம் சொல்-தரு.

அன்னையேநானுன்னைநம்பினேனென கருள்புரிகுவாய்
என்றகீர்த்தனையின்வர்ணமெட்டு
இராகம்-கமாஸ் - தாளம் - ரூபகம்
பல்லவி.

மைந்தனுக்காகநான்சென்று
வருகிறேன்விடைதருகுவாய்
அநுபல்லவி.

சிந்தையினிமேல் கொஞ்சமேனும்
இடமுடன்வாழ்ந்துவருகுவாய் (மைந்)

(சதா-வ-ம்.) ஆ ஆதாயே தாங்கள் வியாகூலப் படவேண்டாம கங்காகுமாரனுக்குப் பிலாக்கயான் சென்றுவருகின்றேன் விடைதாருங்களம்மா.

(ஆதி-வ-ம்.) ஆ ஆகண்மணி இதுதானுசக்கிரம்பர் நீயோ [illegible]னுவும் உயிரை வெறுக்க் கொப்படைக்கத்தானேவேணும் ஆசையால் உன்னைப்பார்த்தால் ராஜகுமாரனைப்போலேயிருக்கு என்னைப்போனாலும் போவிட்டுப்போரது நீ போகவேண்டாமப்பா.

(சதா-வ-ம்.) ஆ ஆ அம்மா என்னைக்கிருந்தாலும் இப்பது விசுவயமாகத்தா னேற்பட்டிருக்கின்றது ஆகிலும் எனதுசாதகத்தில் ஆறுவயதுவரை ஜீவகனுயிருப்பதாக ஜோதிடசாஸ்திரிகள் கணிதஞ்செய்திருப்பதால் யானிப்போதிறக்துவிடமாட்டேனென்ற தைரியம் எனக்கிருக்கின்றதானதால் தாங்கள் வியாகூலப்படாமல் விடைதாருங்களம்மா.

(ஆதி-வ-ம்.) அப்படியா அனுப் போய்விட்டுவா கண்மணி.

சதாரம் சாமளாபுரி மந்திரிசபைக்குவந்தது சொல்-தரு

மாபோனதுனன் தேமானதுனன் மடமைகாறுன் குரிவேகானன்

வாயுவிலேஸ்க்கு வேனே யனே தேனே

எ[illegible]டாரமாத்துருவின்வர்ணமெட்டு

இராகம்-கமாஸ்-ஏகதாளம்

பல்லவி.

மந்திரியானே மறையோன்றனே
மதிமுகமுள்ள மனங்கொண்டதாமோ

அநுபல்லவி.

எந்தன்முறையீன்றதிக்கட்டீக்குதான்வந்தேனே
வேண்டலசெய்வீர் (மந்திரி)

(சதா-வ-ம்.) [illegible]தான் யான் இவ்வூரில் அன்னசத்திரம் வைத்திருக்கும் புருஷப்பமரன்மகன் என்பெயர் ஜோதிமுத்தன் யான் ஏதோராஜபுத்திரியை மணம்புரிவதற்கு என்வீட்டுமுறை தேடிப்பட்டிருக்குதால் வருமபடி யாக்குபித்திருந்தீராம் அதற்காக வந்திருக்கின்றேனை காரியத்தை [illegible] செய்யுஞ் சேர்ப்பீர்.

(மக-வ-ம்.) அப்படியா வெகுசந்தோஷமாயிற்று நல்லது * அடாசேவகா இவரையழைத்துக்கொண்டுபோய்ச் சரசவிலாவதி யிருக்கும் பள்ளியறைக்குள்விடுத்து நித்யவழக்கப்போற் காலையி லடக்கவேண்டிய காரியங்களுக்குரிய வேலைக்காரர்களும் எச்சரித்து வருவாயாக.

(சேவ-வ-ம்.) செப்பியபடியே யிப்போது செய்கின்றேனப்ர பு * மறைக்குலக்கொழுந்தே அறைக்குவாருங்கள் செல்வோம்.

(சதா-வ-ம்.) இதோவருகின்றேன்.

சதாரம்-சரசவிலாவதியுடன் சயனித்துக்கொண்டு விழித்திருக்கும்போது நித்திரைசெய்தசரசவிலாவதியின் சர்ப்பகாசியிலிருந்து சர்ப்பம்வரக்கண்டுசொல்-தரு

சரியெவவரே ஸ்ரீஜானகினி-சரியெவ்வரே

என்றகருத்திகையின் வர்ணமெட்டு

இராகம்-ஸ்ரீரஞ்சனி-தாளம்-ஆதி

பல்லவி.

என்னகாரணம் சுசனேயிதுவும்
என்னகாரணம்

அநுபல்லவி.

கன்னிகையின்காசி
பன்னகமொன்று
தன்னிலவாவெளிசிப்
பின்னிசிறுகின்று (என்)

காய்கனையெல்லாம்
நியாமபுமிதே
மாயமாக்கொல்லும்
தேறிப்பணிப்போதே (என்)

(சதா-வ-ம்.) ஆ ஆ ஜெகதீசா என்னுச்சர்யமா யிருக்கின்றது யான்மந்திரியினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சேவகனுடன் வந்து இச்சரசவிலாவதியைச் சந்தித்து இவளுக்கு வேடிக்கையான கதைகளைப்புகட்டி நித்திரையுண்டாக்கிவைத்து இவளாலிறக்குங்காரண மெய்யாவெனப் பரிக்ஷிக்கும்பொருட்டு யான் விழித்துக்கொண்டிருந்தேன் இப்போ இந்த மங்கையின் நாசிவழியாக ஏதோவோர் சர்ப்பமானது சீறிக்கொண்டுவருகின்றது இதையோ விக்கும்விஷயத்தில் இதற்குமுன் னிவளைக் கலியாணஞ்செய்த புருஷர்

தானேக்கொன்ற கமனுனது இந்தச்சர்ப்பந்தான்போ லிருக்கின்றதே நல்லது இக்கொடியபாம்பை யிக்கட்கத்தால் சம்மரித்துவிடுகின்றேனிப்போது ஆ ஆ என்னவிந்தையாயிருக்கின்றது யாேனதோ சர்ப்பமென்றெண்ணி வாளால்வெட்டினவுடனே சர்ப்பரூபமாறி அதிசுகந்தரமான ஓர்மனிதரூபமெடுத்து நிற்கின்றான் இவன்யாவனோ தெரியவில்லையே நல்லது விசாரிக்கின்றே னிப்போது.

சதாரம்-சொல்-தரு.
சுருக்கினில்வார்த்தோங்கும் ஓ வகாம்பரியே
என்றதிர்த்தவையின்வர்ணமெட்டு.
இராகம்-பியாரு-தாளம்-ஆதி
பல்லவி
சர்ப்பமாயிருந்து மனிதனுனதரியாதயோதையா
அநுபல்லவி
உபா-துற்பலத்தை யினறுக்கிருத் செப்புவதேதன்றுவாழும்
ஊரும்பேர் பேருக்வர லாறுஞ்சொல்லுமே (சர்ப்ப)

(சதா-வ-ம்.) ஆ ஆ சர்ப்பமாயிருந்து மனிதரூபங் கொண்ட சுந்தரபுருஷா காமபாவம் வசிக்கும் நகரமெது தமது நாமதேயம் யாது இம்மகனியிைது நாசியிற் சர்ப்பமாயிருந்த காரணமென்ன யான்வெட்டினவுடனேயிவ்வுருக்கொண்ட பிரமேது அத்தவரலாற்றைச் சந்துஷ்டியாகச் சாற்றவேண்டும்.

சர்ப்பரூபமா யிருந்து மனிதரூப மடைந்த
விரதரனென்னும் கந்தருவன் சொல் - தரு
மோராஜநாயகியீரேமைத்தா காயகியே
என்ற இரீத்தவ்தராணியின் வர்ணமெட்டு.
இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாபு.
பல்லவி.
நாமம்மா கந்தருவன் நாமம்மா கந்தருவன் நான்
அநுபல்லவி.
வானுலகந் தன்னில் நாமம்மா கந்தருவன் (நாமம்மா)
சரணம்.
இந்திரன்சாபத்தால்நாமே பிங்கெதிக்காளாகினேனே
உந்தனுலேதிர உத்ரவுபெற்றேனே (நாமம்மா)

(விரதரன்சொல் வசனம்) ஆ ஆ மாதே யானோகந்தருவன் யானிருப்பது தெய்வலோகம். என்பெயர் விரதரன் யான் முன்னொருநாள் இந்திரன் பூஜைக்காய்ப் புஷ்பமெடுக்கச் சென்றவிடத்திற் கொஞ்சங் காலகரணைமாய்ப் பூஜைக் கிடையூறுநேரிட்டமையால் இந்திரன் என்மீது கோபமுற்றுப் பூவுலகிலுற்ற சாமளாபுரிக்கிறையவனுகிய மோகனுங்கத மகாராஜனுக்குப் புதல்வியான சரசலீலாவதிக கேற்பட்டிருக்கின்ற சர்ப்பநாசியிற் பாம்பாயிருந்து அவளுக்கேற்படும் நாயகன்மார்களைக் கடித்துக்கொன்று கொண்டு காலங்கழிக்கக் கடவையென்று சாபமிட்டு எனது சிறகையு மறுத்துக்கொண்டனர். இதற்கெப்போது விமோசனமென்று வேண்டினேன். அதற்காகச் சந்தியபுரியில் வைசியகுலத்திலுதித்தச் சதாரமென்று நாமதேயங்கொண்ட பெண்ணுனவள் புருஷரூபமெடுத்து அச்சரசலீலாவதியை மணம்புரியவருவாள். அக்காலத்தில் நீ யவள்நேத்ரத்திற்குப் புலப்படுவாய். அப்போ துன்னைத் துண்டாகவெட்டுவாள். அவ்வெட்டுப்பட்டவுடனே யுனக்கு ஸ்வயரூபங் கிடைக்கும். பின்பேரிற் றெய்வலோகத்திற்கு வந்தால் முன்போல சிறகு முளைக்குமென்று விமோசனந் சொன்னார். யானந்தப்பிரகாரமே இதுகாலபரியந்தம் இந்த மங்கையினது சர்ப்பநாசியிற் பாம்பாயிருந்து மணம்புரிந்த நாயகன்மார்களை யெல்லாங் கடித்துக் காலனுக் கிரைகொடுத்துக்கொண்டிருந்தேன். ஏதோ இப்போதெனக் கேற்பட்ட நல்வேளையினிமித்தம் நீயும் பார்த்து என்னைத் துண்டித்தனை. என் சாபமும் விமோசனமாயிற்று. ஆதலால் இப்போது யான் றெய்வலோகத்திற்குச் செல்ல விடைதாமாதே.

(சதா-வ-ம்.) அப்படியா நல்லது சந்துஷ்டியாய்ச்சென்றுவாரும். இதோ வந்தனம் புரிகின்றேன் பிரபு.

(விர-வ-ம்) கல்யாண பெண்ணே சுகஜீவியாக வாழக்கடவை.

(சதாரம் மந்திராலோசனை.)

(சதா வ-ம்.) ஆ ஆ இப்போது நடந்ததானது தேவரகஸ்யமாயிருப்பதால் நாம் வெளியிற் சொல்லக்கூடாது. நல்லது இதோ வைகறையாகிவிட்டது. நாமிறந்திருப்பதாகவே மந்த்ரி முதலானவர்களெல்லாம் எண்ணிக்கொண்டிருப்பார்கள் ஆதலால் அப்போ

க்கொத்த சந்தேகந்தீரும்பொருட்டுக் கொலுச்சபைக்குச்சென்று மந்திரியிடத்திற் சமயாசித்து அதன்பின்னு லாகவேண்டிய கார்யாதிகளுக்கு வேண்டியபரிதுவக் தேடிக்கொள்வோம்.

(பாடைகட்டுந் தொழிலாளிகள் சம்பாஷணை.)

(மூத்தவன் சொல்வசனம்.) அடா தம்பி இப்போது விடியற்காலமாகிவிட்டது. நமது ராஜபுத்ரிக்கு நாயகனுகவந்த பார்ப்பான் இப்போது ப்ரேதமாயிருக்கக்கூடும். ஆதலால் இதோ மூங்கில்களிருக்கின்றபடியால் அவைகளையெடுத்து வழக்கம்போற்பாடைகட்டி வைத்துவிட்டால் நம்முடையவேலை தீர்ந்துபோயவிடுமல்லவோ.

(இளையவன் சொல்வசனம்.) அப்படியே செய்வோமண்ணே.

(மூத்-வ-ம்.) ஆனுல மூங்கில்களை வெட்டிப் பிளந்துபோடு நான் பாடைகட்டுகிறேன்.

(இளை-வ-ம்.) அப்படியே செய்கின்றேன்.

(சதாரம் பாடைகட்டுகின்ற தொழிலாளிகளைக்கண்டு

சந்தேகித்து வினவுந் தரு.

வாடியிங்கு நீவாடி நான் வந்தனுக்களைத்தேடி.

என்ற ட்...த்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-சகா...தாளம்-ஆதி.

கண்ணி.

ஏதடா நடத்தி விப்பிடைநீக்க
ளிசைந்துகட்டுகின்றீர்கள் பாடை
சேதியையின்னதென் றிப்போதுநான்
தெரிந்திடும்படியதா யோதும்
சாதுகள் வருகிறவீதி நகர்ஜ
ஜனங்கள்கண்டாற்பெரும் பீதி. (ஏத)

சதா-வ-ம்.) அடா தொழிலாளிகாள் நீங்கள் விடியற்காலமவந்து இவ்வீதியிற் பிடைபொருந்திய பாடை கட்டுகின்றீர்களே ஜனங்கள் கண்டாற் பயங்கரப்படுவார்களல்லவோ இம்மாளிகையில் ஒருவரு மிறக்காதிருக்க நீங்களிங்கு வந்திவ்வித வேலையை நடத்தத் துணிந்த காரணம் யாது.

(தொழிலாளிகள் சொலவசனம்.) ஆ ஆ ப்ரபு ராஜபுத்ரிக்கு ஒவ்வொரு தினமும் ஏற்படும் நாயகனமார்கள் விடிவதற்குள்ளாக மரணமடைந்துவிடுவது வழக்கம். அதனு லவர்களையெடுத்துக் கொண்டு போவதற்கு விடியற்காலமே பாடைகட்டுகின்ற வழக்கப்படி தாங்களிறந்திருப்பீர்களென்பதா யுத்தேசித்து இப்போ இந்தப் பாடைகட்ட ஆரம்பித்தோம். ஏதோ தெய்வாநுகூலத்தால் தாங்கள் பிழைத்தவராக இருக்கின்றீர்கள்போ லிருக்கின்றதே ப்ரபு.

(சதா-வ-ம்.) சை சை துஷ்டர்காள என்னவார்த்தை பாஷிக்கின்றீர்கள். இப்பாடையையெடுத்து அப்பா லெறிந்துவிடுங்கள் மூர்க்கர்காள்.

(தொழி-வ-ம்.) அப்படியேயெறிந்துவிடுகின்றோம் ப்ரபு.

(சதாரம் கொலுச்சபைக்கு வருதல்.)

(சதா-வ-ம்.) இ(வ)லாயுற்ற சேவகன் யாவன்.

(சேவ-வ-ம்.) ஆசாமணியே ஆஜராயிருக்கிறேன்.

(சதா-வ-ம்.) இந்த ராஜாங்க மந்த்ரியை யழைத்துவருவாயாக.

(சேவ-வ-ம்.) செப்பியபடியே இப்பவே யழைத்துவருகின்றேன் ப்ரபு.

(மந்த்ரி கொலுச்சபைக்கு வருதல்.)

(மந்-வ-ம்.) பதிதனையாள விதியதுபெற்ற புதியமன்னவனே மந்... தெண்டம் புரிகின்றேன்.

(சதா-வ-ம்.) கல்யாண் ப்ரதான் சிரேஷ்டா.

(மந்திரிசொல் தரு.)

கருணிருந்த நிதிசமயமையா கிரகஷகா கதிநிர்ப்பமையா.

என்ற க்ருத்திகையின் வர்ணமெட்டு.

இராகம் நாகத்வனி தாளம்-ஆதி.

பல்லவி.

இதுவரைமாதை-மதுவைசெய்தோர்கள்
இறந்ததல்லால் இருந்ததில்லையே. (இது)

அநுபல்லவி.

விதியாலுயிரும் மீண்டுவந்தீரே
பதியாசனப் பட்டங்கொள்ளுவீரே. (இது)

(மங்-வ-ம.) ஆ ஆ மகராஜ் இதுகாளவரை யெங்கள் ராஜ புத்திரியை மணக்கொண்ட ராயசரில் ஒருவரேனும பிழைத்ததே யில்லை. அங்ஙனமிருக்கத் தாங்களோதோ தெய்வானுகூலதத் தால் விதியின் பயனுலும் மறுஜென்ம மெடுத்ததுபோல உயிர்மீ ண்டு வந்ததானது யாங்கள் செய்த பூஜாபலமோ அல்லது இந் நகரத்திற் கேட்பட்ட நல்லகாலமோ தெரியவில்லை. நல்லது எங்களரசன இறக்குங்காலத்தில் வக்கனித்தபடி தாங்கள் பிழை த்துவந்தமையால் இப்பொழுதே இந்த ராஜ்யத்தை யரசாளும பொருட்டு மகுடாபிஷேகம்பெற்றுக்கொள்ளுங்கள் மகராஜ்.

(சதா-வ-ம.) அப்படியே பெற்றுக்கொள்கின்றேன்.

(மங்-வ-ம.) மகராஜ இந்தச் சிம்மாதனத்தில் வீற்றிருங்கள்.

(சதா-வ-ம.) அப்படியே வீற்றிருக்கின்றேன்.

(மங்-வ-ம.) இந்த மகுடத்தைத் தரித்துக்கொள்ளுங்கள்.

(சதா-வ-ம.) அப்படியே தரித்துக்கொள்ளுகின்றேன்.

(மங்-வ-ம.) இந்தச் செங்கோலைப் பிடித்துக்கொள்ளுங்கள்.

(சதா-வ-ம.) அப்படியே பிடித்துக்கொள்கின்றேன்.

மகுடாபிஷேகத் தரு.

மங்கையருக்கெல்லாஞ் சிலாக்யம் - துங்கமிகுந்த

செங்கையாலணைய யோக்யம்.

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம-ஆதி.

பல்லவி.

மகுடாபிஷேகங் கொண்டானே - சதாரமென்னும்

வைசியகுல மின்னுமோ.

சரணம்.

சந்தரனெனும வேதச சந்திரனையுமன்ம

னைந்து மதனனிடம வந்துசிறைதனிலே (யிருந்து)

இருந்துகாலனை யதிக்துவிரைவினில்

மறைந்துமறுபடி புரந்தரனுடனே

மந்திரிகைமுந்தனை யுந்துயர்கொண்டோம்

தைந்தருகுருவடி தந்திரமுஞ்செய்து

ஒலியசரச்லி லாவதிகாரிக்குக்

காவலனுகவே மேவியவனுக்கு (மகுடா)

(மங்-வ-ம.) ஆ ஆ மகராஜ் தாங்களிப்போ திந்த ராஜ்யத் திற்குகந்த மகுடாபிஷேகம் பெற்றுக்கொண்டமை யால் இனிமேல் மனமவைத்துக் கனமாய்த் தேசாதிகாரம் நடாத திவரவேண்டும் மகராஜ்.

(சதா-வ-ம.) ஹேப்ரதான அதுவிஷயத்தில் எனக்கு விசே ஷமாகச் சொல்லவேண்டுவதில்லை. நல்லது நீர் சித்ரரூபர்களைக் கொண்டு என்போல நான்குபடம் வரையச்செய்து அம்மடங்க ளை நம நகரமனைத்திலுமுற்ற நான்கு தலைவாயிலிலும் கட்டும்படி செய்யும் யானக்குப் புறஞ்சென்று வருகின்றேன்.

(மங்-வ-ம.) அப்படியே செய்கின்றேன் மகராஜ தாங்கள் சென்று வாருங்கள்.

(சதாரம் முதலாவரு சபை.)

(சதா-வ-ம்.) காவலாயுற்ற சேவகன் யாவன்

(சேவ-வ-ம்.) பார்த்திப அடியேன் காத்திருக்கின்றேன்

(சதா-வ-ம.) சிந்தைக்கிசைந்த மந்திரியை யழைத்து வருவாயாக.

(சேவ-வ-ம்.) செப்பியபடியே யிப்பவே யழைத்து வருகின்றேன் மகராஜ்.

(மந்-வ-ம்.) விண்ணவர் புகழும் அண்ணலே மந்திரி வந்தனம் புரிகின்றேனா.

(சதா-வ-ம்.) கல்யாணப்ரதான் கிளேந்தா கேசமாயிந்த ஆசனத் தமரும்.

(மந்-வ-ம்.) சாத்திய படியே வீற்றிருக்கின்றேன்.

(சதாரம் சொல்தரு.)

களவுதனில் கண்டமானே யெப்பசிகாறுவேன்

என்றட்ராமாத் தருவின் வர்ணமெட்டு.

இராகம்-கருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

மடவெழுநெகட்டினீர மந்திரிசொல்லும்

அநுபல்லவி.

தடையிருந்தால் கொடியவ்வேலை

செய்யச்சொலலும். (மட)

(சதா-வ-ம) தேறப்ரதான் யானுமக்காக்ஞாபித்திருந்த பிரகாரம் என்போன்ற படங்கள் வரைவித்து நான்குமலைவாயல்களிலும் கட்டியிருக்கின்றீரா இல்லையா. அப்படிக்கட்டுவதற்கு ஏதாவது தடைப்பட்டிருந்திருக்கும் பக்ஷத்தில் இப்பொழுதே சென்று அவ்வேலையை முடித்துவாரும் ப்ரதான்.

(மந்-வ-ம) ஆ ஆ மகராஜ் தாங்க ளாக்ஞாபித்தவண்ணம் அப்பொழுதே தங்களைப்போல நான்குமடலெழுதி நான்குவாயலிலும் கட்டும்படி செய்திருக்கின்றேன் மகராஜ் அதுவிஷயத்தில் ஜாக்கிரதையாயிருப்பேனு வென்ன.

(சதா-வ-ம்.) அப்படியா யானைதைப்பற்றி யத்யந்த சந்தோஷமடைந்தேன் ப்ரதான்.



மதனமகாராஜன், கள்ளன், புரந்தரன், புத்திமான், கவேதச்சந்திரன் இவ்வைவர்களும சாமளாபுரிக்கு வந்து ஆரமனைவாயலிற் கட்டப்பட்டிருக்கின்ற மடலைக்கண்டு பலவாறு சம்பாஷித்தல்.

(மத-வ-ம்.) ஆ ஆ நோன்பிழைப்பதாகப் பாஷித்துத் தேம்பித் தவிக்கவிட்டுச் சென்ற சதாரம் இங்காவந்துவிட்டனே. ஆ ஆ ஒருதரம் வரலாகாதா.

(கள்ளன்-வ-ம்.) ஆ ஆ தண்ணீர் கொண்டுவரச்சொல்லிக் கண்ணீர்விட்டுக் கதறியழ விட்டுவிட்டுச் சென்ற சதாரம இவ்விடத்திற்கா வந்துவிட்டனே. ஆ ஆ என்னுடைநிரக் கட்டியணையலாகாதா.

(புர-வ-ம்.) ஆ ஆ சரோருகமலர் கொண்டுவரச்சொல்லிச் சரேலென்று சென்றுவிட்ட சதாரம இன்னகரமாவந்து சேர்ந்தனே. ஆ ஆ என் விரகத்தைத் தீர்க்கலாகாதா.

(புத்-வ-ம்.) ஆ ஆ தாமரைமலர் கொண்டுவர க்ஷேமமாய்ப் புகன்று சென்ற சதாரம் இவ்வூருக்காவந்து சேர்ந்தனே. ஆ ஆ யான்கொண்டமையலைத் தவிர்க்கலாகாதா.

(கவே வ-ம்.) ஆ ஆ குதிரை கொண்டுவரச்சொல்லிச் சதிசெய்து சென்ற சதாரம் இப்பதிக்காவந்து சேர்ந்தனே. ஆ ஆ இனியேனும் என்னுடன் வரலாகாதா.

(ஐவர்களின் சப்தத்தையுங் கேட்டுச் சதாரம் ஆலோசிக்குந்தரு.)

விரசமான வார்த்தைவேண்டாம விட்டுவிடடா.

என்ற ட்ராமாப்பதத்தின் வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி

அடடா இவர்கள் யாரோ நம்மை
அழைத்து வாடுரார்.

அநுபல்லவி.

கடைமொழியுங் கனவனுகக்
கருத்திற் றோனுதே.
இடமுடனே தேடிவந்த
சொலாய்க் காணுதே. (அடடா)

(சதா-வ-ம்.) ஆ ஆ என்னவிபரீதம் யாவரோ சிலர்கள் வெளிப்புறத்தில் சதாரம் சதாரமென்று பற்பலவிதமாகப் புலம்பிக்கொண்டிருக்கின்றார்கள். அதிற் கடாசியாக வருந்திக்கொண்டிருந்த சப்தமானது நமது பர்த்தாவுடைய சப்தமாகக் காணப்படுகின்றதே. ஒருவேளை நம்மைத் தேடிக்கொண்டு வந்திருப்பாரோ நல்லது சேவகனை விடுத்து அழைத்துக்கொண்டு வரும்படி செய்தாலுந் பார்ப்போ மிப்போது ✻ அடா சேவகா யாவர்களோ வெளிப்புறத்திற் கூச்சலிட்டுக்கொண்டிருப்பதாகக் காணப்படுவதால் அவர்களை நமது சபைக்குக் கொண்டுவா சீக்கிரம்.

(சேவ-வ-ம்) வெள்ளலே யவர்களைத் தள்ளிக்கொண்டு வருகின்றேன் ✻ யார்காணும் அரமனைவாயலிற் சப்தமிட்டுக்கொண்டிருக்கின்றவர்கள். எங்களரசன் அழைத்துவரச்சொன்னார் வாருங்கள் சீக்கிரம்.

(ஐவர்கள் சொல்வசனம்.) அப்படியே வருகின்றோமையா

(சேவ-வ-ம்.) ஆ ஆ மகராஜ் இவர்கள் தலைவாயலிற் கட்டப்பட்டிருக்கின்ற மடலைப் பார்த்துப் புலம்பிக்கொண்டிருந்தார்கள். இதோ கொண்டுவந்துவிட்டேன் மகராஜ்.

(சதா-வ-ம்.) அப்படியா சேப்பாதான். இவ்வைவர்களையும் உமக்கின்னார்களென்று தெரியவருமா.

(மந்-வ-ம.) எனக்குத் தெரியவராது மகராஜ்.

(சதா-வ-ம.) நல்லது இப்போது தெரியும்படி செய்கின்றேன் ✻ ஆ ஆ ப்ரபு என்னைத் தெரிந்துகொண்டீர்களா.

(சுவே-வ-ம.) எனக்குத் தெரியவில்லையே.

(சதா-வ-ம.) ஆ ஆ ப்ராணநாதா யான் உங்களடியாளாகிய சதாரமல்லவா.

(சுவே-வ-ம.) அப்படியா அடிகண்ணாட்டி

சுவேதச்சந்திரன் சொல்-தரு

வந்தனென்முன் தங்கேனிதோ மந்தகாசமாய்
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு
இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

இங்குவந்தசங்கதியை யென்முன்சொல்லடிநீ
யிங்குவந்தசங்கதியை யென்முன்சொல்லடி.

அநுபல்லவி.

மங்கையர்க்கரசியே மகிழ்தருசரசியே
அங்கெனைவிட்டுவிட்டுக் கங்குலில்வெளிப்பட்டு (இங்கு)

(சுவே-வ-ம்.) அடி ப்ராணசகி பார் குதி... களும் உடுப்புகளும் வாங்கிவரும்படி சொல்லி மயபுரியிலென்னைத் தனிமையாக விட்டுவிட்டு ... ர்த்தராத்திரி வேளையிற் காராக் ரகத்தைவிட்டு வெளிப்பட்டு இங்குவந்திருக்குஞ் சங்கதியும் ஆதுமுதலிதுவரை நடந்திருக்கும் விர்த்தாந்தமும இப்போது நீ புருஷவேஷம்புனைந்து மகுடந்தரித்திருப்பதையும விபரமாகத் தெரிவிப்பாயாக.

(சதா-வ-ம்.) அப்படியே சொல்கின்றேன் இவ்வாசனத்தில் வீற்றிருங்கள்.

(சுவே-வ-ம்.) அப்படியே வீற்றிருக்கின்றேன்.

சதாரம்-நடந்த-விர்த்தாந்தஞ்சொல்லுதல்.

அகவல்.

எனதுபர்த்தாவே யியம்புவேன்கேளீர
மனமகிழ்வுடனே வாசிகள்வாங்கத்
தாங்க ... ற தருணமயான்கொஞ்சம்
தூங்கியே ... துச் சொருகுடனெழுந்து
ஜன்னலின்வழியாய் ஜாடையாய்ப்பார்த்தேன்
அன்னாளினிலே அகவயிரண்டும்
கட்டியிருந்த காரணத்தாலும்
இட்டவோர்மனிதன் இனைத்ததினாலும்
தாங்கவொண்ணாத் தனிப்புலப்படவே
பாங்குளவிந்தப் பார்த்திபன்சிறையை

நயத்துடன்கடக்க நாடுமுன்னாலே
இயம்பியபடின்ன ஏனையின்வழியாய்
இசைவியையத்தேன் இத்திருவடமே
மெய்கொளுமுகிப்பை மிதித்திலகித்தாய்
புருஷனென்றெண்ணிப் பொருமையாய்வரவே
வினாவினிற்றரித்து வேஷமுற்றி
அப்படிநாங்கள் ஆட்கொருவிதமா
ஒப்பியேபொறி வழியினைக்கடந்தே
விருந்தபின்னிவனை விரைவாய்ப்பார்த்துத்
தொடர்ந்துவந்தவனுஞ் சோரனென்றறிந்து
தாகமென்றுரைத்தேன் ஜலமுங்கொணர
வேகமாய்ச்சென்றான் விரைவுடன்யானும்
இந்தக்கள்வன் எதிரேவந்த
கந்தகத்தினாலு காலினைவெட்டி
வனத்தின்மார்க்கமதாய் வாசிமைநடத்தித்
தனித்துநான்செல்லுங் கருணையவனத்தில்
வேட்டைக்குவந்த வேந்தர்சேவகர்கள்
நாட்டிகமாகப் பிடித்தனரென்னை
பார்த்துசொல்கொஞ்சம் பயங்கரமுற்று
வேர்த்துடல்வருந்தி மெலிந்திடும்போது
இருவருமென்மேல் இச்சையுங்கொண்டார்
ஒருவரைவிட்டே ஒருவரைச்சேர்ந்தால்
மனதினில்வருத்தம் வாய்க்குமென்றுரைத்து
கனிதனிலுற்ற தோட்டமதனைக்
கொண்டுவந்தவரைக் கூடுவேனென்றேன்
ரண்டுபேர்களுமாய் கடந்தவர்களுக்கு
அப்பவேநானும் அவர்களைவிடுத்துத்
தப்பியோடித் தனைநகர்வந்தேன்
வந்தவிடத்தில் வயதுபயித்தச்
சொந்தமாமாதி சுப்பானவீட்டில்
ஆதரவுடனே அன்னமும்புசித்து
உறவுகொண்டங்கே உற்றானையானே
அந்நேரத்தில் அங்குசேவகனும்
வந்துமன்னவனின் மகட்கொருபுருஷன்
இன்றுதேடியனுப்பென் றிதமுடன்சொல்லுன்
என்றனைவந்த நாரிசைபெண்ணென
சொல்லியேயனுப்பிச் சுயம்வரமுறைத்துச
செல்வமேயுனக்குத் தீக்குறுமுண்டாச்சே
மன்னவன்மகளால் மதித்திந்நகரமும்
தன்னிடமென்று கடிதுடித்ததுகாண்

விவரமேதென்று வினவினேன்மங்கை
மலைகொண்டவனூர்க் குடியாவன்மகளைத்
திருமணம்புரிவோர் செத்திடும்வழக்கம்
பெருகிட்டாலும் பேணுவதில்லை
அவ்விசயத்தை அனைமக்களுமுணர்ந்து
இவ்வருப்பதியில் இருப்பவரெல்லாம்
வீட்டினுக்கோர் ஆள்விதித்திடச்சொன்னான்
நாட்டினிலுள்ளோர் நற்புதல்வர்களை
மனைக்கிரையாய் அனுப்புவார்கள்
ராமனைப்போல சுதன்றனைவளர்த்தேன்
இப்பொன்முறையாய் இருப்பதினாலே
கொன்றிடமகனைக் கொடுத்திடவேண்டும்
வந்ததென்றனை மயங்கியேசொன்னாள்
அந்தணமாதின் அயர்வினைப்பார்த்து
அந்தவேலைக்கு யான்பதிலாக
வந்துமன்னவனின் மகளிடஞ்சென்று
தந்திரமான சமர்த்துடன்ஜெயித்து.
இந்தராஜ்யத்தை ஏழைகைக்கொண்டேன்
ஆவல்சேர்கணவா அற்புதம்பலவும்
சாவகாசமாய்ச் சாற்றுவேன்பாரே.

(அமே-வ-ம்.) ஆஆ ப்ராணகாந்த இவ்வளவு காரியங்களெல்லாம் நடந்திருக்கின்றனவா. ஆஆ உன்போன்ற சமர்த்துடைய பெண்களும் பதிவிரதாசிரோமணியும் இவ்வுலகத்தில் யாவரிருக்கின்றார்கள் யானதைப்பற்றி யத்யந்தசந்தோஷமடைந்தேன் அல்லது, அப்படியே சாவகாசமாகப் பேசிக்கொள்ளலாம்.

(சதா-வ-ம்.) ஓப்ராண விபரங்களெல்லாந் தெரிந்து கொண்டீராவென்ன.

(மங்-வ-ம்.) தெரிந்துகொண்டேன் மாதே.

சதாரம் மதனமகாராஜன் புரந்தரன் முதலியோன்
இம்மூவருக்கும் புத்திகூறியனுப்பிவிட்டுக்
கள்வனைச் சிறையி லடைத்தல்.

(சதா-வ-ம்.) ஓ மகாபுரிமன்னா யாரும் (மன்னவர்க்கழகு செங்கோன்முறைமை) யென்று நீதிகேதிகள் முறையிடுகின்றது அந்தச் செங்கோன்முறைமையை லேசாகமதித்துக்கொள்ள வேண்டாம் எப்படியெனில் அரசனானவன் தனதாரா பிறர்தாரபுத்ர மித்ரதனதை யனுஷ்டித்துத் தன்னுயிர்போல மன்னுயிர்களை யாதரித்து துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனஞ்செய்து ஆயிலொருகடன்

மை வாங்கினுக்கு மட்டும் செங்கோலரசனென்று சொல்லப்படுவான் அங்ஙனமிருக்க நீர்கிருந்தேயும் முன்பின் யோசனையின்றிப் பாதாரகமனஞ்செய்யத் துணிந்தானது உமதுகீர்த்திக்கும் மனுநீதிக்கும் விரோதமல்லவோ ஏதோ நீர்செய்த குற்றத்திற்குத் தக்க சிக்ஷைபுரியவேண்டுவது முக்கியமானகடமையாயிருந்தும் அதைமன்னித்திருக்கின்றேனாதலின் (கெட்டகட்டத்தைவிட்டுவிடு) என்பதுபோல இனிமேலிவ்விதமான காரியங்களிற் பிரவேசியாமல் உமது ராஜ்யத்திற்குச்சென்று நீதியை யனுசரித்து ராஜ்யபரிபாலனஞ் செய்துவரவேண்டும் தெரியுமா,

(மத-வ-ம்.) ஆஆ மாதரசி இப்போது புத்திவந்துவிட்டது இனிமேலப்படியே நடந்துகொள்கின்றேன் பெருமாட்டி.

(சதா-வ-ம்.) ஆனால்சென்றுவாரும்

(மத-வ-ம்.) அப்படியே சென்றுவருகின்றேன்.

(சதா-வ-ம்) மஹாராஜபுதல்வர்காள் பாருங்கள்.

வெண்பா.

இப்புதல்வனைப்பெறுதற் கென்னோற்றான்றந்தையென்று
செப்புதற்குக்கவினைசெய்.

என்று சொல்லப்பட்டிருக்கின்றது அதாவது சற்குணமுள்ள இக்கப்பிள்ளையைப்பெறுதற்கு இவன்றகப்பன் என்னமாதவஞ் செய்தானோவென்று உலகத்தார் புகழ்ந்துகொண்டாடும்படியாக நன்னடக்கையாக நடந்துகொள்ளவேண்டுவது பிள்ளைகள் கடமை அங்ஙனமிருக்க நீங்களினிமேல் ராஜாங்கத்தை யாளக்கூடிய யோக்யதையுடைய ராஜகுமாரர்களாயிருந்தும் (இளங்கன்று பயமறியாது) என்பதுபோல பால்யதிசையடைந்த மூர்க்கத்தால் நீதியைக் கடந்து இப்பக்காரியத்தில் இச்சைவைத்துக் கெட்டலையத்தலைப்பட்டீர்கள் குற்றத்திற்காகச் சிக்ஷைபுரியவேண்டுவது முக்யகடமையாயிருப்பினும் அதை மன்னித்திருக்கின்றேனாதலின் இனிமேலாவது கிரமப்பிரகாரம் நடந்துவரவேண்டும் தெரியுமா.

(புர-புத்-வ-ம்.) ஆஆ அம்மணி இப்போதெங்களுக் கறிவு வந்துவிட்டது இனிமேலப்படியே நடந்துகொள்கின்றோம் அம்மா.

(சதா-வ-ம்.) ஆனால் சென்றுவாருங்கள்.

(புர-புத்-வ-ம்.) அப்படியே சென்றுவருகின்றோம்.

(சதா-வ-ம) அடா கள்வா நீ இதுவரைக்கும் பயமின்றி என்னைப் பார்த்தாவைப்போல பாவனைகாட்டி என்னையழைத்துக்கொண்டுசென்றனை அப்படிச்செய்ததில் யாதொருதீங்கு நேரிடாவி

ட்டாலும் நீ சோரனாயிருப்பதால் உன்னைச் சிக்ஷைபுரியாது விட்டுவிடுவது மனுநீதிக்குவிரோதமாதலின் இப்போதுனக்குச் சொல்கின்றேன் ஒருதீர்ப்பு * அடா சேவகா இக்கள்வனைப் பிடித்துக்கொண்டுபோய் நீ சிறைச்சாலையி லடைத்துவருவாயாக.

(சேவ-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் மாதரசி * அடா அப்புறம் வாடா செல்வோம்

கள்ளன்புலம்பல்-தரு

இன்னுமாதன்வரக்காணேனே என்னசெய்வேன்தோணகானே

என்ற மட்டாமாத்தருவின் வர்ணமெட்டு

இராகம்-கர்பி தாளம்-சாபு.

பல்லவி.

என்னபாபம்செய்தேனோனே யிக்கெதிக்காளாகினேனே

அநுபல்லவி.

கன்னிகையென்னைச் சின்னம்பேசிக் கண்டனை மறவித்தனளோ
இக்கெதிக்காளாகிறே (என்)

சரணம்.

இப்படி வருமென்றுநானே சொற்பனமதிலுமெண்ணே
தப்பிக்கவழியில்லையே எப்படியினிப்பிழைப்பேன்
இக்கெதிக்காளாகினேனே (என்)

(கள்ளன் வ-ம்.) ஆஆ ஜெகதீசா யானென்னபாபம் செய்தேனோ தெரியவில்லையே ஆஆ என்னைப்போலக் காமங்கொண்டு வந்தவர்களெல்லாந் தப்பித்துக்கொண்டு போய்விட்டார்களே யான் திருடனென்றுதேசித்து இந்த மங்கையானவள் என்னைச்சிறையிலடைக்கும்படி செய்துவிட்டனளே ஆஆ எனக்கிப்படி வருமென்று சொற்பனங்கூடக் காணவில்லையே இனிமேலெவ்விதந் தப்பித்துப் பிழைக்கப்போகின்றேன்.

(சேவ-வ-ம்.) அடா மூர்க்கா என்ன பிதற்றுகின்றாய் நடந்துவா சீக்கிரம்.

(கள்ளன்-வ-ம்.) ஐயா என்னையடிக்கவேண்டாம் இதோ வருகின்றேன்.



சுவேதச்சக்கிரனுக்குப்

பட்டாபிஷேகஞ் செய்தல்.

—:※:—

(சதா-வ-ம்.) ஆஆ ப்ராணநாத் ஒருநல்ல சுபதினத்தில் இவ் வைம்பத்தைந்து தேசமன்னர்களையும் தங்கள் மதாபிப்ராயப்படியே வரவழைத்து அவர்கள் முன்னிலையில் இப்போதென்கையி லொப்பிக்கப்பட்டிருக்கின்ற இவ்வூராசன் மகனாகிய சாசவேணவதி யைத்தங்களுக்கு இரண்டாந்தாரமாகப் பாணிக்ரகணஞ் செய்து வைக்கவேண்டுமென்ற ஆவலுள்ளவளாயிருக்கின்றேன்ப்ரபு. தங் களபிப்பிராய மெவ்வாறனது.

(சுவே-வ-ம்.) ஆஆ ப்ராணசகி நீயே விவாகஞ்செய்துவைக் கக் கருதியிருக்கும்போது யான்வேண்டாமென்று சொல்லப்போ கின்றேனு அப்படியே செய்துகொள்கின்றேன் கண்மணி.

(சதா-வ-ம்.) ஆனலிப்பொழுது பட்டாபிஷேகத்தைப் பெ ற்றுக்கொள்ளுங்கள் ப்ராணநாத்

(சுவே-வ-ம்.) அப்படியே பெற்றுக்கொள்கின்றேன் ப்ராண சகி.

(சதா-வ-ம்.) அந்தக் காவிவஸ்திரங்களை யெடுத்தெறிந்துவி ட்டு இந்த பட்டுகளை யணிந்துகொள்ளுங்கள்.

(சுவே-வ-ம்.) அப்படியே யணிந்துகொள்கின்றேன்.

(சதா-வ-ம்.) இந்தமகுடத்தைத் தரித்துக்கொள்ளுங்கள்.

(சுவே-வ-ம்) அப்படியே தரித்துக்கொள்கின்றேன்.

(சதா-வ-ம்) இந்தச்செங்கோலைப் பிடித்துக் கொள்ளுங்கள்.

(சுவே-வ-ம்.) அப்படியே பிடித்துக்கொள்கின்றேன்.

பட்டாபிஷேகத்-தரு.

வாராயோ ராராயோகண்ணு வைகுந்தமன்னு

என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாபு

பல்லவி.

பட்டாபிஷேகங்கொண்டானே . . . சக்ரன்

பட்டாபிஷேகங்கொண்டானே.

அநுபல்லவி.

அட்டாலதேசத்திலவாழ் அரசர்கள்புகழ்ப்போற்ற

கட்டார்குங்களைக்காப்பாற்றச் சுவேதச்சக்ரன் (பட்)

(சதா-வ-ம்.) ஆஆ ப்ராணநாத் இப்போது தங்களுக்குப் ப ட்டாபிஷேகஞ்செய்துவைத்துவிட்டேனாதலின் இனிமேல் மனு நீதி தவறாமற் செங்கோற்செலுத்திவரவேண்டும் ப்ரபு.

(சுவே-வ-ம்.) அப்படியே செலுத்திவருகின்றேன்மானே.

(சதா-வ-ம்) ஹே ப்ரதான் நீயெப்பொழுதும் இவருடனிரு ந்து சமயோசிதமான மந்த்ராலோசனை சொல்லிவரவேண்டும் ப் ரதான்.

(மந்-வ-ம்) அப்படியே சொல்லிவருகின்றேனம்மா.

(சதா-வ-ம்) ஆஆ ப்ராணநாத் யானந்தப்புரஞ்சென்றுவ ருகின்றேன்.

(சுவே-வ-ம்.) அப்படியே சென்றுவாப் ராணசகி.

—❦—

மங்களம்

செவியாசாலுனே

என்றஜாவளியின் வர்ணமெட்டு.

இராகம் - வசந்தம் - தாளம் - சாபு.

பல்லவி.

மங்களமங்களம் ஜெயமங்களமிலகு
மங்கள மங்களம.

அநுபல்லவி.

கங்கையணிந்தசிவ சங்கரன்பார்வதிக்கும்
துங்கவெண்டாமரையிற் றங்கும்பாரதிக்கும் (மங்)
சத்தியபுரியாண்ட சாரங்க[illegible]க்கும்
புத்ரன்கவேதச்சந்த்ர பூபசொஸ்[illegible] (மங்)
மதிலயரிகர்வதன மங்கைசதாரந்துக்கும்
ரதிகேர்வீலாசதி ரண்டாசந்தாரத்துக்கும (மங்)
தரணிபுகழுற்ற சக்ரவர்த்தினியார்க்கும
பரிவுடனிதையென்றும் பாடிகேட்பேர்க்கும் (மங்)
விண்புவிபுகழ்கவி வே-முத்தனாசாரிக்கும்
அன்புடனேபடித்த ஆச்சாரிசாரிக்கும் (மங்)

வே - முத்தனாசாரியாரவர்களது.

சதாரம்நாடகம்

முற்றிற்று.

இப்புத்தகத்தை பலகாரணங்களால் விரைவாயெழுதி முடிந்தமையால் (அவசரக்கோலம் அள்ளித்தெளி) யென்பதுபோல சிலவிஷயங்கள் ஸ்தானபேதமாயமைந்திருப்பதை மறுபதிப்பிற் றிருத்திப்பதிப்பிக்கப்படும்.

இங்ஙனம்

வே - முத்தனாசாரி.

கிரந்தகர்த்தா.

பழனிப்பதிலம்.

0-> 892 MMA2.2 N01
அ7092